உ

கடவுள்துணை.

சிவசுப்பிரமண்யர்மணப்புணர்ந்த

வள்ளியம்மைநாடகம்.

இஃது மதுரைஜில்லா

எட்டியாபுரம் சமஸ்தானவித்துவான்

கடிகை. முத்துசாமிப்புலவர் மாணாக்கராகிய

முத்துவீரக்கவிஞ ரவர்க ளியற்றியதை

ம-ா-ா-ஸ்ரீ சிறுமணலூர்

முனிசாமி முதலியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

எஸ். சுந்தரராஜகோனா ரவர்கள்

விருப்பத்தின்படி

ம-ா-ா-ஸ்ரீ பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியார்

அவர்களது.

சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது:

சென்னைபெரம்பூர் படவேட்டம்மன் கோவில்தெருவு

கூடு வது நெம்பர் வீடு.

1898.

உ

சிவமயம்

வள்ளியம்மை நாடகம்.

விநாயகர் துதி-வெண்பா.

திங்களணிசெஞ்சடையன் செல்வனெனவேயிலகுந்
துங்கவைங்கரன்றாளையே துதித்துப் பொங்கமுடன்
வள்ளியம்மைநாடகத்தை மானிலத்தியம்புதற்குக்
கள்ளமில்லாக்கணபதியின் காப்பு.

இதுவுமது விருத்தம்.

மதுரரசந்தமிழ்தழைத்து விளைந்தநாடு
வளம்பெருகழுகுமலை தன்னில்வாழும்
கதிர்பெருகுமந்த்ர சடாக்ஷரகுமாரன்
சண்முகவேள்மணந்தவள்ளி சரிதைதன்னை
விதிமுறைநூல்தெரிந்திசை நாடகமாய்ப்பாடி
மேதினியெலாந்துதித்து விளங்கவேண்டி
அதிகமதபொழுகுதந்திமுகத்தோன்றொந்தி
ஐங்கரவிநாயகன் பொன்னடிகாப்பாமே.

முருகர்-துதி-விருத்தம்.

சீருலவும்பங்கயப்பூ மாதுசேர்ந்து
செழித்தவளம்பொருந்திவளர் சிவசம்பாதி
தாருலவுஞானசிவ சுப்ரமண்யர்
தழுவுமணம்புணர்ந்த சவுந்தரவிலாச
வாருலவுகொங்கைமின்னாள் வள்ளியம்மை
மகிமைபெறுநாடகத்தை வளமாய்க்கூற
காவருவுங்கழுகுமலை தன்னில்வாழுங்
காங்கேயநிருபத்தைக் கருத்தில்வைப்பாம்.

சிவன்-உமையவள்-துதி-விருத்தம்.

ததிக்குதவும்புண்ணிய சகாயனெங்கள்
சம்பாதிகழுகுமலை தன்னில்வாழுங்
கதிக்கடவுள்குருபர சண்முகக்குமார
கந்தவேள்புணர்ந்தவள்ளிக் கனியைவெள்ளை
மதிக்குநிகர்முகம்விளங்கும் விழியாள்சுந்தர
வையகத்தோர்புகழ்ந்திட நாடகமாய்ப்பாடித்
துதிக்கமதிநதிமுடிக்குஞ் சடையோன்ஞான
கற்பூரசம்புவுமையர் பயந்துதிப்பாம்.

அவையடக்கம்-விருத்தம்-

கந்தமலர்த்தடஞ் சூழுஞ்சிவசம்பதி
  கடவுள்சம்புலிங்கர்மணங்கனிந்து மேவும்
கொந்துகிளிமொழிய கிலாண்டவடன்பாலன்
  குழக்கைகவடிவேலன் மணம்புணர்ந்தமாது
வஞ்சிகுறவள்ளிநாடகம் யான்பாட
  வையகத்திற்கற்றறிந்தோர் குரவோர்மூத்தோர்
மிஞ்சுதமிழ்ப்புலவரிதிற் பிழைகண்டாலும்
  வேலர்சரித்திரமென்றே விளம்புவீரே.

இதுவுமது

திருவளர்தாரணவருடமகரமாதஞ் சிறந்த வெள்ளிரோகணி நட்சந்திரத்தில், கருணைமுருகனைப்பணியுங் கந்தசாமி கவிஞன்புத்திரன் சம்பன்னன்மேன்மை, குருமுனிக்குநிகர்கடிகை முத்துசாமி குருவினுபதேசமுத்து வீரப்பேந்திரன், பருவமிகுவள்ளிநாடகத்தை நன்றுப்பாடினான் சோபனங்கள் கொண்டாடினனே.

விநாயகர்வருகிற பொதுவிருத்தம்

சொற்பொருட்குதவுஞான சுந்தரக்குமரன்மேவும்
அற்புதகனியாம்வள்ளியம்மை நாடகங்கொண்டாட
பொற்பதவரந்தான்கிறு பொருந்துமைங்கரத்தாலீய்வ
கற்பகமுகத்தானொருங்கிக் கணபதிதாளைநினைவோம்
விநாயகர்வருகின்ற தரு இம் புந்நாகவராளி ஆதிதாளம்.
  விநாயகர்தோன்றினாரே மந்தரவிநாயகர்தோன்றினாரே
  விநாயகர்தோன்றி சகாயமெனவாசன்
  நேயன்கணபதி மாயன்மருகனென்றும் விநாயக

ஐந்துமணிபுயத்தான்-விகசித-தொந்திபெருவயிற்றான்
கந்திபினாழ்முகத்தான் விக்கிரபூச்சந்திரமுஞ்சுகந்தாசன்
விந்தைவிகசித்தக்கரமிகுடஞ்சிக்க புளகிதமந்திரகிருபாகர-விநா

தேவர்பணிகம்வாட் கைலைமத்தா தேவாருநமேசட
பூவினிலுபதேசன் தமிழுக்கு நாவுக்கந்நுமேசன்
தேவியாம்வல்லபைமேவியவல்லவன் பூவுலகுதனிலுலாவியசெல்வ-விநாய

வெள்ளிமலையின்வேடர்உதவிய-வள்ளியின்கலைதபாட
தெள்ளியதமிழ்நாட-நமதுயதள்ளியிமேலங்கேதட
வெள்ளைக்கிரணமதி-பிள்ளைக்கிளைமருப்பு வெள்ளையராடிப்பிள்ளைக்கணபதி விநாய

குருக்கள்வருகிறபொது விருத்தம்.

காங்கேயன்கழுகுமலைக்கந்தவேளை
  கலந்தவள்ளித்தாயினி_ கதைக்குமேன்மை

யோங்கியமூலப்பொருளாய் வந்தென்னுவி
லுதவுகணபதியென நற்பிள்ளையார்க்கு
மாங்கனியும்பொரிகடலை மூந்தேங்காயும்
மாலையுஞ்சந்தன தூபதீபமுங்க
தாங்கிமெள்ளநடந்து மந்த்ரமேள்தந்சொல்லி
சரவணப்பட்டருஞ் சபையிற்றான்வந்தாரே.

குருக்கள்வருகிற-த-ரு இ-ம் மத்தியமாவதி ஆதிதாளம்.

சோதியாம்வெண்மை விபூதியும்பூசி சுகந்தபரிமளமுகந்துமேசா தியின்முறையாய் வேதங்களோதிஞ் சரவணப்பட்டருந்தோன்றினூர்

வாத்தியமுழங்க-நெய்வேத்தியங் கொண்டுமடித்த சோமனுமுடுத்தியே சாத்திரம்பொய்யாதோத்ரஞ் செய்யுஞ் சரவணப் பட்டருந் தோன்றினூர்.

மூஷிகவாகன மோதுகஅஸ்தனும் போதக்கணபதி நாதனுக்கே, காசினென்றே சிவபூசைகளசெய்யுஞ் சரவணப்பட்டருந்தோன்றினூர்.

குருக்கள்சொல்-ஸ்லோகம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும்சசிவர்ணம் சதுர்ப்புஜம் பிரசன்னவதனத்தியாயே சர்வவிக் நோபசாந்தயே.

விநாயகர்-அர்ச்சனாவசனம்.

ஓம் கஜமுகாயநமா-ஓம்-லம்போதராயநமா-ஓம் விகடாயநமா-ஓம் விக்னவிநாசகாயநமா-ஓம்கணாதிபதேநமா-ஓம்காமட்சித்தாயா நமா-ஓம் சாமளவர்ணாயநமா-ஓம் சங்குசக்கிராயநமா-ஓம் பிரணவசொரூபாயநமா ஓம் மூலாதாரபீடாயநமா ஓம் மூர்த்திசொரூபாயநமா ஓம் விபூதி நானாவிதகெந்தபரிமள புட்பதூபதீப நைவேத்தியந் தாம்பூலஞ்சமர்ப்பயாமி.

கட்டியக்காரன்வருகிற பொதுவிருத்தம்.

சட்டமிட்டாடித்தோகை தனைவிரித்திசையாய்கூவி
வட்டமிட்டுலாவும்புள்ளி மயில்மிசையேறுமுன்னைத்
தொட்டமிட்டசுரரைவென்ற குமரவேள்கதைக்குநன்றாய்
கட்டுமெட்டாகப்பாடி கட்டியக்காரன்வந்தான்.

கட்டியக்காரன்வருகிற தரு இ-ம் மோகனம் அடதாளம்.

மந்திரவெண்ணீரணிந்து வல்லபஞ்சொல்லத்துணிந்து
கந்தனைநாடிப்பணிந்து கட்டியக்காரனுந் தோன்றினான்
துலக்கமாய்சிங்காரப்பொட்டு சுந்தரவிஜாருந்தொட்டு
கலக்கமில்லாதமெட்டு கட்டியக்காரன் தோன்றினான்
ஓங்கியேமீசைமுறுக்கி ஓன்னலரைக்கண்டுறுக்கி
காங்குகச்சையிறுக்கி கட்டியக்காரன் தோன்றினான்
பழமைகதைகள்பேசிபழ குமந்திரவாள்வீசி
களபசவ்வாதுபூசிக் கட்டியக்காரன் தோன்றினான்

கட்டியக்காரன்சொல் பொதுவிருத்தம்.

விள்ளுபுகழ்கழுகுமலைதன்னில் வாழும் வேலர்சுப்பிரமண்ணிய குமாரன் கந்தன், புள்ளிமயிலேறியெழும்புவியைக் காக்கும்பூரணசெவ்வேள்முருகன் பொருந்துநாட்டில், வெள்ளிமலைச் சிற்றாருக்குடிசில் வாழும்வேடுவர்கள் குன்றக்குறவர்கோமான், வள்ளிலென்னப்பெயர் படைத்தநம்பிராசன் வளமைபெறுந்திருக்கொலுவில் வருகின்றானே.

வ.ம் அதேதெப்படியென்றால் இந்தப்படிக்கு கழுகாசலசுப்பிரமணியக்கடவுள் பொருந்தியிருக்கும் நாட்டில்வேள்விமலைசிற்றாரைச்சார்ந்த காட்டில்வேடர் வில்லியர் குறவர்களுக்கு இராசாதிராசனுகிய நம்பியமகாராசன் கொலுவுக்குவருகிற விதமெப்படியென்றால்.

நம்பிராசன் வருகிற தரு இ-ம் கியாஸ் ஆதிதாளம்.

சோதிவயிடூரியக்கோமதக மிலங்க
சொர்ணமணிமகுடமுடிமின்னிய துலக்க
தாதுலவும்மார்பில்முத்துத்தாவடங் குலுங்க
தாசாதிதாசன்போல்நம்பி ராசனும்வந்தானே

அம்புவில்லுந்தூணீரமுங் கொம்புகளும் மெத்து
ஆக்ரமதாகவெகுபராக்கமும் தொடுத்து
கும்புபெரும்வேடுவரைக்கூட்டிவலுங் கொடுந்து
குரிசில்நம்பிராசேந்திர விரைவுடன்வந்தானே

பளபளென்னச்சரிகையங்கிபட்டைக் கட்டும்
பதிந்தமுத்துக்கடுக்கனேடும்பரந்தபுய மெட்டும்
எளமுண்ணம்பொருந்துத்துகிர்கலவை மணிப்பட்டும்
காசினியோர்புகழ்நம்பி ராசனும்வந்தானே

ஒவியமுத்தொழுகியபற்காவியொளி தெரிய
உரமுறுஞ்சிங்கமிவனென்றுலகுமெங்கு மறிய
தாவுமயிலேறுசண்முகனுக் குரிய
தாசன்விசுவாசன்நம்பி ராசனும்வந்தானே

தங்கரிலைபங்கிநாட்டுதொங்கல்முரு கணிந்து
சந்தனஞ்சவ்வர்தனிர்துசிந்தூரமு மணிந்து
பங்கனாகல்பாலசைமறைநவேதியரைப் பணிந்து
வாசன்விசுவாசநம்பி ராசனும்வந்தானே

இராசன்சொல்-போற்றிவிருத்தம்.

வேதமாய்நாதவாய்ச்சோதி விண்ணிலானந்தமாகி
நாதமாயபிந்துமாகி நானிலந்துயிர்களாகி
பூதமுமைந்தாமாகி புல்லுமாய்பொறியுமாகி
நீதிநின்றவீசன் சேயனும்செவ்வேளைபோற்றி.

இதுவுமது-விருத்தம்

ககனவெண்டிசையோர்கூவுங் கட்டியக்காரர்களாய்
சுகமதிநிறத்தாள்வால சுந்தரியென்னுந்திவ்ய
முகவஜிகரத்தாள்நங்கை மோகினிப்பெண்ணுடனே
மகிமைசேர்கொலுமுன்பாக யகிழ்ந்தினியழைத்துவாராய்.

வ-ம் அகோவாரும் காவல்கட்டியக்காரர்நமதுசபைக்கு எனதுசுய பத்தினியாகிய நங்கைமோகினிப்பெண்ணை அதிசீக்கிரமாகயழைத்து வாரும்பிள்ளாய் (கட்டிய-வசனம்) அப்படியே அழைத்துவருகிறேனையாசுவாமி.

நல்லதென்றேயிக்கட்டியன் நளிர்மதிதவழுமாடத்
தல்லுறுங்குழலாள்நங்கை யறிவையைப்பணிந்துபோற்றி
எல்லையிலுமைவெங்கோ னுயர்கொலுக்கழைப்பனென்றன
மெல்லியவாருமென்ன விரைந்தவள்வருகின்றாளே.

வ-ம். சரணம் சரணமம்மாதாயே நமது இராஜாதிஇராஜனாகியநம்பியமகாராஜன் கொலுவிற்கு தங்களை அதிசீக்கிரமாக அழைத்துவரச் சொன்னார்வாருமம்மாதாயே (நங்கை-வசனம்) அல்லது அப்படியேவருகிறேன நடவும்பிள்ளாய்.

பொது-விருத்தம்-

கங்கைசூழ்வளஞ்சேர்வெள்ளிக்கைலைமாமலையிலுள்ள
சிங்கவேடுவர்கள்கோமான்சிறுகுடிநம்பிராஜன்
மங்களமனைவியானவஞ்சரஞ்சிதவிஸ்தார
நங்கைமோகினிப்பெணவந்துநலமுடனே தான்றினளே

நங்கைமோகினிவருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம

நங்கைமோகினியும்வந்தாள் கொலுநடுவில்
நங்கைமோகினியும்வந்தாள்
மங்களமொழிபேசி மாதுநன்விசுவாசி - நங்

பிச்சிசெண்பகஞ்சூடி நல்லமணம்
பெண்களுடனே கோடி
உச்சிதத்தமிழ்பாடி உத்தமிநலந்தேடி - நங்

குந்தளவோலையிலங்க முத்துமணிக்
கோர்வைத்தாவடங்குலுங்க முத்துமணிச்
அன்னம்போல்நடைவஞ்சி மங்கைக்
கரசிபோல்மொழிமிஞ்சி
கன்னிமாருடன்கொஞ்சிக் காமரதியும்வஞ்சி - நங்

கஸ்தூரிமஞ்சள் பூசி மணிக்கடக
கையில்வளைகள்வீசி
விஸ்தாரமாகப்பெசி விளக்குமகாராசி - நங்

நண்ணுவோர்க்குபகாரி சிறுதூர்நம்பி
ராஜன்மேவியபாரி
புண்யபூசிதக்காரி புத்திலதிகாரி - நங்

நங்கைமோகினிசொல்-விருத்தம்-

வேடர்குன்றவர்கோமானேவெள்ளியங்கிரிவாழ்வேந்தே
ஆடவர்க்கரசேஎன்மேலருமைகாதலனேகேளீர்
கூடியும்நமக்கேயோர்குழந்தையில்லாதபாக்யந்
தேடியும்பலனொன்றில்லைசெய்தவக்குறையோமன்னா

வ-ம். சரணஞ்சரணமென்பிராணநாதா தாங்கள் என்னைக்கொலுவிற்குவரும்படிசெய்தகாரணமென்ன நல்லது இப்போது நமதுகுறைதீரும்பொருட்டு ஒருபெண்குழந்தையில்லாதபாக்கியமொருபாக்கியமோ என்னசெய்வோம் பிராணநாதா.

நங்கைமோகினிபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-தாளம்-துருவம்

விண்ணுபுகழ்நாட்டிளோரேஎன்னைமேவுகின்ற வேடவரே
வெள்ளிவரைதன்னவரேஎன்னைமேவுகின்ற மன்னவரே

எப்படிவாழ்ந்தும்பெண்பிள்ளைநமக்கில்லைபோறதென்னக் கொல்லை
கைப்பிடித்தவேளைதானேபெண்கண்மணியில்லா தேனே

வேலவனன்னாட்டிற்சேர்ந்தும்நான்வெள்ளியங்கிரியில் வாழ்ந்தும்
பாலனுமில்லாதிருக்கஐயோபண்ணிவிதிப்படி தானே

சத்தகன்னிமாரேதாயேமலைக்காத்தவேதம் பிரானே
புத்திரியைவேண்டிநாங்கள் இப்போபுலம்புவதுங்கேட் கொணாதோ

வல்லமைதெய்வமேகேளீர்நல்லவனப்பேச்சி பத்ரகாளி
இல்லிலொருபெண்குழந்தைஇப்போதெங்களுக்கரு ளொணாதோ

வையகத்துமிருகங்களைநாங்கள்வாய்க்கட்டினதோஷந் தானே
கையணைத்துமுத்தமிடப்பெண்கண்மணியில்லா தேனே

தென்குறிஞ்சிவேலவனேவளர்திருவருணைக் காவலனே
அன்புடனேர்பெண்குழந்தைஎனக்கருளையாயரு ளொணாதோ

பொதுசந்நவிருத்தம்.

சித்ரநங்கைமோகினிப்பெண்சிந்தைகூர்ந்து
தெளிந்துநம்பிராசனேடுமொழிந்தேபோர்பெண்
புதரியில்லையினிநாடுமென்செய்வோமென்று
புலம்புவதைமனதில்நன்றாய்பொருந்தக்கேட்டு
மெத்தமணமகிழ்ந்துநர்மம்தெய்வமாக
விசையவெள்ளிமலைபினாட்டுதிசையைக்காக்குஞ்
சத்தகன்னிமார்கணங்கைதுயரந்நீக்கத்
தாயனவேதயவாகத்தாமவந்தாரே.

வ-ம். இந்தப்பிரகாரம் நமதராசனிடத்தில் நங்கைமோகினிப்பெண்குழந்தையில்லையென்று புலம்பும்போது அவ்விடம் வெள்ளிமலையில்வாசஞ்செய்புஞ் சத்தகன்னிகள் வருகிறவிதங்காண்க.

சத்தகன்னிகள் வருகிற-தரு-இ-ம-புன்னாகவராளி-ஆ-ம்

கைலைமலையிற்பூங் காவிலெழுந்து
 கருணைபொழியுந்தெய்வ கன்னியர்மனத்
தயவுபொருந்துந்தெய்வ மின்னார்கள்மலை
 சத்தகன்னியர்வந்துதோன் றினரே
நங்கைமோகினிப்பெண் குழந்தையைவேண்டி.
 நம்பிராசனுடன் புலம்பியப்போது
சங்கைபொருந்துந்தெய்வ மங்கையரெனுமாலை
 சத்தகன்னியர்வந்துதோன் றினரே

சத்தகன்னியர்-விருத்தம்.

சேர்ந்தகன்னிமார்கள்வந்துசேர்வைகாட்டி
 சிந்நங்கைமோகினியைப்பார்த்துச்சொல்வார்
கூர்ந்துநம்மைகுறித்துமனம்வருந்தியேபெண்
 குழந்தையில்லையென்றுசொன்னகுறையைக்கேட்டு
சார்ந்துனதுயிருப்பிடத்தைத்தேடிவந்தோம்
 சலியாதேமெலியாதேசாற்றக்கேளு
போந்துனக்குயீசர்தன்கற்பனையினாலே
 புனத்திலொருபெணகுழந்தையிருக்குந்தானே.

இதுவுமது.

தானேநின்வயிற்றினிற்பெண்கருவேயில்லை
 சலியாதேஅதிவிதிப்படியாலிருந்த
கானுறுவனத்திலிந்நாளிலேமூற்
 காரணத்தால்நடந்தசேதிகாட்டும்புள்ளி
மானேயோர்பெண்குழந்தைமணிப்பொற்போற்று
 வளரவுன்கையாலெடுத்துவளர்ப்பாயென்றே
ஆனதெய்வமங்கையர்களுரைத்துப்போக
 அமிர்தநங்கையகமகிழ்ந்தங்கிருக்கின்றாளே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தேவகன்னிகள் நங்கைமோகினிக்குப் பெண்குழந்தைவரும்விதத்தைச்சொல்லி வெள்ளிபங்கிரியில் சென்றபின் அவ்விடம்வனத்தில் கலைக்கோட்டுமகாமுனி வருகிறவிதங்காண்க.

கலைக்கோட்டுமகாமுனிவருகிற-விருத்தம்.

தேகமெல்பாந்தவள்வெண்ணீறுபூசிக்காதில்
 திருக்குழைகட்பூண்டுசடைமுடியுங்கொண்டு
வாருபெருங்காவிவஸ்திரமருங்கிற்சேர்ந்து
 மந்திரத்தாற்கட்டிமவொட்டியாணப்பூண்டு
ஆகமுறைநகற்பமுறையதுதானுண்டு

ஆதிகமறைநான்குமுணர்ந்தருள்சேர்ஞான
யோககலைக்கோட்டுமுனிபிரம்மைபக்கையி
லான்றினான்றிருக்காவிற்றோன்றினனே.

கலைக்கோட்டுமகாமுனிவருகிற-தரு-இ-ம்-மாஞ்சி-ஏ-ட.

கலைக்கோட்டுமுனிவர்வந்தார்-தெண்டகாரண்ய
கலைக்கோட்டுமுனிவர்வந்தார்
முலைக்கோட்டுமடந்தையர்மோகவலையிற்சிக்கி
தலைக்காட்டிலிருந்துமலைக்காட்டுவனந்தனில்
மார்பில்ருத்ராட்சங்குலுங்க-கையிற்செப
மணித்தாவடமுந் துலங்க
பேர்பெறும்புலித்தோலும்பிடித்தமாத்திரைக்கோலும்
சீர்பெறும்பூநூலுஞ்சேர்ந்தநிர்ணயத்தாலும் கலை
உச்சியிற்றிருக்கொம்பும் கலைமுகமும்
வச்சிரமான்றேகமானிடரூபமாகவும்
இச்சையுடனேகாவிலிருந்துதவங்கள்செய்யுங் கலை

விருத்தம்.

தேனிரைக்கும்வெள்ளிமலைவஞ்சிகாட்டி
செழித்தவெழில்மலைகுறிஞ்சிநிலத்திலேதான்
கானகத்திலிருந்துகதிபுசித்துலாவிக்
கதிபெறுகாஷாயதவவேடங்கொண்டு
மோனமுற்றகலைக்கோட்டுமுனிவரங்கு
முற்கதையின்படியாலே முறையாய்வேத
ஞானநிட்டைகளைநோக்கியிருந்திடாது
நண்ணினார்மோகமதையெண்ணினாரே.

பொது-விருத்தம்.

நின்னயமுனிவரிங்கு நிலைதவிர்ந்துருகிவாடி
கன்னியராசாபாசங் கருத்திலிருக்கும்போது
தன்னிளஞ்சோலைதன்னிற் றனியொருபுள்ளிமானும்
நன்னயகலையைத்தேடி நாடியும்வந்ததன்றே

வ-ம். இந்தப்பிரகாரம் வெள்ளிமலைச் சாரலில் ஒரு நந்தவனத்திற் தவஞ்செய்யவந்த கலைக்கோட்டு மகாமுனிவர் காமவிகாரங் கொண்டிருக்கும்போது அவ்விடமொரு புள்ளிமான் கலைமானைத்தேடி வருகிற விதங்காண்க.

மான்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

மானும்வந்ததே-புள்ளிமானும்வந்ததே.
கான்மிகுந்தபூமலிந்த-காவனத்தனிற்சிறந்தமானும்
மெய்யுறவாடி மேவியேகூடி கைவிடாதோடிக் கலைதனைத்தேடி மானு
வனந்தனைமேவி வாவியுலாவி கனிந்துசொற்றேவி கலைதனைக்காவி
பொன்னிறமானின் புகழ்தருமேனி உன்னியவானி லுயர்வுறக்கானில்

விருத்தம்

விளைவுறுஞ்செந்நெலடர்துமலரேபூர்த்து

விரைமிகுந்தவெள்ளிமலைக்கருகேநின்று
குளிர்ந்தரசக்கனிபுசித்து மயல்பூரித்துக்
கொண்டுகலைக்கோட்டு முனிகண்டுமானைத்
தழுவரிஷிகெற்பமிராத் தங்காதென்றே
தகைமையினாலே கெற்பந்தாங்கிமானும்
பிழையகற்றும்வேதவிதிப் படியாலங்கோர்
பெண்குழந்தை யீந்திடவும்பெயருண்டாச்சே.

பொது விருத்தம்.

சீருண்டமகளையீன்று மானும்
திரும்பவும்பாராமல்வனமோடிப்போக
பாருண்டாகிய பூமாதேவித்தாங்கிப்
பழுதறப்பிள்ளையைப் பாதுகாக்கும்போது
காருண்டாமவெள்ளி மலைக்குறவர்கூடி
கானில்வள்ளிக்கிழங்குவெட்டக் கதித்தெல்லோரும்
நேருண்டாமிந்த வனந்தன்னைத்தேடி
நிரைநிரையாய்க் குறத்திகுறவர்கள்வந்தாரே.

வ ம் அகோதெப்படி யென்றால் கானகத்தில்வந்தபுள்ளிமானைக்கலைக்கோட்டு மகாமுனிவர் காமவிகாரத்தால் சேர்ந்து சென்றபின்பு அந்த மான்வயிற்றிலுதித்தப் பெண்குழந்தை அவ்விட மிருக்கும்போது அங்கே வெள்ளிமலைக்குறவர் குறத்திகள் வள்ளிக்கிழங்குவெட்டிவருகிறவிதங்காண்க.

குறத்திகள்-குறவர்வருகிற கண்ணிகள்-இ-ம் குறவஞ்சி ஆ ம்

குறத்திகள்குன்றவர் கானக்குறவர்களுங்கூடி மனங்
கூர்ந்துபலகிழங்கு வெட்டச்சேர்ந்துவனந்தேடி
உறவுசொல்லிக்கூடிக்கூடி யொருவர்க்கொருவர்பேசி துடர்ந்
தோடியோடிக்கூடையுங் கொண்டுசந்துகளைவீசி
குப்பல்குப்பலாய்கிழங்கிருக்கிற குச்சியிலேகிள்ளு நமது
குத்துக்கம்புக்குநீங்கிவிடாததை விட்டுவிட்டங்கேதள்ளு
அப்பாலோடிகிழங்குசெல்லுவோ மதிசீக்கிரமாய்வாரும் பைய
ஆடியோடிச்சனனை பேசிக்கூடியேவந்துசேரும்
சிறுவிளங்கும்பிடிகிளங்குஞ் சீனிக்கிளங்கெடுத்து வேடர்
சேகரித்தாரவரவர்கள் கூடைகளினில்விடுத்து
வரிசையோடுபலகிளங்கு வாய்த்துதென்றுகொண்டார்கொண்டு
வரும்போதுவனந்தனிலே மதலைதனைக்கண்டார்
அதிசயமாய்வனத்திற் பிள்ளையழுங்குரலுமேது அங்கே
அடுத்தடுத்துவாருங்கள் நாமறியலாமிப்போது
ஏதுவகையோவனத்திற் பிள்ளையீன்றதும்யாரோ இப்போ
இக்குழந்தையையெறிந்து விட்டெங்கேகினதெவ்வாறோ
சிறும்புலியானைசூழச் செடிகளடருவனத்து ளொரு
சிறுகுழந்தைபழுதழுத் தியக்குதையோதனித்து
கூறுமணியோசைபோலுங் குரலைப்பாருஞ்சகைக்காள் இரு

குழந்தையினிடவழிவு தன்னைக்கூர்ந்துபாருமினங்காள்
என்னகாரணமோ விதியாதோதெரியாதே இப்போ
இந்தவனத்திற் குழந்தைவந்ததுவுஞ்சூதே
மின்னுதையோகுழந்தையிந்த வேனில்பொறுக்காமல் பின்னும்
வீரிட்டுவீரிட்டழுது தேகுட்டுப்பாராமல்
நாமறிந்தவதிசயத்தை நம்பிராசனிடத்தில் இப்போ
நலமுடனெல்லோருங்கூடிச் சொல்லுவோமிட்சணத்தில்
தாமதமில்லாதெல்லோருந் தலைச்சுமையையெடுங்கள் நல்ல
தருமவானும்நம்பிராசன் முன்னமேவந்திடுங்கள்.

குறவர்சொல் விருத்தம்.

நாட்டியப்புகழ்சேர்நம்பி ராசனேமிருகஞ்சூழ்ந்த
காட்டிலோரதிகமான காரணங்கண்டுவந்தோம்
கேட்டிடவேண்டும்வள்ளிக் கொடியிற்பெண்குழந்தையொன்று
தேட்டமாய்க்கூவுதையா தெரிந்திடப்பார்க்கவாரும்.

வ-ம். அகோவாரும் இராஜாதிராசனாகிய நம்பிமகாராசனே சரணஞ்சரண மிப்போது வனத்திற் கிழங்கெடுக்கப் போனவிடத்தில் வள்ளிக்கிழங்கெடுத்தபள்ளத்தில் சூரியன்போல ஒருபெண்பிள்ளையழுதுகொண்டிருக்குதது அந்தவதிசயத்தைத் தாங்கள்வந்து பார்க்கலா மகாராசனே.

பொது விருத்தம்.

புதுமைகாணவர்கள்காணிற் போய்வந்துசொல்லக்கேட்டு
அதிசயம்பார்ப்பேமென்று அன்புடன்நம்பிராசன்
ரதியெனுமொழியிலொய்யார நங்கைமோகினியுங்கூட
மதிமிகர்குழந்தைகூவும் வழிதனைத்தேடிவாரார்

வ-ம். இந்தப்பிரகாரம் குறவர் சொல்லக்கேட்டு நம்பியமகாராசனும்நங்கைமோகினியும் வனத்தில்வருகிறவிதமெப்படியென்றால்.

இராசன் வனம்போகும் நொண்டிசிந்து.

இ-ம் புன்னாகவராளி-அடதாளம்.

வந்தார்வனந்தேடி நம்பி
ராசனுந்தான்நங்கைமோகினியாம்
மடந்தையுடன்கூடி வாசன்
மல்லிகைமுல்லைமலர்சூடி
குழந்தையிருக்குமிடந் தன்னைக்
கூறென்றுகுறவர்கூட்டமுடன்
தெளிந்துநலம்பேசி நல்வி
ஷேசமதாயிருகைவீசி
அந்தநலம்பார்த்து வெகு
இக்கரையாகநடக்கையிலே
விந்தைமணிபோல பிள்ளை
வீரிட்டசத்தமும்கேட்டதே
வள்ளிக்கொடியிற்பெற்ற பெண்

மதலைக்குரலினைக்காதிலுற்றார்
உள்ளமகிழ்ந்துகொண்டார் ஆங்கே
உற்றகுழந்தையைவந்துகண்டார்.

இராசன்சொல் விருத்தம்.

வந்தநம்பிராசேந்திரன் வனத்திலுற்ற
மதலைதனைக்கண்டுமன மகிட்சிகூர்ந்து
கந்தமலர்குழலாளே நங்கைமாதே
கந்திகையேமின்னரசே கடவுட்செய்கை
எந்தவகையோவோர் பெண்குழந்தைதானும்
இசைந்தமணிகுரல் கூவுதிந்தபாரு
சந்ததியுநமக்கெனவே குனிந்தெடுத்துத்
தாங்கினான் தன்கையில் வாங்கினானே.

நங்கைமோகினிச்சொல் அகவற்பா-இ-ம் மோகனம்

மன்னனேகேளாய் மாய்வனந்தன்னில்
முன்னமேயாமு முயற்சியதாக
குறித்துமேயோர்பெண் குழந்தையைவேண்டி
வருத்தமாய்ச்சிவனருள் வடிவேலரையும்
கவனத்தந்த கன்னிமார்தன்னையுந்
தாவியேவருந்தி தாளினைப்பணிந்து
பேருடனேழாண் பிள்ளைகளிருக்க
கூறியதுணைப்பெண் குழந்தைதந்திடுவாய்
என்னநான்புலம்ப வென்மொழிகேட்டு
தன்னிலேநமக்காய்ச் சத்தகன்னியர்கள்
வந்துதானன்று வருமையைத்தீர்த்து
இந்தமாவனத்திலீஸ்வரன்செயலால்
மான்வயிற்றினிற்பெண் மதலையுண்டாக
பான்மையாகநீங்கள் பரிவுடன்காண்பீர்
எடுத்ததைவளப்பீ ரெனக்கன்னிமார்கள்
கொடுத்திடும்வரத்தைக் கொண்டாலிப்போ
பேணியேநமக்குப் பிரமகற்பனையாம்
வாணிபம்பலித்த வள்ளியின்கொடியில்
காரணமாகக்கண்மணிக்குழந்தையைப்
பூரணமாகவே பொருந்தவேகண்டோம்
ஆனதால்நமக்கு அரனருட்குழந்தை
தானிஜமென்று தழுவியேயெடுத்தார்.

பொது விருத்தம்.

அங்கம்பூரித்தவ னானந்தங்கொண்டு
அரகராசிவசிவாவென் றன்புகூர்ந்து
மங்களஞ்சேர்வேள்வி மலைநம்பிராசன்
வனத்திலிப்படிகுழந்தைவாய்த்ததாலே
எங்களுக்கினிகரொருவரில்லையென்று

இலங்குமணிபோலிருக்குங் குழந்தைதன்னைத்
தங்கமென்றமனங்குளிர்ந்து தனதுமடியில்
தாங்கினைதிகசெல்வமோங்கினளே.
குழந்தைதனையேந்தி முத்தங்கொடுத்துக்கொஞ்சி
கொங்கையமுதூட்டி யெங்கள்குலமும்வாழ்க
தழைந்துவினம்நிமதலைக் கினியமானே
தங்கமேதிரவியமே கருவேதேனே
வழங்குகிளைக்குறவர்குலக் கொழுந்தேகோல
மயிலேயெஃறழைத்தந்தமானும்கோமானுஞ்
செழித்துவழிகூடி வெள்ளிமலைசூழ்கின்ற
சிற்றூரில்வந்துநன்றாய்ச்செழிக்கின்றாரே.

வ-ம். அகோதெப்படியென்றால் இந்தபடிக்கு நம்பிராசனும்ந ங்கைமோகினியும் வனத்திற்போய் வள்ளிக்கொடியிலிருந்த பெண்குழந்தையைக்கண்டு எடுத்து தங்கள்சிற்றூருக்கு வந்துசேர்ந்து குழந்தையைவளர்க்கிறவிதங்காண்க.

இதுவுமது விருத்தம்.

பவளமதியிதழ்வதனக் கிளிபோற்பேசும்
பந்துமுலைவஞ்சியிடை நங்கைமாதும்
நவமணியின்கிரீடநம்பி ராசன்றானும்
நன்மையொடுமனதிலெண்ணி மகிழ்ந்தநாளின்
தவமுயலுந்தானதர்மம்நன்றாய்ச்செய்து
சார்ந்தவள்ளிக்கொடியதனிற் சமைத்ததாலே
குவிமுலையாடனக்குவள்ளி யெனப்பேரிட்டுக்
கூட்டுவார்தொட்டிலிற்றாலாட்டுவாரே.

நங்கைமோகினிகுழந்தைக்கு தாலாட்டுதல்
கண்ணிகள் இம் நீலாம்புரி

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ

மானின்றகண்மணியே வஞ்சியேதங்கப்பணியே
தேனேதிரவியமே தெள்ளமுதேயோவியமே ஆரி
வள்ளிக்கொடிநடுவேவந்துதித்தபெண்வடிவே
விள்ளும்பசுங்கிளியே விளைத்தசெந்தேன்மொழியே ஆரி
சோதிவைடூரியமே சொர்ணக்களஞ்சியமே
மாதேவனக்குயிலே மரகதமேபூமியிலே ஆரி
வேழ்விமலைக்கரசேமின்னே யென்கண்மணியே
தாழ்விலாப்பாக்கியமே சந்தனசிலாக்கியமே ஆரி
வரிசையாயெங்களுக்கு வாய்த்தமணிவிளக்கே
இருநிலம்புகழ்ந்த கண்ணேமனதிற்குகந்தபெண்ணே ஆரி
காவனத்திலேசிறந்துகற்பனையாயற்பனமாய்
தாவவுமேவந்தபெண்ணேதாவெனக்குகந்தபெண்ணே ஆரி

கந்தவேள்கிருபையினால்கன்னிமார்தன்னருளால்
வந்தருளுநம்கனியேமகளேநீகண்வளராய் ஆரி

பொது-விருத்தம்.

தாலாட்டிமதலைதனைநாளோர்வண்ணந்
தான்வளர்த்துசந்தனசவ்வாதுவாசம்
நீராட்டிமைவிழிகருமையுந்தீட்டி
நேரிசைவெண்சங்குமணிக்கோர்வையூட்டி
பாராட்டிவிளையாட்டுக்கூர்மைகாட்டி
பழகுமொழியதில்நடைப்பாகல்காட்டி
சீராட்டிக்காதுகுத்திப்பஞ்சுஞ்சேர்த்து
சேலையிட்டுத்தக்கையிடச்செய்கிறாரே

இதுவமது-விருத்தம்.

தக்கையிட்டுத்தளர்விளக்கெண்ணெயிட்டு
தங்கநிறமிசக்துவள்ளைத்தண்டுபோல
அக்கரையாய்க்காதுவளர்த்தன்புகூர்ந்து
அருமையொடுமணிமகரக்குழையும்பூட்டி
மைக்குழலேயெங்கள்வள்ளித்தாயேவேலர்
மலரடியைமறவாதமங்கைப்பெண்ணே
கைக்கிளியேஎன்றுசகலருங்கொண்டாடிக்
கண்டிடக்கண்டிடவடிவங்காட்டினாளே

பொதுகண்ணிகள்-இ-ம்-மத்தியமாவதி-ஆ-ம்.

வள்ளியெனுஞ்சிறியபிள்ளைசிறந்து நாலாம்
வயதில்வளர்ந்துதிரிந்த
பிள்ளைக்கிளிபோர்பேச்சுமெள்ளயிருகை வீச்சும்
பெண்ணின்பலம்பொருந்த
சந்திரமுகமுஞ்சிறுதனமுங்குறு நங்கையுஞ்
சாந்துகளபமணமும்
கந்தமலர்க்குழலுங்கழல்விழியி னழகுங்
கனியுமமிர்தருணமும்
வஞ்சியிடையுங்கன்னிவாழைத்துடை யுங்கோல்
வத்சனச்சரிகைத்துயிலும்
பஞ்சுபோல்மெல்லடியும்பாதச்செந்தா மரையும்
பாடகந்தண்டைவொயிலும்
அருவையினதுதேகஞ் சூரியப்ரகாசம் போல்
அழகுந்துலங்கமீறி
பருவம்வரதெட்டாகி யுருவந்துலங்க மங்கை
மின்னார்களுடன்கூடவள்ளியும்பாங்கி
வீதியில்விளையாட
தென்னன்மகளோதெய்வகந்நியோயிந் திரையோ
செல்வியென்றுரையாட
இப்புவிதனிலிந்தவடிவழகினைப் போல

எங்கெங்கிடையாதென்பார்
ஒப்பினைவள்ளிவிணட செப்புமொழியுட் கொண்டு
ஒழுங்கிவணங்குவிரென்பார்
இந்தபடியெல்லோரும் பந்துபசாரஞ் சொல்ல
ஏந்திழைவள்ளிமகிழ்ந்தாள்
தந்தைநம்பிராசனும் நங்கைமோகினிப் பெண்ணுந்
தங்களில்மெத்தப்புகழ்ந்தார்.

இதுவுமது விருத்தம்.

அருமையுடன்தாய்தகப்பன் புகழ்ந்துவாழ்ந்து
அண்ணமார்மனமகிழ்ந்தேயன்பாய்க்கூற
உரிமையாய்ப்பின்னுமங்குள்ளோரும்வாழ்த்த
உத்தமரெவரும்போற்றவுறவொறேத்த
இருநிலமும்புகழுமித்ராணியைப்போல்வள்ளி
யிசைந்தசெர்ணக்கிளிபோலுமயிலைப்போலும்
பருவமுறும்பக்குவமாயமைந்தமாது
பாங்கிமாருடன் கூடியிருக்கின்றாளே.

இதுவுமது வேறு

இருக்குநாளையிலேவள்ளிக் கியற்றுணையண்ணமாரும்
பெருகியகுறவரோடு பேசுமோரிடத்திற்கூடி
மருவுலாவியபூஞ்சோலை வனத்தினிற்றினைவிரைக்க
உருக்கமாய்நினைந்தெல்லோரு முவமையாயிருக்கின்றாரே.

விருத்தம்.

விளங்கியகுறவரென்னும் வேடர்குறைவர்கள்கூடி
தளைந்திடவகைப்புனத்திற்றகுந் தினைவிரைக்கவேண்டி
கிளங்கொடுதினைமாக்கொண்டு கிருபைசெய்வடிவேலர்க்கு
வியங்கியதிசையைநோக்கிவந்துபூசைகள்செயதாரே.

இதுவுமது விருத்தம.

பூசைகள்செய்துவேண்டிப் புனக்குறவர்களுங்கூடி
வாசமாய்வனத்திற்சென்று வலிமைநல்லினத்தைக்கண்டு
விசிமன்வெட்டிக்கொண்டு வெட்டிமுப்புழுதிசெய்து
பேசியேநல்லநாளிற்பெருந்தினை விரைக்கின்றாரே.

சந்த விருத்தம்.

பழுதுபார்த்துத்தினைவிரைப்பொட்டியைத்
தழுவிக்கையாலெடுத்துத் தெய்வங்களைத்
தொழுதுநல்ல முதற்றரவைப்புன்கையிற்
குறவர்கூடித்தினைவிரைப்பார்களே.

குறவர்தினைவிரைக்குங்கண்ணிகள் இம் ஆனந்தபைரவிரூபகதாளம்.
வரைக்குட்செந்தினை விரைககந்தனை வாழ்த்தியேதொழு
துபர்தள்ளிவன்மையால் நல்லதினத்தினில்வெள்ளி
விரைக்கவேவிரையளந்திடப்புட்டி நிரைக்கவேமனங்குளிர்ந்திடவி

புதருபோற்றியேவிரைக்கடகந்தலேபி லேற்றியே(யன
மசுக குடம்வனத்தில்மிஞ்சியேகுறக்குறக்கமுடைய புஞ்சைமே
சொர்னம்விளையுங்கன்னிமூலையில்வனையவிரை தன்னேயே
கரத்தினுலவள்ளிநிலத்திற்றாவிவிரைத்தனர்தெய்வ வரத்தில்
கன்னிமார்தன்கிருபையாலமுளைத்துன்னியெழுந்து வளர்ந்ததே

பொது-விருத்தம்.

வனதெய்வகன்னிமார்கள் வரந்தருங்கிருபையாலுன்
தினமழைபொழியக்கண்டு தினமஞ்சள்முளையுங்கொண்டு
இனிமைசேர்பயிர்வளர்ந்து செழித்திடும்வளத்தைப்பார்த்து
மனகதியோடும்பன்றி மான்மரைசூழ்ந்ததன்றே.

வ-ம். இந்தப்பிரகாரம் வேடர்குறவர்கள் தினைவிரைத்து பயிர்க ளாகியவுடன் அந்தப்பயிரை யழிக்கும்படிக்கு பலமிருகம் வருகிறவி தமெப்படியென்றால்.

மிருகங்கள்வருகிற-தரு-இ-ம-கல்யாணி-ஆதிதாளம்.

மிருகம்அனேகம்வந்ததே தினைப்புனத்தில்
மிருகமனேகம்வந்ததே
பெரியோர்கள்சூழ்வனத்தில் வரிசைத்தினைப்புனத்தில்
பருவைப்பயிரிருந்த சொரூபங்கொண்டுசென்ந்து மிரு
இடசாரிவலசாரியாகப்பாய்ந்து சீறி
இடிபோல்முழக்கிப் பாரிற்கடிவாய்புலிகள்மீறி மிரு
பத்துசுரங்காடி புலிவாய்மிகப்பெருகி
தத்தித்தத்திக்குதித்து தனிலாவதுமுறுக்கி மிரு
வெடிலாவதுமுறுக்கி வெகுவாயினம்பெருக்கி
படிமேற்கற்றிநெருக்கி பயிரைத்தின்றுசெருக்கி மிரு

இதுவுமது விருத்தம்.

மீறியேவனத்தில்வாளிமிருகங்களனேகஞ்சூழ்ந்து
சீறியேமுழங்கும்போது தெரிந்துவேடுவர்கள்கூடிக்
கூறியேவேட்டைக்கொம்பு குறித்தமர்வில்லம்மேந்தி
பேரிகைமுழங்கவேட்டை பெருக்கமாயாடுவாரே.

குறவர்-வேட்டையாடுகிற-தரு-இ-ம-அடாணு-அடதாளம்.

வேட்டையாடினரே குறவர்கூடி
வேட்டையாடினரே
கோட்டில்வளைதடிகளீட்டி யெடுத்துக்கும்பு
கூட்டியெழுந்துவெகு காட்டைவளைந்துசுற்றி வேட்டை
மேச்சற்கலேபிடிக்கசூட் சவலேயெடுத்துப்
பாச்சல்புலியைவெட்டும் வீச்சரிவாளுங்கொட்டு வேட்டை
அம்புவில்லெடுத்துக் கும்புகும்பாகக்கூடி
அனைவரும்வந்து வெகுசமர்த்துகள்பேசியே வேட்டை
கட்டைகைகலேத்துவிட்டு வேட்டைமிருகங்களை
யீட்டியாலேவிழத்தாட்டி வெற்றியாகவே வேட்டை

சூழுந்தினைப்பயிரைச் சிதறியுழப்பவந்த
பாரமிருகங்களைக் கூறுபடவேகுத்தி வேட்டை

விருத்தம்.

வேட்டைகளாடிவந்து வெற்றிபாயிருக்குநாளில்
வாட்டமில்லாமலோங்கி வளர்தினைப்பொதியாய்க்கொண்டு
கூட்டிபேகதிர்கள்வாங்கிக் குலைகள்ளியன்னங்கோதி
காட்டமாய்மணிபிடித்து நலமுறவிளையுண்டாச்சே

இதுவுமது

மணிபிடிவிளைவுகண்டு மகிழ்ந்தண்ணமார்கள்சென்று
இணக்கமாய்நம்பிராச னிடத்தினில்வந்துபோற்றி
குணக்கொடிதினைபுனத்தை குடிகொடாதுகாவலாகப்
பணித்திடுவள்ளியென்றோர் நடனைப்பகர்கின்றாரே.

வ-ம். இப்படிமிருகங்களைவேட்டையாடி வந்தபிறகுதினைப்பயிர்களுக்கு பட்சிவராமல் வள்ளியம்மனை தினைகாக்கும்படி யழைப்போவண்ணமார் தகப்பனுகிய நம்பிராசனுக்குசொல்லுகிறவிதங்காண்க

அண்ணமார்-விருத்தம்.

பூங்குயில்மணிப்புறவும் புளகிதமயில்களன்னந்
தேங்குர் தாங்குணங்காஞ்சரந் தூய்தினைக்கதிர்கள்கொய்ய
ஓங்கியேவரவொட்டாமலுரிமையாய்க்காவலாக
மாங்குயிலனைய நங்கை வள்ளியையனுப்புமென்றே.

வ-ம். அப்பாவாருமெங்கள் தந்தையாகிய நம்பிமகாராசனேசரணஞ்சரணமிப்போது நாம்விதைத்த தினைப்புனத்தில் பட்சிமிருகசாதிகள்வந்து அழிக்காமல்காவலிருக்க எங்கள்தங்கையாகிய வள்ளியம்மையை தினைப்புனக்காவல் காக்கச்செய்யவேண்டுமெங்கள் தந்தையே.

அரசனுக்கும்-நங்கைபுத்திரர்களுக்கும்-தர்க்கம்-தரு

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

புனத்தினில்வள்ளியைக்கதிர்காவெனற மைந்தரே-சும்மா
போவென்றுசொல்லவும் பொருந்துமோவென்மனசு மைந்தரே

புத்திரர்சொல்-தரு

மனத்தொடுதினைப்புனம்வள்ளிகாக்கிலேயென்றால் தந்தைதாயே-நாம்
வருத்தப்பட்டதுஞ்சும்மாவிருதாவாய்ப் போகாதோதந்தைதாயே

இராசன்நங்கைசொல்-தரு

கண்மணியாகியபெண்மணிவள்ளியைத்தாய் மைந்தரே-தினைக்
காக்கப்போகச்சொன்னாலேற்குமோவுலகுக்கு மைந்தரே

புத்திரர்சொல்-தரு

தன்மையாய்தினைக்கதிர்தங்கைகாக்கிலேயென்றால் தந்தைதாயே-நாம்
சதிராய்வதனைப்பட்டகதிரைக்கிளிகொய்யாதோ தந்தைதாயே

இராசன்நங்கைசொல்-தரு

கைவிட்டுப்பிரியாதகண்மணிவள்ளியை மைந்தரே-தினைக்
காவலுக்ககலவிடாய்ப்போவென்றுசொல்வீரோ மைந்தரே

புத்திரர்சொல்-தரு

கட்டிவிட்டவிழிக்குறவள்ளிகாக்கிலேயென்றுஞ் தங்கத்தாயே-உங்கள்
மக்களேழுபேருக்கும்அக்கரைதானென்ன தங்கத்தாயே

இராசன்நங்கைவள்ளிக்குச்சொல்-மேற்றரு

கைக்கிளியேயெங்கள்கண்மணியேவள்ளித்தாயே தினைக்
காவல்காக்கவு நீமேசம்மதிப்பாய் தாயே
கைக்குழலேயெந்தன்பொற்கொடியேவள்ளிமானே அண்ண
அவர்களுரைத்திடுங்காரியங்கேளடி மானே
அண்ணமார்வர்திக்குச்சொன்னசொற்றவறுமற்றுமே காட்டில்
அருந்தினைப்புனத்திற்குவருந்தாமல்போவள்ளி மானே
எண்ணரியசொன்னேனென்றிருதயம்வையாமல்நீயே
அன்னமேதோழியர்தன்னுடனேபோய்வரு வாயே

இராசனுமங்கைசொல்-விருத்தம்.

மாங்குயின்மொழியேதேனே வள்ளியேமகளேமானே
பாங்கிமார் தன்னைக்கூட்டி பண்புடனழகாய்கொண்டு
பூங்குயில்கிளிகொய்யாமற் புகழ்தினைப்புனந்தனன்றாய்த்
தீங்குவாராமற்காத்து ஜெயமுற்று வருவாயம்மா

வ-ம். அகோவாருமம்மா எங்கள் கண்மணியாகிய வள்ளித்தாயே நீ
ப்போயே பாங்கிமார்களையுங் கூட்டிக்கொண்டு நமது தினைப்புனம
போய் மிருகஜாதிகள் பட்சிகள் தினைக் கதிர்க்கொய்யாமல் காவலிரு
ந்து கழுகுமலைக்கந்தர் கிருபையால் செயம்பெற்று வருவாயம்மா வ
ள்ளித்தாயே.

சரணஞ்சரணமப்படியேபழுதில்லாமற் காத்துவருவேன்தங்கத்தாயே

பொது-விருத்தம்

ஞாலமேபுகழ்நம்பி ராசனு மவர்தன்பாரி
மூலமாகிப்பெண்ணங்கை மோகினியிவர்தன்சூலே
சோலைக்குள்புனத்திற்காவல் சுகமுடனிருக்கச்சொல்லு
வாலைபோல்வள்ளியம்மன் வளமுடன்வருகின்றாளே.

வ-ம். அகோதெப்படியென்றால் நம்பிராசனும் நங்கைமோகினியு
ந்தினைப்புனங் காக்கச்சொன்னபடியால் வள்ளியம்மன் பாங்கிமாருட
ன் தினைப்புனங்காக்க வருகிறவிதங்காண்க.

வள்ளியம்மன்வருகிற-தரு இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

வள்ளிநாயகியும்வந்தாள்-தினைப்புனங்காக்க
வள்ளிநாயகியும்வந்தாள்
வெள்ளியங்கிரிவேந்தனவள்ளல்நம்பிராசேந்திரன்
பிள்ளையாகியபசுங்கிள்ளையாகியகுற (வள்ளி)
மாதாபிதாவைப்பணிந்து போய்வாரேனென்று
வாங்கிவிபூதியணிந்து
ஆதரவாகத்துணிந்து அண்ணமார்தம்மை
அனுப்பிமனதுகனிந்து
பேதாபேதங்கள் ஏதேனுமினையாமல்
காதியர்கள் தன்னுடன் காதலுடனேகூடி (வள்ளி)

பாடகச்சிலம்புசிலம்ப — காலாழிபிலீ
பாதசரங்கள்புலம்ப
ஆடகப்பணிகளசைய முகந்துலங்க
ஆதிகநற்குணமிசைய
ஜாடையிலிங்கிதராகம் பாடிநயங்கள்தேடி
பேடைமயிற்பாங்கியரோடு முறவுகூடி (வள்ளி)
காவிற்கனிகளருந்தி — சாத்தாவைமலைக்
காவியைப்போற்றிவருந்தி
சேலற்குகனைப்பணிந்து நினைந்துகாக்கும்
தினைப்புனந்தேடித்துணிந்து
தாவிப்பாங்கியரோடு வண்டுபெண்பாடும்
பூவைப்பெண்ணாக விந்திரன்தேவிக்கதிபோக (வள்ளி)
யந்தவனங்கடந்து — நந்தவனமும்
தாண்டியேதள்ளிநடந்து
சிந்தைமகிழ்ந்துபடர்ந்துவருந்தியுநற்
செண்பகவனந்துடர்ந்து
கந்தமல்லிகைச்செண்டுங் கையிலெடுத்துக்கொண்டு
வந்தவழியுமண்டி வளங்கொள்வனங்கள்கண்டு (வள்ளி)

வஞ்சிவிருத்தம்.

சூரியன்கதிரெனத் துலங்கும்வள்ளிமின்
சாரிதினைப்புனத்தில் நன்னில்வந்திட
கூறியவேடர்கள் கூட்டமாகவே
சீரியபரணது செய்கின்றார்களே.

வ-ம்: இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் பாங்கிமாரோடு தினைப்புனங்காக்கவரவும் மற்ற வேடர்களால் பரணைகட்டப்பட்டு வள்ளியம்மன் காவலிருக்கிற விதமெப்படியென்றால்.

வள்ளியம்மன்-பரண்காக்குங்கண்ணிகள்-இ-ம்
ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

செம்பவளக்கால்நாட்டி — நன்றாய்ச்
சிறந்ததங்கவளைபூட்டி
கம்பலைப்பொன்னமணிநிரப்பி — அதில்
கனம்பொருந்துங்குழைபரப்பி
பருத்திருமிறாணிதைத்து — வள்ளி
பாதம்வைக்கவேணிவைத்து
திருத்தவங்கண்டதனைச்சேர்த்து — வள்ளி
செங்கையிற்றனிற்கோர்த்து
எனிதனிற்பாதம்வைத்து — வள்ளி
ஏறவள்ளிமனதுவைத்து
பேணியவன்பரணிருந்தும் — வள்ளி
பிரபலமாய்வளம்பொருந்தும்
வரிசைபெண்ணமார்போக — அங்கே

வள்ளியும்பாங்கியுமாக
விரைவுடனேகையிற் கவண்சேர்த்தாள் வள்ளி
விளைந்ததினைப் புனங்காத்தாள்
திசையைநோக்கிப் பார்த்திடுவாள் வள்ளி
தெய்வங்களைக்கும்பிடுவாள்
அசையாதபரனேறி ஏங்கள்
அன்னைவள்ளிமனந்தேறி
பாங்கியரைப்பிரியாமல் நெஞ்சில்
பலநினைவுங்குறியாமல்
தீங்குவரச்செய்யாமல் கிளி.
தினைக்கதிரைகொய்யாமல்
வீசுங்கவண்மாறாமல் அம்மன்
வேற்றுமுகம்பாராமல்
காசலையாய்ப்பரண்மீது தினறு
காத்தாளேகுறமாது
இருதனங்களசைந்தசைய உண்டை
எறிந்தாளேகவணிசைய
பருவமுயல்குழல்சரிய வள்ளி
பண்புடனேகவணெரிய
கைவளையல்கலகலென வள்ளி
கவணெறிந்தாளுடல்
மெய்யிலிட்டபணிதுலங்க உண்டை
வீசுகின்றாள்கவணிலங்க
வஞ்சியிடைதுவளநின்றாள் அம்மன்
மணிக்குரலோலமென்றாள்
அஞ்சுகப்பெண்குரல்போடக் கேட்டு
அன்னங்கள்வந்தினசபாட
பூங்குயில்கள்சூழ்ந்துமொய்க்க வன்னப்
பூவைகளுந்திரிகள்மொய்க்க
மாங்குயில்களிசைபாட புள்ளி
மயிலனமுநடமாட
இப்படிவள்ளியும்பெ..ய இந்த
ஈரேழுலோகமுமறிய
செப்புச்சிலைகாணுமே அம்மன்
தினைப்புனங்காத்திருந்தாளே.

பொது-விருத்தம்.

வாட்டமில்லாமுல்லை மலரணிந்ததோளின்
வள்ளிதினைப்புனங்காத்து வாழுநாளில்
தேட்டமுடன் கும்பமுனியிடத்திற்கேக
சென்றுவந்துவடகயிலைத்திகிரிச்சார்பில்
கூட்டமலர்காவனத்திற்கீதம்பாடிக்

கொண்டுசிவமாயிருந்தகோலன்யோக
காட்டமுறு நாரதமகாமுனிவந்து
நடிக்கின்றார் சிவசிந்தைபடிக்கின்றாரே.

வசனம் அகோதெய்ப்படியென்றால் இந்தப்பிரகாரம் தினைப்புனத்தில் வள்ளியம்மனும் பாங்கிமாரும் காத்துக்கொண்டிருக்க அவ்விடம்அகத்தியரைகண்டு அவ்வழியாய் நாரத மகாமுனி வருகிற விதங்காண்க

நாரதர்வருகிற தரு இ ம் ஆரபிரூபகதாளம்.

வேதவின்னயமாகவிளங்குஞ் சித்தயோகி
நாதகீதனுஞ்சிவயோக நாரதர்வந்து தோன்றினார்
புலித்தோலிடையிற்போர்த்தி போதவெண்ணீருசாத்தி
வலுக்கமந்திரமோத்தி வந்தநாரதர் தோன்றினார்
கண்டகுண்டிணிகள்மெள்ளக் கண்டபேருடன்சொல்ல
விண்டுகீதங்கள்பாடி வேதநாரதர் தோன்றினார்

விருத்தம்.

வந்திடுநாரதமுனிவர் பரண்மீதுற்று
வள்ளிமதிமதன மெய்வடிவுங்கண்டு
விந்தைமதியோரதியோ சீதைதானோ
மேனகையோர்வசியோ மின்னோபொன்னோ
இந்தவுலகினிலிவள் போலழகுங்காணேன்
எனவகமகிழ்ந்து பரனைதியேவினவு
சொந்தமென்றேபுனங்காக்கும் பெண்ணைப்பார்த்துச்
சூட்சமதாய் முனிவசனஞ் சொல்லுவானே

நாரதர்சொல் தரு இ ம் தோடி ஆதிதாளம்.

ஆரம்மா நீசொல்லுவாய் தினைப்புனங்காக்கும
அதிசயத்தவிளருவாய்
சாரம்பொருந்துந்தமிழ் சாரந்தெரிந்தபகுந்
தங்கமேகின்கிளையெங்கேயும் தாய்தந்தை (ஆரம்)
ஆதிலட்சுமி தானோ தெய்வலோக
அயிராணியெனு மானோ
சோதியோசரஸ்வதியோ ரம்பையோவேதத்
துலங்கியபார்பதியோ
ஏதோவின்பேர் தந்தைதாய் பேருஞ்சொல்லுவாய்
இந்தத்தினைப்புனத்தில் வந்தசந்தவிதமோ (ஆரம்)

நாரதர்சொல்வசனம்.

அகோவாருமம்மாதாயே ஆதிலட்சுமி இந்திராணி சரஸ்வதி அரம்பைகள் பார்வதிஇவர்கள்போலதினைப்புனங்காத்திருக்கிறாயே யாரோஎனக்குத்தெரியவில்லை உன்பெயரும் உன்னூர்பெயரும் உனதாய்தந்தை பெயருந்தெரியச் சொல்லுவாயம்மாதாயே.

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

சாதியோநாங்குறவர் குலந்தாய்பேர்நங்கை.

சுந்தரகம்பீரமகேந்திரன் பெண்பேர் வள்ளி
கோதில்லாமேவள் விமலைக்குடியாந்திருந்தார்
குடியிருப்போமெங்கள் பதிவதுவேஷாசம
நீதியுடன்றினைப்புனத்தைக் காப்பாயென்றே
நேயகன்னதந்தையெனையு மனுப்பினைத்தார்
ஓதுமென்றீர் நீர்தானு ரூர்தானேதிம்
கூறாது பெயர்தானே தோவுரைசெய்வீரே.

வ-ம். அகோவாருந் தவமுனிவரே என்னுடைய ஊர்பெயருந் தாய் தந்தைபெயரும் என்பெயருஞ் சொல்லச்சொன்னீரல்லவோ எங்கள் ஜாதிபேர் குறச்சாதி நாங்கள்வாசமாயிருக்கிறது சிற்றூர் என்தந்தை நம்பிராஜன் என்தாய்நங்கை மோகினியென்பெயர் வள்ளி ஆனபடியா ல் நீரெவரோ எனக்குத்தங்கள் பெயர்தெரியச்சொல்லுமையா.

நாரதர்சொல்-விருத்தம்.

கிரிசைக்குயில்கள்கூவுந் தினைப்புனவள்ளிகேளாய்
நாரதனெனும்பேரிந்த நாடெலாமறிவாரிங்கு
காரியஞ்சொல்வேனியுங் கழுகுமாமலையில்வாழுஞ்
சாரதருபன்கந்த சாமியைமணஞ்செய்வாயே.

வ-ம. அம்மாகேளாயம்மா வள்ளித்தாயே நானேநாரதமகா முனி யென்று ஈரேழுபதினாலுலோகமுஞ் சொல்லிக்கொள்ளுவார்கள் ஆன படியால்நான் சொல்லும்வார்த்தை மனதிற்கொள்ளுவாய் ஆகையா லேநீருபசவுந்தரியமாகயிருக்கிறபடியால் கழுகாசலக் கந்தசாமியை மணஞ்செய்துகொண்டால் எனக்கு சந்தோஷமாயிருக்கிறது அம் மாதாயே

நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னுகவராளி அடதாளம்.

மனதுக்கிசைந்தவர்தானே குகனை
மணஞ்செய்துக்கொள் வள்ளிமானே
கனமும்பொருந்தும் வள்ளித்தாயே எங்கள்
கந்தனைமணந்துகொள்நீயே
கழுகுமாமலை முருகேசன் உந்தன்
கருத்திற்கு கந்தவிசுவாசன்
தழுவிக்கொண்டால் வெகுசெம்மையே கந்த
சாமிதருவர் வெகுநன்மையே
அசுராமலரில் வென்றவேலன் இ
லாண்டரட்சத சிவபாலன்
வலியபணிரெண்டு கைதோளன் உந்தன்
மனதிற்குகர்த்த மணவாளன்
கலியுகத்திற்கு கந்தகுமாரன் யார்க்கும்
கருணைபுரியு முபகாரன்
சலியாமல்வாகருச் சம்மதிப்பாய் வள்ளித்
தாயென்சொல் மனதினிற்பதிப்பாய்
வேறேபேதகம் நினையாதே வெற்றி

வேலவரைச் சேர்ந்தணைமாதே
ஆரெவரோவென்றெண்ணாதே குகனை
அணைந்துக்கொள் வினைகள்வாராதே
கமலச்சணச்சண்முகனை கூடிவா
கலந்துக்கொள் நல்லசேவகனை
அமரர்மணிக் குழந்தைக்குகனை சேர்ந்து
அணைந்துக்கொள் குமரதேசிகனை
வேலுண்டு விலையில்லாத்தானே குகனை
மேவிக்கொள் குறவள்ளித்தேனே
மேலுங்கதியருள்வார் நிஜமே வடி
வேலனுந்தன் கைவசமே
தனித்திருப்பதும் சும்மாவருந்தம் சந்த
சாமிக்குமுனக்குமே பொருத்தம்
தனிக்குகிகாஞ் சுப்ரமண்யர் தன்னைக்
கலந்துகொண்டால் கோடிபுண்யம்

பொது-விருத்தம்.

கவடநானுரைத்த மொழியைக்கேட்டு
காதிலிருகையை வைத்துகருத்தும்வேறாய்
அவசியமாயிவ்வார்த்தை முனிவன்சற்றும்
அஞ்சாமற்சொன்னனே அக்யானத்தைச்
செவிதனிலேகேட்கவுந் தான்விதியோவுகோ
சிவசிவஹரஹரா சிவனேயென்று
குவிமுலைப்பெண்வள்ளி நாயகிவிசாரங்
கொண்டுதலைவிதியை நொந்துகூறுவாளே

வ-ம். இந்தப்படி வள்ளிநாயகியை நாரதர்சுப்பிரமணியரை விவாகஞ்செய்துக்கொள் என்றதைக்கேட்டு காதிலிருகையை வைத்து வள்ளியம்மன் புலம்புகிற விதங்காண்க.

வள்ளியமமன்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்:

இந்தஅக்யானவார்த்தை என்செவிகேட்கவுந்தான
என்னவிதியோபரமசிவனேபரம சிவனே
வந்தமுனிவனென்முன்வம்புபடப்பழியாய்
மதியாமற்சொல்லலாச்சேசிவனேபரம சிவனே
ஆரண்யந்தனிலேநானருந்தினைக்காக்கவந்து
அவதூறுகேட்கலானேன்சிவனேபரம சிவனே
கோரணியாகமுனிகூறுதவார்த்தைதன்னைக
கூரவுங்கேட்கலானேனாசிவனேபரம சிவனே

வள்ளியம்மைசொல் விருத்தம்.

திருமாலின்சகோதரிபார்வதிதன்சேயன்
செழித்தாறுதலத்தினுக் குஞ்சேர்தகந்தன்
குருவானகுகனைமணஞ் செய்வாயென்று
குறித்துரைத்திரது நீதியல்லசும்மா

செகுவாயுமுலர்ந்திட நீர்வேண்டாமிங்கு
வீண்பேச்சுநாரதனே மிஞ்சவேசி
மறுவார்த்தைசொல்லாதேநில்லாதேபோ
வந்தவழிதிரும்பி விடுமதியில்லானே

வ ம். அகோவாரும்நாரதமகாமுனியே ஆறுதலங்களிலும் வீற்றிருக்கும் படியாகிய சுப்பிரமணியக்கடவுளை மணஞ்செய்யும்படியாய் சொன்னீரல்லவா அப்படிக்கு நீர்சொல்லுவது தருமமல்ல வந்தவழியேதிரும்பிப் போகலாம் நாரதமுனிவரே.

நாரதர்சொல் விருத்தம்.

பின்னவருங்காரியமுன் சொன்னேனென்சொம்
பிழையேமுன்சொல்லி பகையாளியானேன்
உன்னுடையமனதிலேன் வீண்பொல்லாப்பு
உடையவன்வந்தால் வன்பாடுன்பாடம்மா
என்னையுங்கோபிப்பதுங் காரியமுமல்ல
இசைந்தமுகங்கண்ணாடி யெதிர்த்தாலல்லோ
நன்னயமாய்த்தெரியுமங்கே யதற்குமுன்னே
நான்சொல்லத்தெளிந்திடுமோ நாவிலுவாயே.

வ ம். கேளுமம்மா வள்ளித்தாயே நான்பின்னால் நடக்குங்காரியத்தை உனக்கு முன்னேசொன்னதால் என்பேரில் கோபம்வந்தது ஆனால்கண்ணாடியை முகத்துக்கெதிர் பார்த்தால் தெரியுமல்லவா அதுபோலகழுகாசலக் கந்தநாயகர் உன்னைமணஞ் செய்வாரே அதற்குமுன்னேநான்சொல்லத் தெரியுமா சொல்லுமம்மாவள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்லுகிற கண்ணிகள்.

இ-ம் செஞ்சுருட்டி ஆதிதாளம்.

வீண்பேச்சுப்பேசவேண்டாம் நாரதனே — இந்த
மிரட்டுநடவதிக்கேநாரதனே
போம்போம்வந்தவழியேநாரதனே — இங்கே
பொருந்தாதவார்த்தை சொன்னாய்நாரதனே
கந்தனுக்கிணங்கென்றதும்வாய்மதமோ — சற்றுங்
கனியாமற்சொல்வதுஞ் சம்மதமோ
எந்தவேலவருங்கிணங்கவென்றே — இங்கே
என்முன்னெதிர்த்துச் சொன்னீர் கீருமின்றே
வெற்றிக்குறக்குலமென்றறியாமல் — வம்பு
விள்ளுகிறீரெங்கள் சேதிதெரியாமல்
சற்றுநீர்நெஞ்சை தொட்டுப்பாராமல் — சும்மா
சல்லித்தனம்பேசுகிறீர் சோராமல்
அண்ணமாரிட்சணத்தில் வருவாரே — வந்தால்
அம்புவில்லெடுத்துன்மேற் பொருதுவாரே
விண்ணாட்டுநாரதனேஎன்தானோ — சிவ
வேடங்கண்டதுசும்மாவீண்தானோ

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

சடைமுடித்தவேடமெல்லாந் தாறுமாறே
தவமுனியென்றேயெவருந் தான்சொல்வாரோ
வெடுவெடெனப்பேசுவதும் நடவாதிந்த
வீண்பேச்சுநாரதனே மிஞ்சவேண்டாம்
அடம்பிடித்தேஎங்களண்ணர் வருவார்வந்தால்
அண்டவொட்டார் கண்டவுடனம்பாலெய்வார்
இடமுடமுன்னில்லாதே போபோயிந்த
செய்கையறியாது சும்மாசெப்பினீரே.

வம். அகோவாரும் நாரதமகாமுனியே நீர் சிவனைப்போல் சடைவைத்தது வீணே கந்தனுக்குஇணங்கொன்றவார்த்தை சொன்னீரல்லவா அது இங்கேநடவாது இப்போது எங்களண்ணமார்கள்வருவார் உன்னைக்கண்டாலம்பாலெய்வார் அதற்குமுன்போய் விடும்நாரதமகாமுனியே.

நாரதருக்கும்வள்ளியம்மனுக்கும் தர்க்கம் கண்ணிகள்.

இ-ம் கண்டா அடதாளம்.

கடந்தவார்த்தைசொன்னாற் காரியமோவள்ளித்தாயே
கந்தனைமருவினாற்கனக்குறையுண்டோசொல்வாயே

வள்ளியம்மன் சொல்.

துறந்தவார்த்தைசொன்னாய் தூரப்போம்நாரதமுனியே இந்த
துன்மார்க்கவேதினியெம்மாதரநாரதமுனியே

நாரதர் சொல்.

இந்தத்தினைப்புனத்திலிருக்க விதியோவள்ளிமானே இதற்
கிணங்கிக்கொண்டாலுன்னை யெவருங்கையெடுப்பார்கள்தேனே

வள்ளியம்மன் சொல்

உந்தன்மதமோதின்றஉறவோநீ வெகுசல்லியாச்சே இந்த
உலகுக்கொவ்வாதிங்குகலகம் பண்ணுதேவீண்பேச்சு

நாரதர் சொல்.

பேச்சுநடந்தல்லவோபேதையேயோசனைதோணும் கந்தன்
பெரியவனவனை நீமருவச்சம்மதித்திடவேணும்

வள்ளியம்மன் சொல்

வாய்ச்சம்பிரதாயமுன்வழக்குஞ்செல்லாதுகேள்நாரதனே நட
வாதெந்தன் குறக்குலம்வழக்கம்பொல்லாதுகாண்நாரதனே

நாரதர்சொல் தரு

குச்சக்குடிலுங்கட்டிக்குடியிருப்பதும் நல்வாழ்வோ எங்கள்
குமாரனைமணந்து பொற்கோவிற்குள்ளிருப்பதுந்தாழ்வோ

வள்ளியம்மன் சொல்

குங்கக்குடிலுஞ்செம்பொன்கோவிற்போலிருக்குங்குலத்திற்கே இந்த
கொஞ்சத்தவம்பேசிமிஞ்சிவந்தாயிந்தக்குலத்திற்கே

நாரதர் சொல்

துள்ளுமாடுபொதிசுமந்து திரும்வள்ளித்தாயே

தொடர்ந்துவருவாரிங்கேகந்தமொழிகள் சொல்லுவாயே

வள்ளியம்மன் சொல்

கள்ளிடைந்துகந்தசாமிவந்தாலுஞ்செல்லாதே இங்கே
தள்ளிவுசொல்நாரதமுனியேயோடிப்போநில்லாதே

நாரதர் சொல்

வடிவேல்குமாரனைப்போல்மாப்பிள்ளையினிகிடையாது வள்ளி
மங்கையேகுமாரனைமருவமனது களையாதே

வள்ளியம்மன் சொல்

சடைமுடிநாரதர்நான்விட்டேனிது வரைமாப்பு என்முன்
சமாச்சாரமிதுசொன்னாற் சண்டைவருமினிபொல்லாப்பு

நாரதர் சொல்

கஞ்சிக்குங்காடிக்குங்கைகுறிப்பார்த்திடுங்குறத்தி எங்கள்
கந்தனை மருவினால்கணமுண்டுமரகதர்விருத்தி

வள்ளியம்மன் சொல்

மிஞ்சியமருந்துள்ளமேன்மைக்குறவர்குலநாமே மட்டி
மீறிப்பேசியபேரைச்சிறிபிளந்துசெகுவோமே

நாரதர் சொல்

வார்த்தைகடக்கவழித்தூர்ந்து போங்குறமயிலே வள்ளி
மங்கையேகுமரனைமணந்துக்கொண்டால்வெகுஜயிலே

வள்ளியம்மன் சொல்

எதிர்த்துபேசுகிறாயிணங்காநிந்த வார்த்தையெட்டுமோ வீண்
எட்டாபழத்துக்குக்கொட்டாவிவிட்டதால்கிட்டுமோ

பொது விருத்தம்.

எந்தெந்தவிதத்திலு மிதவசனங்கள்சொல்ல
சிந்தையிசையதித்திடாமல் சிறியேவார்த்தைசொன்ன
சுந்தரவள்ளிமான்போற்றுலங்கு பாதாதிகேசம்
வந்தநாரதனும்பார்த்து மடல்தனில்வரைந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால்இந்தப்பிரகாரம்வள்ளியம்மனுக்குவேண்டிய புத்திமதிகளைசொல்லி கேளாமலிருக்க அவளுடையரூப சவுந்தரியத்தை சித்திரபடத்திலெழுதி சுப்பிரமணியருக்குக் காண்பிக்கும்பொருட்டாய் நாரதர்கழுகுமலைக்குவருகிறார்.

சுப்பிரமணியர் வருகிற விருத்தம்.

தருக்களும்வாழிகூடத் தங்கிபற்பலவாய்நல்ல
பெருக்கமாய்முனிவர் நாற்கால்போற்றிடும்ருகமோடு
கருக்குயில்மயில்கள்மேவும் கழுகுமாமலையில்வாழுந்
திருக்கையில்வடிவேலேந்துஞ்சிவசுப்பிரமணியர்வந்தார்.

வ ம். இந்தப்பிரகாரம் நாரதர்கழுகு மலைக்குவருஞ்சமத்திதல் அவ்விடம்கழுகுமலையில் சிவசுப்பிரமணியர் கொலுவிற்கு வருகியதவிங்காண்க.

சுப்பிரமணியர் வருகிற தரு
இ-ம். சங்கராபரணம் ஆதிதாளம்.

சிவசுப்பிரமணியர்வந்தார் கழுகாசல
சிவசுப்பிரமணியர்வந்தார்

அநுபல்லவி.

சிவசுப்பிரமணியர்வந்தார்-தவமுனிவர்கள்சூழ
சித்ரக்கலாபமயில்தந்திமிதிமியென
நர்த்தனஞ்செய்திடச் சித்தர்களுட்புகள் (சிவ)

சரணங்கள்.

ஆறுமுகந் துலங்க பன்னிருகையின்
அழகுமிகுந்த யிலங்க
கூறுசெப்பிடும் மேலும் மணிக்கிரீட
குண்டலம்மணி மேலும்
வேறுபடச்சூரலாமாறுபடச் செங்கோல்.
வெட்டிகொண்டிடுஞ்சூலஞ்சத்திமதிவந்தரவாள்
கைத்தலமதிலெடுத் துத்தவுணர்கள்பூண்ட
கவந்தியேமதிகுலைந்துவோடிட
யிலங்களோமிகுத்திளக்கவேலவர்
வீரசூரபதம்வைய்யே களப்
பேரிமேலெஜெயமுக தீரமாகச்செய்த (சிவ)

பொதுவசனம்.

இத்தப்பிரகாரம் கழுகுமலைக்கந்தசுவாமி தமதுசேனைவில்வந்து தேவர்கள்சூழ இருக்கும்போது அந்தசமயத்தில் நாரதர்வந்துசொல்லுகிறவிதங்காண்க.

நாரதர் வசனம்.

அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகியுங்கோடிசூரியப்பிரகா சகச்சிதானந்த ஆதிபராபரவஸ்துவாகிய ஆதிபரமேஸ்வரர் புத்திரசிகாமணியாகிய சுப்பிரமணியகடவுளே சரணஞ்சரணமையா சுவாமி.

சுப்பிரமணியர் சொல்வசனம்.

அகோவாரும் பிள்ளாய் நாரதமகா முனியே மிகுந்த சந்தோஷமாய்எங்கேயிருந்து வருகிறாய் சொல்லும்பிள்ளாய்.

நாரதர்சொல் விருத்தம்

விண்ணுலகுமண்ணுலகும் பார்த்துவந்தேன்
வெகுகோடித்தலங்களெல்லாஞ் சுற்றிவந்தேன்
கண்ணிசைந்தபெண்வனத்தில் வள்ளியைப்போற்
கண்டதில்லைசுப்ரமண்யக் கடவுளானே
எண்ணியந்தபெண்ணுடைய சொரூபமெல்லாம்
இணைந்தபடசித்திரத்தி லெழுதிவந்தேன்
நண்ணியந்தபடலுந் தானிருக்குதிப்போ
நடக்கவேண்டிய வகையைநவிலுவீரே.

வ-ம். ஆ ஆ சொல்லுகிறேன்கேளுமையா சுவாமி தெய்வலோ

கத்திலிருந்து பூலோகத்தில்வந்து வெகுகோடி தலங்களெல்லாஞ் சுற்றிப்பார்த்து தங்களுடைய திசையைநோக்கி வரும்போது வேள்வி மலைக்கருகே மூன்றுலோகத்திலுங் கிடையாத வள்ளியம்மையென்ற ஒருபெண்ணைக்கண்டேன் அந்த அம்மனுடைய வடிவை யொருபடத்திலெழுதி வந்தேன்சுவாமி.

சுப்ரமணியர்சொல் வசனம்.

ஆ ஆ மெத்தசந்தோஷம் நல்லதுநீபோய்க் கண்டுவந்த அந்தப் பெண்ணுடையவிதத்தை செவ்வையாய் இன்னமொருதரம் நன்றாய்ச் சொல்லிவாரும் பிள்ளாய்நாரதனே

நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்

சத்திவடி வேல்குமாரசாமியுந்தன் சரணம்
தம்பியென்நாரதமுனிவன் தாசனுந்தன் சரணம்
புத்தியடியேன்விணணப்பம்புகலுகிறேன் சரணம்
போற்றியுந்தன்செவியிலிதைச்சாற்றுகிறேன் சரணம்
சிவந்தபரமேஸ்வரனை ச்சேர்வைசெய்தேன் சுவாமி
தெளிந்தபொதிகாசலத்தைத்தேடிச்சென்றேன் சுவாமி
கந்தகும்பமுனியைக்கண்டுஉமதுதிசையை நோக்கி
ஓடிவடகைலைவழிச்சென்றுவரும் போது
வேடர்துரைத்தனங்கள்செய்யும்வேள்விமலைக் கருகே
விரைந்துவரும்போதொருபெண்விளைந்ததினைக் காச்சான்
தேடித்தினைப்புனத்தருகேசென்றெடுத்துக் கொண்டேன்
திவ்யசந்திரோதயம்போல்தேன்மொழியைக் கண்டேன்
வள்ளியென்றும்பெயரறிந்துமகிழ்ந்தேன் சுவாமி
வடிவேலர்க்காகுமென்றுமதித்துக்கொண்டேன் சுவாமி
புள்ளிமயில்வேலனைநீபுணர்வாயென்றேன் சுவாமி
பூவைவள்ளிசினந்தேனையும்போவென்றாள் சுவாமி
சுப்ரமண்யர்க்கிணங்குமென்றுதுணிந்துசொன்ன போது
தூரம்போவென்றெனை மிரட்டித்துரத்துகின்றாள் மாது
இப்புவியில்திருபமிணங்கும்வள்ளி போலே
எழுதிவந்தேன்சித்திரத்திற்பார்த்திடுங்கண் ணாலே

நாரதர்சொல்-விருத்தம்.

இதமிதமாய்க்கூறியுங்கேளாமல்வள்ளி
இருதனமுமதிமுகமுஞ்சோதிமெய்யும்
பதமுமவள்துடியிடையுங்கூர்ந்துபார்த்து
பண்புபெறுமவயவங்கள் குறைவில்லாமல்
விதம்விதமாய்ச்சித்திரத்திலெழுதிக்கொண்டு
வீரியமாய்விடம்விட்டுவிரைவாயிங்கு
கதியுதவுங்கழுகுமலைதனிலடுத்துக்
கந்தவேள்சித்திரத்தைக்காட்டுவேனே.

வ-ம். அகோகேளுமையாசுவாமி அந்தவள்ளியம்மனிடத்தில் உமமைக்குறித்து வேண்டியதர்க்கங்கள்செய்தும் அம்மன்கேளாததால் அ

ந்தம்மாளுடையபாதாதிகேசமுதல் திருவழகைபடத்தில்விசித்திரமா யெழுதிவந்தேன்இதோ இதைப்பார்த்து நடக்கவேண்டியகாரியஞ் சொல்லவேண்டுஞ்சுவாமி சுப்பிரமண்ணியர்வசனம் ஆனால் அந்தச் சித்திரப்படத்தைக்கொடும் பிள்ளாய்பார்ப்போம்நாரதமகாமுனிமே.

பொது-விருத்தம்.

வகைவிபரமுரைத்திடுநாரதனுந்தந்த
மடலிலெழுதுஞ்சித்ரவடிவைப்பார்த்து
ஆகவடுவேல்குமரன்மிகுமையல்கொண்டு
காஷ்டிகொள்ளும்பித்தனைப்போற்குளறிவாடி
மிகவுமனமதிமயங்கியுருகிச்சோர்ந்து
விரமதன்சமர்புரியமெலிந்துநொந்து
சுகமயிலேசித்திரமோகினியேயென்னத்
துள்ளுவாய்புலம்பியங்குவிள்ளுவாரே.

வ-ம் இந்தப்பிரகாரம் நாரதமகாமுனிகொடுத்தபடத்தை சுப்பிரம ணியர்கண்ணாலேபார்த்து பயித்தியங் கொண்டவரைப்போல் புலம்பு கிறவிதங்காண்க.

சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்

கையின்மடலன்னமே வடிவமைந்த
காரிகையெனுஞ்சொர்னமே
மையலுங்கொண்டேனே மதிமயங்கி
வார்த்தையும்விண்டேனே
கண்ணேகண்மணியே பெண்ணேஎந்தன்
கண்ணுக்கிசைந்தகனியே
பெண்ணேபொன்னொளியே என்மனதோடு
பேசும்பசுங்கிளியே
தேனேதெள்ளமுதே நானுமுன்னைத்
தேடுந்திரவியமே
மானேமாங்குயிலே மரகத
வடிவேசொர்னமயிலே
கண்கொண்டுபாராயோ என்னைக்கொஞ்சி
கட்டியேசேராயோ
என்கண்ணைப்போடாயோ என்னைக்கிட்டி
மஞ்சத்திற்கூடாயோ
மனதிற்குறியாயோ பெண்ணேஉன்மேல்
மயங்குவதறியாயோ
மதியிதழ்தாராயோ நான்கொண்ட
காதலைத்தீராயோ
திரும்பவும்பார்க்கிலேயோ நான்சொல்வதுண்
செவியிலுங்கேட்கிலேயோ
துரும்பிடைதுலங்காதோ செங்கைவளை
துவண்டிடதிர்குலுங்காதோ

உன்னுசைமறப்பேனோ மதன்கணைகள்
உறுவழும்பொறுப்பேனோ
என்னென்றிருப்பேனோ உனைநினைந்து
என துயிர்தறிப்பேனோ

பொது-விருத்தம்.

சைவதேவர்கொண்டாடுஞ் சாபிசித்திரத்தைப்பார்த்து
மெய்யுறும்விகாரங்கொண்டு மெத்தவேவருந்தும்போது
மைவிழிவகவுங்கோல மயிலெனநடையுங்கொண்டார்
தெய்வயானைப்பெண்மாது திறமுடன்கொலுவந்தாளே.

வ-ம். இந்தப்பிரகாரம் சுப்பிரமண்ணியக்கடவுள் சித்திரப்படத்தைப் பார்த்து அங்குபிரலசுபித்துக்கொணடிருக்கும்போது அவ்விடம் தனதுமனைவியாகிய தெய்வயானை திருக்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க

தெய்வயானைவருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

தெய்வயானையும்வந்தாள்-திருக்கொலுமுன்
தெய்வயானையும்வந்தாள்
தூய்யசோதிமென்மெய்விசேசமிகு
சைவமார்க்குதவுதையல்தேவர்பணி (தெய்வ)
வர்சமல்லிகைமலர்ச் செண்டு கையிலெடுத்து
மனதிற்கிருபையது கொண்டு கிளியென்னே
ஆசைபயில்மொழிதம் கண்டு சூர்யஉதைய
மானதுபோலவள்மேனிவசிகர
மேன்மைகுலாவுகிர்பா பதிபூரண (தெய்வ)
சித்ரமுகவீணை முழங்க மலர்சொறிந்து
தேவர்கள்வந்துவந்து வணங்க இருபுறமுஞ்
சத்ரசாமரைக ளிலங்க திவ்வியவதன
சந்திரனெனவருஞ்சங்கரன்மருமகள்
ஐநதருவளர்திருஇந்திரனிடமகள் (தெய்வ)
செந்தாமரைப்பாத மிலங்க துவண்டகொடி
சிற்றுடைபட்டாடை துலங்க கந்தரத்ன
குந்தளவோலைகட் குலங்க வளைதுலங்க
கோதைமாதரசேயெனவளர்திரு
சோதிமாமதியாமெனஎதிர்வரு (தெய்வ

தெய்வானைசொல்-விருத்தம்.

சங்கரசம்புசவுப்ரபாலஞான
சரவணகுகாதிபவென்சாமிநீரும்
செங்கைதனில்மடலேந்திப்பார்த்துத்
தியங்குவதேன்வயங்குவதேன்சிந்தைவேறாய்
அங்கமதுமெலிவானேன்புலம்புவானேன்
ஆர்மீதிலாசைகொண்டதையாமெய்யா
செங்கனிவாயதுமலர்ந்திங்கடியாட்குள்ள
சேதியெல்லாந்தெரிந்திடவேசெப்புவீரே.

வ-ம். சரணஞ்சரணம் தேவர்சேனாதிபதியாகிய என்பிராண நாயகரே தாங்கள் ஏதோஒருபடத்தைக்கையிலேந்திப்பார்த்துத்தியங்கிமயங்கிப்புலம்பிநிற்பதேனோ எனக்குத்தெரியச்சொல்லும் பிராணநாதா

தெய்வயானைசொல்-கண்ணிகள்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆ-ம்

தெய்வமேநீசெவ்விதமோசித்திரபடத்தினைப்பார்த்து
தேட்டமாய்மயங்குவதை தெரியச்சொல்லுஞ்சுவாமி
ஐயனேதேவரே நீர் யார்மீதிலாசைகொண்டீர்
அந்தரங்கமெந்தனிடமறியச்சொல்லுஞ்சுவாமி
தேசத்திலில்லாததிசயந்தானோநீருமிப்போ
தேகமெலிவாகிமனம் நோகுவதேன்சுவாமி
ஆசையுடன்நானுமக்கு மடியாளுமிங்கிருக்க
அந்[illegible]தோபெண்மேல் விரகந்தொடுத்ததென்னசுவாமி
உறுதிசொல்லியபடிபாலையுகந்துமணஞ்செய்தவர்பின்
ஒருத்திமேலாசைகொண்டுவருத்தமென்னசுவாமி
இ[illegible]தாமெனதாயிருந்தவர்வஞ்சம்நினைத்தால்
என்னுடையகாலப்பிணியென்னசெய்வேன்சுவாமி.

தெய்வானைசொல்-விருத்தம்.

ஏதொருபெண்ணென்னைச்சதமென்றெண்ணிநீரோ
என்னிலுமதிகவடிவாமோவந்த
மாதினமுதங்கண்டீரோயாவர்கண்டு
வந்துசொன்னபோதனையோகேள்விதானோ
நீதியுடனெந்தனுக்குநடந்தவார்த்தை
நிட்சயமாயொளியாமற்சொல்லவேண்டும்
மாதவத்தோர்புகழ்ந்தேத்தும்மயில்மீதேறும்
மன்னவரேநின்னினைதைவமுந்துவீரே.

வ-ம். ஆகோவாரும்பிராணநாயகா தாங்கள்ஏதோஒருபெண்ணின்மேல் மையல்கொண்டதைப்போற்காணுகின்றது அவள் என்னிலும்அதிகஅழகுள்ளவளோ ஆகிலுமுன்னாலென்னைமணஞ்செய்யும்போது மற்றொருபெண்ணைநாடேனென்று சொன்னீரல்லவோ அப்படியிருக்க இப்போஒருபடத்தைப்பார்த்து தியங்கிமயங்கிநிற்பது தருமமோ என்பிராணநாதா.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தெய்வானைதன்நாயகராகிய சுப்பிரமணியக்கடவுளைக்கேட்டு பதிலுத்தரஞ் சொல்லாமையைக்கண்டு அவ்விடம்நின்றுக்கொண்டிருக்கும் நாரதரைப்பார்த்துக் கேழ்க்கிறவிதமெப்படியென்றால்.

தெய்வானைசொல்-கவி

விண்ணினாரதனே அண்ணலாரிடத்தில்
வண்ணமாய்ச்சொன்னதிண்ணிநீசொல்வாய்

வ-ம். ஓஓ கலகப்பிரியாகிய நாரதனே எந்நாயகரிடம் என்னகோள் வைத்தாய் அதைச்சொல்லும்பிள்ளாய் நாரதனே

நாரதர்சொல் வசனம்.

தாயேநான்கண்டசேதி சொல்லக்கேளுந்
    தலங்கள்சுற்றிக்கைலேவழிச் சார்ந்தேனங்கே
ஓயாதுவிளைந்ததினைக்காத்தாளோர்பெண்
    உகந்தவுடன்ரூபமெல்லா முன்னியுன்னி
வாயாலேசொல்லிமுடி யாதேயென்று
    வஞ்சகமில்லாதபட மெழுதிவந்து
தூயவடிவேலனைப்பார்த்தென்றதல்லால்
    சுகமணஞ்செய்யென்றடியேன்சொல்லினேனே

வ-ம். அப்படியே வருவேனம்மா தெய்வயானைத்தாயே நான் கைலையங்கிரிபோய் இவ்விடம்வருகும்போது வேழ்விமலைக்கருகி லொரு பெண் தினைப்புனங்காத்திருந்தா ளவள்ரூபத்தை வாயாற் சொல்லிமுடியாதென்று ஒருபடத்தி லெழுதிவந்து சுவாமியைப்பார்க்கச் சொன்னதேயல்லது மணஞ்செய்துகொள்ளச் சொல்லவில்லையம்மாதாயே.

தெய்வானைக்கும் நாரதருக்கும் தர்க்கம்.

கண்ணிகள், இ-ம் கண்டா ஆதிதாளம்.

தெய்வானை சொல்லல்.

சொல்லவில்லையென்று சொன்னாய்சுத்தபரமாத்மாநின்
தொழிலெல்லாமறியேனோ பாவிநாரதா
மெல்லமெல்லப்பேசிநீ யெல்லோர்க்குங்குண்டுணிவைத்த
வித்தைநானறியேனோ பாவிநாரதா.

நாரதர்சொல்லல்.

தாயேநீசொன்னவார்த்தைத் தப்பிநடந்ததுண்டோ
சற்றுமென்மேல்குற்றமில்லை யம்மணித்தாயே
மாயமுங்கபடமும் முருகன்செய்ததேயல்லால்
மற்றொருவர்கள்செய்வாரோ அம்மணித்தாயே.

தெய்வானை-சொல்லல்.

இத்தனையுஞ்செய்துநீ கத்தரிநாட்டினவன்
இல்லையென்பதறியேனோ பாவிநாரதா
வித்தாரஞ்செய்துமேவ சித்திரமடலைப்பார்த்து
விரும்பிமெய்யவைத்தாய் பாவிநாரதா.

நாரதர்-சொல்லல்.

நிஜவார்த்தைசொன்னாலு முன்னேர்ப்பதில்லைவரும்
நிலையாதபொய்யனென்பா ரம்மணித்தாயே
பசப்பிவும்மைவஞ்சித்து முருகன்செய்ததறிந்தும்
பாமத்தனென்றுசொன்னா யம்மணித்தாயே

தெய்வானை-சொல்லல்

உறங்கிக்கண்மூடிப் பால்குடித்துதப்போ
லுள்ளவஞ்சகஞ்செய்தாயே பாவிநாரதா
மறந்துவிடுவேனோ சித்தமடல்மந்துகேவல்லை

மயக்கினதறியேனோ பாவிநாரதா.
(நாரதர்சொல்லல்) உசந்தபத்தாரன்சோதிவழிதானுஞ்சிரித்தாளென்
றுரைப்பதுநிஜமாச்சே யம்மணித்தாயே
நிஜந்தனைநான்சொன்னாலும் குண்டுணிசொல்வானென்றே
நெடுகலுமுள்ளபேச்சே அம்மணித்தாயே
(பொ-து-வி-ம்) கண்ணினாற்கண்டசேதி கழறினேனென்றுபோற்றி
புண்ணியநாரதனுரையும் பொருந்தியவேலர்தாமும்
நண்ணியகுறப்பெண்ணை நான்கண்டுவருவேனென்றே
எண்ணியதெய்வயானைக் கிசைந்திடவியற்றிட்டாரே.

வ-ம். ஆகோதெப்படியென்றால நாரதனைதெய்வானையம்மன் கோபித்துதர்க்கஞ்செய்துநிற்கின்ற சமயத்தில் சுப்பிரமணியர் தெய்வயானையைச்சம்மதிக்கும்படியாய்ச் செய்து குறப்பெண்ணைக்கண்டு வரும்படிகேட்கதெய்வயானை அதற்குவிடைகொடுக்கிற விதங்காண்க.

தெய்வயானைசொல்-கொச்சகம்.

மின்னும்வடிவேல்தரித்த வேலவனேநான்மருவும்
மன்னவனேயும்முடைய மனம்போலநீருமங்கே
கன்னல்மொழிவள்ளியெனுங் கனக்குறத்தியிடம்
பொன்னடிகாணவாடிப் போய்மீண்டுவாருமையா.

வ-ம். சரணஞ்சரண மென்பிராணநாதா தாங்களெண்ணிய காரியத்தை நான்தடைசெய்தாற்கேட்பீரா நல்லது உங்கள் மனம்போல அந்தக்காணக்குறப்பெண்ணைக்கண்டு அதிசீக்கிரமாகநமதுகழுகுமலைக்குவந்துசேருஞ் சுவாமி.

சுப்பிரமணியர்வசனம்.

நல்லது அப்படியே போய்வருகிறேன் நீயொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை என்பிராணநாயகி ஆகோவாரும்பிள்ளாய் நாரதமகாமுனியே அந்தவள்ளியென்னும் பெண் இருக்கிறதினைப்புனமும் அந்தத்திசையும் அவ்விடத்திலிருக்கிற அதிசயமும் அவளிருக்கு மடையாளமும் சொல்லும்பிள்ளாய்.

நாரதர்சொல் விருத்தம்.

ஆனைமலைக்குத்தாலமலைத்தானுண்டு
அதற்கடுத்தபொதிகைமலையங்கேயுண்டு
மோனதவவிசுவாமித்திரன்வேள்வி
முடித்தமலையுண்டு தேவர்முழக்கமுண்டு
ஜானகிராகவனிலக்குமணனுமுன்னே
தாடகைவென்றதுவுமத்தலத்திலேதான்
கானமலைக்குறக்கொடியாட் சனமுமங்கே
கண்டுசென்றாலடையாளங் காணலாமே.

வ-ம். மேகநைமபாகமுகாசலக்குசாமியே அந்தவள்ளியம்மன் இருக்கப்பட்டவிடத்திற் சமீபமாய் ஆனைமலைக்குத்தாலமலை பொதிகைமலை விசுவாமித்திரர் வேள்விசெய்தமலையும் ஸ்ரீராமர் இலக்குமணர் தாடகைவென்றவிடமும் தேவர்கள் முனிவர்கள் வாசஞ்செய்யும்

படிப்பான இடமும் சூழ்ந்த தினைப்புனத்தில் வள்ளியம்மையிருக்கிறா
ளதுபின்னேவந்தால் காண்பிக்கிறேன் சுவாமி.

சுப்பிரமணியர்சொல் வசனம்.

அதோவாரும்நாரதமகாமுனிவரே அந்தவள்ளியிருக்கிற இடத்தி
ற்குப்போக வேண்டுமானால் என்னுடைய சொரூபமெடுத்துப்போகலாகுமோ?
ளாய்.

வ-ம். சாணஞ் சாணையாசுவாமி ஆறுமுகமும் பனிரெண்டு
கையுமயில்வாகனத்தையும் விட்டுவேடர் உருவங்கொண்டுபோகலாம்
சுவாமி (சுப்பிரமணியர்-வசனம்) அப்படியேநல்லது நடவுமென்னாய்.

சுப்பிரமணியரும்-நாரதரும் தினைப்புனம்வருகிற

கண்ணிகள் இ-ம் சங்கராபரணம் அடதாளம்.

மையல்கொண்டுவேலர் குறமானைத்தேடியே ஒரு
மானிடவடிவங்கொண்டு பாதைகூடியே
தெய்வநாரதனைகூடச் சேர்ந்துவாவென்று கந்தன்
சீக்கிரங்குறப்பெண்ணினைப் பார்க்கலாமென்று
வில்லெடுத்து அம்புதொட்டு வேடர்போலவே வடி
வேலவன்தலத்தைவிட்டு மிஞ்சியேகவே
செல்வழிகேட்டுகேட்டு திசையைநாடியே வேலர்
தேன்மொழிவள்ளியைக்கானகத் தேடித்தேடியே
தண்டினைப்புனமும்வள்ளிதன் தலமுமெதுவோ அவள்
தன்னைக்காண்பதெக்காலமோ சமயமென்றைக்கோ
கண்களுக்கெட்டாததினைக் காடுதூரமோ மலர்க்
கந்தவள்ளியைத்தான் காண்பதெந்நேரமோ
நாரதர்வள்ளியிருக்கும் லக்குங்காணுமே அந்த
லக்குந்திசையுமெனக்கு நவிலவேணுமே
தூரமோகிட்டமோவழி சொல்லுமெனக்கே வள்ளிந்
தோதனைககாணவைத்தாற் சுகூர்தமுனக்கே
என்றுவேலர்புனத்தி லேகியபோதில் அங்கே
இணங்குமநாரதனும்பைய வியப்புவான்காதில்
மன்றல்வள்ளிதன்னைத்தேடி மநமெலிவானேன் தினை
வனத்தைநாடிவள்ளியையுன் வசத்திற்சேர்ப்பேனே
மனந்துயர்வேண்டாம்சுவாமியுன் மனதின்படியே குற
வள்ளியுன்வரஞ்சேர்த்து வைப்பேனடியேன்
தினைப்புனமும்வள்ளியையுஞ் சீக்கிரத்திலே கையிற்
சித்திரம்போற்காணவைப்பே னிட்சணத்திலே
இரண்டுநாழிகைக்குள்வள்ளி நாயகிமுன்னே இந்த
நேரமேகொண்டுவிடுவேன் நேயனேசொன்னேன்
கண்வெள்ளியையும் துகைவசத்திலே கூடிக்
கலந்துணர்ந்துசேர்ந்துக்கொள்ளுங் காணிசுத்திலே
சக்கரைசினியென்றேலை தன்னில்வரைக்கும் அதைத்
தாலெடுத்துத்தின்னரசந்தருமோவிரைந்து

சொற்குறப்பெண்டன்னைமணஞ் சூட்டச்சொல்லிய நீயுஞ்
சொன்னதல்லாலவள்முகந் தோன்றவில்லையே
நாரதர்வாவென்றுவேலர் நாடிநடந்தார் தோகை
நாகமலைக்கப்பால்க்காடு நாடுகடந்தார்
தெருவுமுடுக்குஞ்சுற்றி திடலுமேயறிய வேலர்
செண்பகவனத்தில்வந்துசிந்தைதேரியே
வெள்ளிமலைதங்கமலைக் கொடிமுடியுண்டோ அதில்
விரைமகள்சந்தனச்சோலை வேலவருங்கண்டே
கிள்ளையும்பூங்குயிலினமும் தினைபெருக்குமே கூவக்
கிளிமொழிவள்ளிப்பெண்ணைக் கேட்டிருக்குமே
தோகைவள்ளிக்கவணையெறவதைக்கண்டார் பட்சி
சூழ்ந்திடுமாலோலமென்ற சத்தமுங்கண்டார்
வாகையணிகந்தன்றினைப் புனங்காண்கிறார் அங்கே
வள்ளிதன்வடிவங்கண்டு வந்தெதிர்நின்றார்

பொது-வ-ம். இந்தப்பிரகாரம் சுப்பிரமண்யக்கடவுளும் நாரதமகாமுனிவரும்கழுகாசலத்திலிருந்து தினைப்புனத்தில்வந்துநாரதர்வள்ளியைக்காண்பித்து தமதிருப்பிடஞ்சென்றபின்சுப்பிரமணியக்கடவுள் வள்ளியம்மனெதிரே நின்று கூவும்போது வள்ளியம்மன்தினைக்குப் பட்சிகள்வராமல் ஆயாலோட்டுகிற விதங்காண்க.

வள்ளியம்மன்-ஆயலோட்டுகிற-த-ரு இ-ம் புன்னாகவராளிரூபகதாளம்.

ஆயாலோ-ஆயாலோ-பட்சிகள்-ஆயாலோ-ஆயாலோ
அன்னங்களேகிள்ளைகளே நல்ல
அழகுசிறுவண்டினமே
கன்னங்கருங்காகங்களே சிறு
காடைகதாரிகளே (ஆயா)
வெள்ளமேபுள்ளினமே தினை
மேவுகின்றகோகிலமே
மெள்ளவரும்நவரத்தினமே சோலை
மேவியசெம்போத்தினமே (ஆயா)
மானினமேஆயாலோ புள்ளி
மரையினமேஆயாலோ
கானகத்துமயிலனமே சிட்டுக்
கம்புட்களே ஆயாலோ (ஆயா)
வர்ன்னவர்ன்னபூவைகளே தாரா
வாத்துகளேஆயாலோ
சொர்ணநிறத்தூக்கணமே அன்றில்
சோடுகளேஆயாலோ (ஆயா)

சுப்பிரமணியர்சொல் கலித்துறை.

காந்தளின்கைவிரல்சிவப்பெழுமேபொற்கவணெறிந்தால்
மாந்தளிர்செந்தீயழுமேவெய்யவன்கதிரால்
ஏந்தன்மிரண்டிசைந்திடுமேயிடையிற்றிடுமே

போந்தயெவ்வாறுங்களூரெங்கேசொல்லும்பூவையரே.
வ-ம். ஓகோபெண்ணேஉன்கையால்கவணெறிந்தால்சிவப்பேறுமே வெய்யலில்மேனிகுலைந்திடுமேயேஇரண்டுதனமுறிந்துகுலுங்குமே இடைநோகுமேஅல்லது உங்களூர்பெயரென்ன நீயார்சொல்லும்பெண்ணே.

இதுவுமது விருத்தம்

கோதையேகுயிலேமானே கொஞ்சியகிளியேதேனே
காதலாயுன்னைத்தேடிக் காமப்பேய்க்கொண்டுவந்தேன்
சீதமாய்வனத்தில்நீயுந் தினைப்புனங்காக்கவேண்டாம்
வேதனும்விதித்திட்டானோ விதிவசமென்சொல்வேனே.

வ-ம். ஆ-ஆ-குயிலேமயிலே என்னிடத்திற் கொஞ்சும்படியாகியகிளியே பாவியாகிய பிரமதேவன் உன்னைப்பிறப்பித்து இந்தக்கானகத்திலே தினைப்புனங்காக்கவிதிவைத்தானல்லவாஅல்லதுஉன்மேல்மோகங்கொண்டுவந்தஎன்னிடத்தில் சற்றேவார்த்தையாடும் என்மனோரஞ்சிதமானபெண்ணே.

இதுவுமது-விருத்தம்.

சிரிட்டமுகத்தைநேரே திரும்பியென்னாசைதீர
ஏரிட்டுப்பார்த்தோர்வார்த்தை யியம்பினாலிளப்புமுண்டோ
வாரிட்டதனப்பெண்ணேசெவ் வாய்முத்துச்சிந்துமோநின்
பேரிட்டதென்னதென்று பேசுவாய்பேசுவாயே.

வ-ம். கேளாய்பெண்ணே. உன்னுடைய அழகுபொருந்தியமுகத்தைச்சற்றே ஏரிட்டு என்னைப்பார்க்கவா இருதனத்தையுடையபெண்ணே உன்வாயைத்திறந்து பேசாயா பேசினால்உன்வாய்முத்துச்சிந்திப்போகுமோஉன்னுடையபெயரைத்தெரியச்சொல்லுவாய் பெண்ணே.

சுப்பிரமணியர்-கண்ணிகள்-இ-ம்-தோடி

வனக்குறப்பெண்ணே — துலகிவ
மரகதக்கண்ணே — இரசம்பொழி
மதுரிதக்கனியே — எனக்கின்ப
வரிசைமைத்துனியே
கனத்திருமாது — மருவற்றக்
கட்டிச்செந்தேனே — எனையுன்
கண்டுகொண்டுபோராய் — நான்கொண்ட
காதலைதீராய்
பங்கயத்தேனே — மன்மதன்
பகழிசெய்தேனே — நின்மனப்
பாசங்கொண்டேனே — அணைந்திட
நேசங்கொண்டேனே
சங்கீதக்குயிலே — மரகதக்
கனியின்பமயிலே — உன்மனது
தாகங்கொண்டேனே — என்மன
மோகங்கொண்டேனே
ஜெகமகிழ்மாதே — நீயும்வஞ்

சகியேனியாமேகே நவமுறுந்
சரசசெந்திருவாய் யெனக்கொரு
திரமுத்தருந்தருவாய்
சுகமகரதியே நிலவொளி
சோதியாமதியே மன்மத
சுகிர்தசித்தினியே மதுரித
துவரிதனக்கனியே
தினந்தினமினித்தேதன் உனைநான்
தேடியுமலேர்தேன் கொஞ்சியே
செவ்விதழெனக்கு நித்தக்கச
செவ்வமுண்டுனக்கு
அனந்தினங்கசத்தேதன் உனதுநினைப்
புனக்கினக்கிசைந்தேதன் என்னையுன்
அண்டையிற்சேர்ப்பாய் மதன்செயுஞ்
சண்டையைத்தீர்ப்பாய்
ஒழுக்கமுமில்லையோ வாய்திறந்தொரு
மொழியுஞ்சொல்வாயோ என்னையும்
உன்வசஞ்செய்தால் புண்ணிய
முண்டுமெய்தான்
பழிக்குலக்குறப்போ உன்மனம்
பாறையோயிரும்போ காந்திமம
பச்சிலேகிறத்தாய் சசித்தைதயுங்
கச்சினிலமைத்தாய்
சரிவளக்கையா விந்திர
சலிலமெய்யா நின்றிமுஞ்
சாதனையுனக்கே மன்மதன்
பாவேதனையுனக்கே
வரிசைதப்பாதே இனியென்சொல்
மறந்துசெய்யாதே உன்னுடன்
வருந்திநிற்பேனே என்மனை
துறுதிவைப்பேனே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

எட்டாதப்பழமிதுவென்றெண்ணிடாமல்
எட்டியெட்டியண்ணாந்துபார்த்துபார்த்துக்
கொட்டாவிவிட்டதனால் வருவதுண்டோ
கூறுதவார்த்தைகளை கூறவேண்டாம்
ஒட்டாதுநீருரைத்தலுஞ்சும்மா
ஓடிப்போம்நீர்நின்றாலுயிர்க்குமோசம்
கட்டானகுறவரெங்களண்ணமார்கள்
கானகத்தில்வருமுன்னேகடந்திடாயே.

வ-டி- அகோகேளுமையாவேடா நீர்பேசுகிறதைப்பார்த்தால்எட்டா

தபழத்திற்கு முட்டவன்கொட்டாவிவிட்டு அண்ணாந்துபார்த்து ஆசைப்பட்டதுபோலிருக்கின்றது ஆனால் உம்முடைய பேச்சிங்கேநடவாது இதோஎன் அண்ணமார்கள்வருவார் சாக்கிரதையாயோடிப்போம் வேடரே.

வள்ளியம்மனுக்கும்-வேடனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம-பந்துவராளி-ஆதிதாளம்

வள்ளியம்மன்சொல்

ஆருங்காணும் உமக்

கிங்சொன்னதோகபாகம்

நாருமாறிங்கேசெல்லுமோ உன்சம்ப்ர

தாயமென்னைவெல்லுமோ

வேடர்சொல்.

சிறுதேவள்ளிப்பெண்ணே உன்

சிநேகமறவேன்கண்ணே

பாராமற்பேசுகிறாய் சும்மா

பாவையேநீகையைவீசுகிறாய்

வள்ளியம்மன்-சொல்

நில்லாதேதூரநில்லு நின்

விட்டினிலேயிதெல்லாஞ்சொல்லு

வள்ளியென்றறியாயோ சும்மா

வாதுகள்கூறுவதும்நீயோ

வேடர்-சொல்

தள்ளிவிழுந்துன்னை தூரந்

தள்ளவும்போமோஎன்னை

எள்ளளவாகிலுமே என்மேல்

இரங்கிலையோமனமே

வள்ளியம்மன்-சொல்

ஜல்லிப்பேச்சிங்கேசெல்லுமோ உன்சம்ப்ர

தாயமென்னைவெல்லுமோ

புல்லவுரைக்கவந்தீர் அது

போதுமெங்களண்ணர்தான்வருகுவார்

வேடர்-சொல்

சொல்லிற்குறமாதே சிறிச்

சொல்லவும்போகாதே

நல்லாதரவில்லையோ வள்ளி

நாயகியுஞ்சொல்வாயோ

பொது-சந்தவிருத்தம்.

பாங்கிமார்ருடனேசிறந்திடும்பரவைவள்ளிமுன்னேகுகன்
தாங்கிமேலெனவேநயஞ்சொலுஞ்சாயசாம்பிரதாயத்தால்
ஓங்கியேபரனோரமாய்நிழலோடேன்னின்றுமாறியே
வேங்கைமரமாயாகினார்வடிவேலர்மாயமாகவே.

இதுவுமது-முடுகுசந்தவிருத்தம்.

இப்படிமாயவுருத்தொடுவேலரிருக்கையின்வள்ளிமுன்னே
ஒப்பொடுவாட்டிடுவிற்கணைவாரியுறத்துடனேவிரைவாய்
செப்பியவள்ளிகலைக்குறவோர்கள் கடிந்தழுவோர்திரளாய்
கொப்பெனவந்துபுனத்தைவிசாரணைக்கூறியுகந்தனரே

வ-ம். ஆகோதெப்படியென்றால்சுப்பிரமணியவேடரும்வள்ளியம்மனும்பாங்கிமாருந் தர்க்கஞ்செய்துக்கொண்டிருக்கும்பொழுது அந்தவள்ளியம்மனுடைய அண்ணா மார்களுஞ் சிறுகுறவர்களும் தினைப்புனம் விசாரணைசெய்யவந்த தருணங்கண்டு சுப்ரமணியர் சமீபத்தில் வேங்கைமரமாகியிருக்க அண்ணமார்கள்வருகிறவிதம்எப்படியென்றால்.

அண்ணிமார்-வேடர்கள்வருகின்ற தரு-இ-ம்-பரசு
அடதாளம்.

சிலவேடுவர் கானவர் தோன்றினரே.
வலைவேல்கொலைவாள் களைதோளுறவே
வாய்ந்தகெண்டை-நிஜாருஞ்சுந்தர
சாய்ந்தகொண்டை-வசீகரம்பெறு
புலிமான்வருதேபொறுபொறனவே
பொடித்தவுடல்-துடித்திடகணை
வெடித்திடமிக-திடத்துடன்மலை சில
நிழலைதுயர்மாமரமேதெனவே
நினைந்துத்தனி சினந்துத்தினை
கனங்கொண்டுயர் வனங்கண்டெதிர் சில
இதுகாநிலையேமரமேதெனவே
இடித்துப்பற்-கடித்துகை
துடித்துப்பொற்-றடித்துச்சுற்றியே சில

அண்ணமார்குறவர்களைப்பார்த்துச்
சொல்லல்-விருத்தம்.

நேத்தில்லாவேங்கைமர மின்றைக்கேது
நினைத்தவுடன்மாமரமும் வருமோசொல்வீர்
கோத்திரத்திற்பெரியநம்பி ராஜனோடு
கூடவந்தகுறவருமுன்டார்த்ததுண்டோ
ஆற்றின்மனந்தேற்றிவனஞ்சுற்றிப்பார்க்க
அவசரமாயெல்லோரு மடர்ந்துவாரும்
சீற்றமுடன்வேங்கைமர மிதனைநாமுஞ்
சிந்துசிந்தாய்வெட்டொன்றாய்சேர்க்கலாமே.

வ-ம். ஆ-ஆ-வாரும் வேடர்குறவர்களேநேத்தில்லாத வேங்கைமரமின்றைக்குவந்தவிதமென்ன எங்கள் தந்தை நம்பிராஜனும் நீங்களும்வந்தீர்களே அப்போது தினைவிதைக்கும்போதும்பரணைபோடும்போதும் பார்த்ததில்லையே ஆ-ஆ-இதுபுதுமையா யிருக்கிறது இதைவெட்டியொன்றுக்குவிப்போம் வாருங் குறவர்களே (குறவர்-வசனம்)ஆனாலப்படியேபோய்பார்க்கலாம் அண்ணமார்களே.

அண்ணமார்குறவர்களும்வேங்கைமரத்தைப்பார்த்துச்சொல்லல்

பொதுகண்ணிகள் இ-ம்-பந்துவராளி ரூபகதாளம்

வேடர்கோன்நம்பிராஜன்மைந்தருங் குறவரோடு
விளைந்திடுந்தினைப்புனஞ்சுற்றிப்பார்த்தார்

கூடிக்குறவர்பரனுக்கெதிர்சென்றார் வள்ளித்தாயை
கொண்டாடிமாங்கண்டுமெய்மருண்டார்

ஏததிசயம்வேங்கைமரமென்பார் அதிலேயொருவன்
இடித்துபல்லைக்கடித்துக்கோபிப்பான்

மோதிவெட்டென்றொருவன்சொல்லுவான் அதிலேயொருவன்
முறித்துத்தகர்த்துநொறுக்குவேனென்பான்

முந்திவெட்டுவேனென்றொருவன்சொல்லுவான் அதிலேயொருவன்
முளைத்தமரத்தின்வளத்தைப்பாரென்பான்

இந்தமரத்தின்மகிமைத்தஞ்சொல்லுமென்பான் அதிலேயொருவன்
இசைந்தகாதலைப்பார்த்துசொல்வேனென்பான்

வேறொருத்தர்கள்செய்ததில்லையென்பான் குலதெய்வநம்ம
வேலர்செய்குறைபோலிருக்குதென்பான்

கூறும்வள்ளியைவேலர்மணஞ்செய்ய வேங்கைமரமாய்க்
குதித்ததென்றிந்தமகிமைத்தஞ்சொல்லுதென்பான்

விருத்தம்.

மட்டிலாவடிவும்வேங்கைமரத்ததினிமிர்த்தங்கொண்டு
வெட்டவொண்ணாதிங்கின்னம்விவரித்துக்கேட்போமென்று
சட்டமாய்புகழ்ந்துவள்ளித்தாயினைமகிழ்ந்துசொழ்த்தி
திட்டமாய்வேங்கைவந்தசேதியேதனக்கேட்டாரே.

வசனம்

இப்தப்பிரகாரம் அண்ணமார்கள் வள்ளியம்மனைக்கேட்க வள்ளியம்மன்செல்லுகிறவித மெப்படியென்றால்

வள்ளியம்மன்சொல-விருத்தம்.

தண்டமிழ்வல்லீரெந்தன்தமையரேசொல்லக்கேளீர்
வண்டுறைவனத்தில்வேங்கைமரமதுமுன்னேநிருப்ப
துண்டொன்றுமில்லையென்றுமொன்றுநானறியேனிங்கு
கண்டதுமில்லையிந்தக்காரணமறிகிலேனே

வசனம்.

அகோவாருங்கள்ளனதுயிர்க்குயிராகிய அண்ணமார்களேயாஇம்பாங்கிமாரும்பட்சிகள்வராமல்தினைப்புனங்காத்திருந்தோமேயல்ல

துன்பமாயிருக்கிறதென்றும் இல்லையென்றும் நாங்கள் கண்டதுமி ல்லை இதுசமீதாபுதானமயாகவிருக்கின்றது அண்ணமார்களே

அண்ணமார் சொல்-விருத்தம்

நல்லதுநிழலாம்வேங்கை நற்றுணை வள்ளித்தாய்க்கு
அல்லதுவினைவந்தாலு மயிற்குமரேசருண்டு
மெல்லவேமனைக்கேபோறோம் மெலிந்திடாதிருப்பாய்சேதி
சொல்லவேண்டியதெல்லாநீ துரிதமாய்ச்சொல்வாயம்மா

வசனம்.

கேளுநம்மா எங்கள் தங்கையாகியவள்ளித்தாயேஇந்தவேங்கை மரமிருக்கின்றதுநிழலாயிருக்கிறபடியாலிருக்கமட்டும்அப்படியாதொ ருவினைவந்தாலும் நமது குலதெய்வமாகியவேலரிருக்கிறார்நல்லதுஇப் போதுநாங்கள் மனைக்குப்போகிறோம் நீசொல்லவேண்டியதே சதிமெ ல்லாஞ்சொல்லுமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

வேழ்விமலைக்கரசே சிற்றாபின்
வேடுவண்ணமாரே பொருள்
தாழ்வில்லாவாழ்க்கையுள்ள என்னிட
தமயரேநீர்கேளீர்

என்றந்தைதாயாரும் என்னைத்தேடி
ஏங்கியிருப்பார்களோ என்னை
அன்பாய்க்கேட்டாரோ அவ்விடத்தில்
அல்லவருஞ்சுகமோ

அன்னைதந்தையிடத்தில் தங்கைசுக
மாயிருக்கிறதென்று நான்
சொன்னபடிபோலே நீங்கள்போய்ச்
சொல்வீரண்ணமாரே

சேடியர்பாங்கியுடன் தெய்வபரங்
கொண்டுபுனங்காத்து வள்ளி
வாடாமலிருக்காளென்று தந்தைதாய்க்கு
வண்மையாய்ச்சொல்வீரே

மாடப்புறாவன்னமும் குயிலும்
மயிலுடனேகானும் இப்போ
கூடிப்பிரியாமல் நானிருக்கும்
கோலத்தைச்சொல்வீர்களே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

அங்குள்ளஜெனமுந் தந்தை யன்னையுமென்றேனிட்டாந்த
மங்கைமார்திரளுஞ்சூழ்ந்த மனிதருஞ்சுகமோவென்று
இங்கிதத்துடனே வள்ளி யின்பமாய்க்கேட்டாளென்ன
துங்கவில்லுடையீர்நீருஞ் சொல்லுவீர்சொல்லுவீரே.

வசனம்.

அகோவாருங்களண்ணமார்களே அங்குள்ளஜெனமும்தந்தைதாயாருஞ்சுகமோவென்று நான்லட்சந்திரங்கேட்டுவந்தனஞ்செய்தாளென்றுஞ்சொல்லுவீர் அண்ணமார்களே அண்ணமார் வசனம் அப்படியேபோயச்சொல்லுகிறோமம்மா வள்ளித்தாயே.

பொது-விருத்தம்.

ஒன்றியேகுறவரோடு முயர்த்திடுமண்ணமாருந்
சென்றுதன்பதிக்கேபோக ஜெயமிகுதருணமின்றே
வெற்றிசேர்வேலன்கொண்ட வேங்கையின்சொரூபமாறி
மன்றல்மானிடர்போற்பின்னும் வள்ளிமுன்றோன்றினாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் குறவர்களும் அண்ணமார்களுந்தங்கள்பதியாகியசிற்றூருக்குச்சென்றபின்பு இதுதான்சமயமென்றுசுப்பிரமணியர் வேங்கைமரம்வுருவமாறிமுன்போலவேடரூபங்கொண்டுவள்ளியம்மன்முன்வந்து சொல்லுகிறவிதங்காண்க.

வேடர்சொல்-கண்ணிகள்-இ-ம-முகாரி-ஆதிதாளம்

மறக்கமனக்கூடவில்லைவள்ளிமாதே — உந்தன்
மையல்கொண்டுவாடுவேனோநானிப்போதே

உறக்கமும்வருவதில்லைஎன்னசெய்குவேன் — அன்னப்
உன்னையுமிரங்கவில்லைஎன்னசெய்குவேன்

குயில்மொழிவள்ளியேநான்கொஞ்சினேனே — என்னைக்
கொஞ்சிமுத்தந்தந்தணைவாய்வஞ்சிமானே

மயில்போலழகுடைமாகரசே — கூடி
மருவியணையவாராய்மின்னரசே

நம்பினபேர்க்குவஞ்சகஞ்செய்வலாகுமோ — உன்னை
நாடிவந்தநானுமலைக்கலாகுமோ

வம்புசேருங்கொங்கைகண்டுமுண்டுதானே — முத்து
மாலையாய்க்கிடக்கவரம்பெற்றிலேனே

துள்ளுமீன்விழியிலேபட்டமையமாகவே — நாணக்
துலக்கமாய்ச்சிறந்ததில்லைமெய்யதாகவே

வள்ளியுன்முகத்திற்பூசுமஞ்சளாகவே இப்போ
வந்தனே நில்லேயுன் றன் நெஞ்சமதாகவே

வள்ளியம்மன்சொல்-விருத்தம்

வெறும்புளியதனைத்தின்று வீணாய்சாக்கெரிவதல்லால்
வரும்குறியொன்றுமில்லே வாய்புளித்ததுவேமிச்சம்
பருபுலியதும்பசித்தாலபகம்புல்லுந்தின்னுமோதான்
நெருங்கிநீபேசவேண்டாம் நினைத்ததும்முடியாதண்ணே

வசனம்.

கேளாயண்ணே வேடரே வெறும் புளியைத்தின்றால் நாவுரிசரியு மல்லவோ அதினால்வருவதொன்றுமில்லை அப்படி போலப்புலிபசித்தா ல்புல்லைத்தின்னும் ஆகையால் நீநினைத்தது முடியாது வீண்வார்த்தை பேசவேண்டாம் அண்ணே வேடரே

வேடர்சொல்-விருத்தம்

செப்புமலரணையிலுன்னைசேர்த்துக்கொள்வேன்
தேன்மொழியேமதனகாலைத்திறமாய்ச்செய்வேன்
ஒப்பெனவுன்னுயிருமென்னுயிருமொன்றாய்
உகந்தமலர்வாசமும்போலும்பந்துநன்றாய்
தப்பிதமில்லாதிருப்போமென்றேயுங்கன்
தகைமையுள்ளவிலேலாவினை விட்டுநீர்கருமேவெண்பெண்ணே
எப்படியுமுன்கருணையிரங்கியிக்கே
இப்போதேதங்கன்முகர்த்தமிணங்குவாயே.

வசனம்.

ஆ-ஆ-பெண்ணே உன்னை சப்பிரகூடமஞ்சத்தில் சேர்த்துபூவின் வாசம்போல் மன்மதனுடைய லீலையைச்செய்வேன் ஆனால் என்பேரி ல்சந்தேகம்வேண்டியதில்லை அப்படிநம்பிக்கை வேண்டுமாகில்எனது தந்தையின்பேரில்பரவசஞ்செய்து தருகிறேன் மெய்யாய்இதுநல்லதல் லமுகூர்த்தவேளையானபடியால் இணங்கடிபெண்ணே.

வள்ளியம்மன்சொல் கண்ணிகள்- இ-ம் காம்போதி அடதாளம்.

என்னவார்த்தைபேசுகிறாய் அண்ணாவேடா
நான்சகிக்கமாட்டேன்
பின்னையும்வாய்மொழிகேட்கிறாய் இது
பித்தாபயித்தியமல்லவோ

காட்டில்வேட்டைகிடைக்குமோ அல்லாதிந்த
கன்னிவேட்டைகிட்டுமோ

தலைபாட்டிப்பேசுகிறாய் இதற்கெல்லாந்தா
னொட்டாளியல்லவனலை இதற்கெல்லாந்

கொல்லத்தெருவிலூசி வம்பாய்விலை
கூறுகிறாய்பேசி
ஜல்லியும்படியாதே வந்தவழிநீ
தாண்டோகச்சலியாதே

போதுந்துலுக்கத்தெருவில் சன்னாசிபிச்சைப்
போடுவாரெங்குமுண்டோ

ஜாதிமார்க்கந்தெரிந்தும் என்முன்னின்று
ஜண்டிதனம்பேசுகிறாய்

வடுவற்றகுறச்சாதி அதிலேநானும்,
மார்க்கமொருசொல்நீதி

துடுக்குவார்த்தைபேசுகிறாய் இதுதகாது
சும்மாயேனேசுகிறாய்.

வள்ளியம்மன்சொல்.விருந்தம்

வேடரேஎன்முன்னேநீர் வேலனும்மதன்போல்நின்று
ஜாடையாய்பேசிவந்தீர் தாழ்குலமென்றெண்ணாமல்
ஆடகத்தழுத்துவச்ர மதனைபித்தளையிற்பதித்துச்
சூடுவாருண்டோநீர்தான் சொன்னதுதகாதுதானே.

வசனம்.

ஓகோவேடரே தங்கத்திற்பதிக்கின்ற வச்சிரத்தைப் பித்தளையிற்பதித்துச் சூடுவாரா அதுபோலநீரோ உயர்ந்தகுலம் நானோ தாழ்ந்தகுலம்இந்தகுறப்பெண்ணைப் பார்த்தே ஆசைப்படுவது சரியல்ல ஆனாலென்குலத்தின் விருத்தாந்தஞ் சொல்லுவேன் கேளு மண்ணே வேடரே.

வள்ளியம்மன்சொல்லுகிற-ஆனந்தகளிப்பு

இன்னமின்னவிரித்துரைக்கக்கேளு வேட
அண்ணரேயெங்கள் குலவளப்பமெந்நாளும் இன்

காட்டுமான்பிணையதனைப்பிடிப்போம் மாட்டில்
கறந்தபால்மலையிலுள்ளத் தேனமிர்தங்குடிப்போம்
கூட்டிரைச்சிகேட்டுவாய்துடிப்போம் காட்டுத்
துஷ்டமிருகம்வணங்க சொன்னபடிமுடிப்போம் இன்

குழலிற்குள்ளேதழை தரித்துக் கொள்வோம் உறவு
கூடாதபெண்களையுங் கூட்டிவைத்துப்பிரிப்போம்
மழைபொழியதருணையுச்சரிப்போம் தாழை
மடல்குடிலைச்சுமந்து பலமலையிற்சஞ்சரிப்போம் இன்
சங்குமணிபலதுபணி பூட்டோம் குறவர்
தாழ்ந்துபோனவர் தன்னையுங்கூட்டோம்
எங்கள்வித்தையொருவருக்குங் காட்டோம் குலத்துக்
கிசையாதவார்த்தையெவர் சொன்னாலுங்கூட்டோம் இன்

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

கொம்புத்தேன்கனிரசமுங் குடிப்போம்நாங்கள்
கூடாதபெண்களையுங் கூட்டிவைப்போம்
வம்புக்கேசண்டைசெய்யோ மதங்கள்பேசி
வலியவந்தசண்டையையும் விடவுமாட்டோம்
நம்பிசேர்ந்தவரை யடைக்கலமாய்க்காப்போம்
நல்லசங்குமணிபுனைவோ மிதுவேமார்க்கம்
சொம்புற்றேகெம்பாவலிருப்போம்சொன்ன
சொற்றவருங்குறவர் குலத்தோகைநானே.

வசனம்.

கேளுமையாவேடரே எங்கள்சாதியினிடவழக்கம் காட்டில்மிருகசாதிகளைப்பிடித்துச் சுட்டுதின்கிறது மலையிலுள்ள கனிவர்க்கமும் கொம்புத்தேனுஞ் சாப்பிடுகிறது கூடாதபெண்களைக்கூட்டிவைக்கிறதுஎங்கள்தொழிலே மற்றொருவருக்குக் காண்பிக்கிறதில்லைநம்பியடைக்கலமானவரை காட்டிக்கொடுக்கிறதில்லை நாங்கள் தரித்திருக்கிற சங்குமணியல்லது வேறேமணி தரிக்கிறதில்லை அதிலும் நான் மானமுள்ளவள் ஆனபடியால் நீர்பேசுகிற வார்த்தைசரியல்ல போம்போம்வேடரே.

வேடர்சொல்-விருத்தம்.

அறக்கொடுமைசெய்யாத பழிக்காரனின்
அபிபாபழுச்சமர்த்தின் காருமோதான்
உறக்கமில்லையேமனதி லென்னணியென்னணி
உள்ளமெலாமுருகுகடி திரும்பிப்பார்த்து
திருக்கருணைபுரியமனமிருந் போகல்லோ
தெய்வமில்லையோவென்னுன் னிறத்தைப்பாரு
குலக்கொடிநானினைத்தபடியே நானுன்னைக்
குறித்துமணஞ்செய்து நெஞ்சிற்குடிவைப்பேனே.

வசனம்.

அகோகாவாய் என்மனோரஞ்சிதமான வள்ளிப்பெண்ணே நானுன்னைஎத்தனைதரம் வருந்தியும் உன்மனமிரங்காதது என்னஇரும்போகல்லோ ஆனால் எனக்குத்தெய்வமில்லையோ நல்லது நீபேசுகிறது ஒட்டாமல் பேசுகிறாய் இப்போதுன்னைக் கலியாணஞ்செய்யாமல்விடுவேனோஆகிலு மென்நிறத்தைதப்பாரும் வள்ளிமானே.

வேடனுக்கும் வள்ளியம்மனுக்கும் -தர்க்கம்.

கண்ணிகள்-இ-ம் சங்கராபரணம் அடதாளம்.

வேடர்சொல்லல்,

உன்னைமணஞ்செய்துவேன் உன்னைவிட்
டொருப்பக்கம்பான்போவேன் என்னை

அன்னியனென்றுநினைத்துக்கொல்லடாதே-எனக்
காதரவெங்குமுண்டோ

வள்ளியம்மன்-சொல்லல்

ஆதாரமென்றுசொன்னாய் எனக்கிக்
கடித்தகிளர்நீயோ குந்து

பேதகம்பண்ணினால் நான்சகிப்பேனினிப்
பேசாமலோடிப்போபோ

வேடன்-சொல்லல்

ஓடிப்போவென்றுசொன்னாய் எனக்கு
உயிர்நிலையிங்கிருக்க என்னைக்

கூடிக்குலாவிநீகொஞ்சிக்கொண்டால்உன்
குருக்களுக்கேபுண்ணியம்

வள்ளியம்மன்-சொல்

புண்ணியமுந்தவமும் கடந்தனிற்
போனாற்செய்வார்களே இந்,தஆ

ரணயவனந்தனிற்புண்ணியஞ் செய்யென்றால்
யாரிங்குசெய்யப்போறார்

வேடர்-சொல்லல்.

ஆரிங்கேயென்றுசொன்னால் நீயல்லால்
ஆதரவெங்குமுண்டோ என்னைச்

சேரும்படிக்கிநீநம்பிக்கொண்டால்உன்
சினேகமறவேன்பெண்ணே

வள்ளியம்மன்சொல்லல்.

ஆற்றமாட்டாமலே மதிகெட்
டலைகிறும்தொண்ணூந்து சும்மா

பித்தருமற்போவுந்தன் மட்டுமெக்குத்தக்கதாய்
பேசினாற்கோபம்வரும்

வேடர்-சொல்லல்

கோபமுள்ளயிடத்தில் அதிகத்
குணமுண்டேயென்பார்களே மனந்

தாபம்பொருத்தெந்தன் சஞ்சலந்தீர்த்தால்
தன்னாளாயிருப்பேன்

வள்ளியம்மன்-சொல்லல்

தன்னாளாயிருக்க எனக்குநீ
தாய்தகப்பன்கிளையோ பேச

வொண்ணாதேமெத்தமின்னாதே இனி
உன்னாலென்றதைப்பார்

வேடர்-சொல்லல்

நட்டாத்தின்கோரையைப்போல் மயங்கி
நானுந்தயங்கிறேனே சற்றும்
ஒட்டாமற்பேசுகிறாய்கிட்டேசென்மீ
துருககமில்லாததென்ன

வள்ளியம்மன்-சொல்

நற்கனிவேழ்விமலே சிற்றூர்நம்பி
ராஜன்வளர்த்தெடுத்த வர்ன்னப்
பொற்கிளிநானுந்தன்கைக்குளகட்பட்டேனே
போபோகில்லாதே

வேடர்-சொல்லல்

பஞ்சைபறுகிளைப்போல் நானிங்கு
கெஞ்சிநிற்கின்றேனே சற்றும்
நெஞ்சிரங்காமலே பஞ்சமாபாதகி
நில்லாதேபோபோவென்றாய்

வள்ளியம்மன் சொல்லல்

வாய்மதம்பேசாதே உனக்கு
மரியாதைதக்காது சற்றுந்
தாமதஞ்செய்யாமலோடிப்போநீகட்ட
ஜாதகஞ்செய்யாதே

வேடர்-சொல்லல்

தாமதமல்லபெண்ணே உன்னைநான்
தழுவிப்புணரவந்தேன் சும்மா
வாதுபண்ணுமலென்னைக்கிட்டவாவென்றால்
வாய்முத்துசிந்திடுமோ

வள்ளியம்மன்-சொல்லல்

வாயும்வலியாதோ உனக்கு
மனமும்உருகாதோ நான்
ஓயாமலேசியும்சேரவஷமில்லாமலே
உன்மனம்பேசுகிறாய்

வேடர் சொல்லல்.

தாவித்தயங்கிறேனே கெஞ்சித்
தவித்துமயங்கிறேனே இனி
நீவைத்தவிடுவிளக்குமென்றேநில்லை
நிற்கவும்பேர்வைத்துக்கொள்

வள்ளியம்மன்-சொல்லல்

கோரணிசெய்யாதே இதுவரைக்
கோபம்பொறுத்திருந்தேன் இனி

ஆமென்றும்பாராமல் பாங்கியென்ரவிட்டு
அடித்துவிரட்டச் சொல்வேன்

வேடர்-சொல்லல்.

அடித்திடவென்றுசொன்னால் எனக்கு
அவளவும்லட்சம்பொன்னே
பிடித்திடுமெட்டுக்கு மண்சுமந்தேதமிடிப்
பெற்றதுஞ்சொக்கரன்றோ

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

நற்குணத்துடனே நீயு நடந்துபோவல்லவென்றால்
தர்க்கம்பண்ணுகியெந்தன் தமையன்மார்வருவார்வந்தால்
விற்கரத்துடையவரானால் வெட்டுவார்முகம்பாராமல்
மற்குறியெதிர்நில்லாதே வருங்குறிசொன்னேனண்ணே.

வ-ம். கேளாய் அண்ணேவேடரே என்னோடுநீ தருக்கம்பண்ணுகி றது சரியல்ல எனது அண்ணமார்கள்வருவார் வந்தால் அம்பாலெய்து கொல்லச்செய்வார்கள் ஆனபடியால் தப்பித்துப்போயண்ணே.

பொது-விருத்தம்.

கொடியிடைவள்ளிமிக்க கோபமாய்வேடர்முன்னே
துடிபதாய்வார்த்தைசொல்லித் தூரப்போவென்றபோது
கடிமலக்கடப்பந்தான கணவளைசுமந்தசெட்டி
வடிவதாய்வள்ளிமுன்னே வந்தெதிர்தோன்றினாரே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் வேடரை தூரப்போய்விடௌ ன்றுசொல்ல சுப்பிரமணியர் வேடனுவிருந்த வுருமாறி வள்ளிமுன்பு வளையல்விற்குஞ் செட்டியைப்போல வருகிறவிதங்காண்க.

வளையல்செட்டி-வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

வளையல்செட்டியும்வந்தான்-வள்ளிமுன்பாக
வளையல்செட்டியும்வந்தான்

அநுபல்லவி.

கிளைகிளையாய்த்தொங்கும் வளையல்பொதியினை
கீர்த்தியுடனெடுத்துப் பார்த்துத்தோளினிலிட்டு வளைய

சரணங்கள்.

தலையிற்பாகையுமணிந்து நெத்தியில்நாமம்
தான்விளங்கவேதுணிந்து
கிலேயாய்க்கம்பிளிதனை நேத்தியுடன்போத்தி
நீணிலமாதருக்கு நேராய்வளையலிட
திகதிகென்றுபல வளையல்கொண்டுவிலே
ஜெகதலந்தனிலே குகனுநாமங்கூறி
திகழுங்காகத்தி லிருக்கும்வள்ளியிடம்
மோகத்தாகவிலே கூறியேவரும் வளைய

வளையல்செட்டி-வளையல்விற்கும்-கண்ணிகள்.

இ-ம-சுருட்டி-ஆதிதாளம்.

வளையல்செட்டி-சொல்லல்

கனகவளை நீலவளை கொள்வீரோபெண்காள்
கறுத்தவளை பச்சைவளை கொள்வீரோபெண்காள்
மனதிற்கொத்தரத்நவளை கொள்வீரோபெண்காள்
வரிசையோடுதனங்கொடுத்துக் கொள்வீரோபெண்காள்

வள்ளியம்மன சொல்லல்.

கொள்கிறேன்காண்வளையல்செட்டிநில்லுநில்லுங்காண் இப்போ
கோலவளையலிதோகொள்ளவாரேன்காண்
தெள்ளுந்தினமாவுந்தாரேன் வளையல்தொடுங்காண் கவரைச்
செட்டியேபரணிரங்கி யிதோவந்தேன்காண்

வளையல்செட்டி-சொல்லல்

மடியிற்கொடியேகுறமாதேகிட்டவேநேராய் நல்ல
வார்த்தைகளைப்பேசியென்ற னருகினில்வாராய்
கொடியிடையேவள்ளிமாதே கையைநீட்டடி உந்தன்
கும்பமுலைசோடெனக்குச் சற்றேகாட்டடி

வள்ளியம்மன்-சொல்லல்

அடியேபாங்கிமின்னார்களேசேதிகேட்டீரோதான இந்த
அகந்தையானவளையல்செட்டி மிரட்டிப்பேசுறான்
பிடியடிபாங்கிமார்களே இவனையே நீங்கள் பொல்லாப்
பித்தனைப்பிடித்தப்படித்தள்ளிவிடுங்கள்

வ-ம. அகோவாருங்களடி பாங்கிமார்களே இந்த வளையல்செட்டி சொன்ன அகந்தையானவார்த்தைகளைப் பார்த்தீர்களா அடா வளையல்செட்டி என்னவார்த்தைபேசினுய் நல்லதாகட்டும் அப்பாலேபோடா.

வள்ளியம்மனுக்கும்-வளையல்செட்டிக்கும்

சம்வாதம்-கண்ணிகள்-செளராஷ்டிகம்

அடதாளம்.

வள்ளியம்மன்-சொல்லல்

வாடாவளையல்செட்டித் தினைப்புனத்தில்வந்ததேது
போடாவிசுருக்காகவென் புகழண்ணர்கள்வருவார்

வளையல்செட்டி-சொல்லல்

வந்தால்வளையல்தாரே னுந்தன்மணிவாயிசைந்தால்
கந்தனருளுண்டு அடி கானக்குறமானே

வள்ளியம்மன்-சொல்லல்

கந்தனருளிருக்க நீதானுஞ்சொல்லவேண்டும்
இந்தமுரட்டுவேடா எங்களண்ணர்வெகுசூரர்

வளையல்செட்டி-சொல்லல்

ஞானக் காலேலாளிவேலனுக்குக் ஜோடுமுலைத் தினமயில்
மாரன்செயும்வினை தீர்த்திடு மாதேநீயிப்போதே

வள்ளியம்மன்-சொல்லல்

கெறுவுக்கோடுவாதுகூறிய கவரைச்செட்டி நீதான்
திறஞ்சொல்லிநீமுடியாதா தெண்டாலடிப்படுவாய்

வளையல்செட்டி-சொல்லல்

அடித்தாலுனையிருகக்கட்டி யணைப்பேனடிமானே
பிடித்தபிடிவிடுவதில்லைப் பேதகம்நினையாதே

வள்ளியம்மன்-சொல்லல்

துடிக்கசெட்டியுந்தனிட துடுக்குசொன்னவாயை
அடக்கும்படிசெய்யவெங்க ளண்ணமார்கள்வாரார்

வளையல்செட்டி-சொல்லல்

குமரர் தம்மையழைத்தாலடி கூறுவேன்டிவளையல்
பருவமுள்ளமாதேயிளம் பாவைபசுந்தேனே

வள்ளியம்மன்-சொல்லல்

கூறுதடாசெட்டிமலைக் குகையிலொளித்திருடா
மாறுகவேளன்னனணை மார்கள்வருவார்கள்

வளையல்செட்டி-சொல்லல்

சீகதமாமலைக்குகையி லொளித்திடவேசொன்னாய்நீயே
மாதேயிதவார்த்தைக்கெல்லா மயங்குவேனோ

பொது-விருத்தம்.

மூர்க்கமிகுங்குறவரிங்குவருவாரென்றும்
முதுகடிமேலடிநெருங்கிவிழுமேஎன்றும்
தீர்க்கமுடன்வளையல்செட்டிதனக்குச்சொல்ல
சேனையுடனக்கணத்திற்குறவர்வந்தார்
மார்க்கவள்ளியஞ்சிநின்றாளங்கேவேலர்
வளையல்செட்டிகோலம்விட்டுமாதவம்போல்
ஆர்க்குமெய்யென்றிருந்திடவெண்ணீறுஞ்சாத்தி
ஆண்டாரைப்போற்குறவர்முன்னாடினாரே.

இதுவுமது-விருத்தம்.

பஞ்சுபோற்றலைநரைத்துவுடற்கருத்து
பற்றியேநடுநடுங்கிக்கிழவன்போல
மிஞ்சிவெகுதலங்களெல்லாஞ்சுற்றிவந்த
மிகுந்தபோதனரெனவும்வேடங்கொண்டு
மஞ்சள்வெயிற்றாங்காதகுடைபிடித்து
மாத்திரைக்கோலேந்திவரும்வழிதள்ளாடி
தஞ்சமென்றேகுறவர்முன்னாண்டாரையா
தண்டூன்றிக்கொண்டாடித்தான்வந்தாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வள்ளியம்மனிடத்தில் வளையல்செட்டி வாதாடிக்கொண்டிருக்குஞ்சமயத்தில் அவிடத்தினைப்புனத்திற்கு குறவராகிய அண்ணன்மார் வருவதைக்கண்டு வள்ளியம்மன் பயந்துநிற்க அப்போது வளையல்செட்டியாயிருந்த சுப்பிரமணியர் குறவர்முன்பு ஒருபெரியபண்டாரக்கிழவனைப்போல் உருவங்கொண்டு வருகிறவிதங்காண்க.

பண்டாரக்கிழவன்வருகிற தரு-இ-ம்

மோகனம்-ஆதிதாளம்

வேலர்பாசாங்குகொண்டுவந்தார்கிழவனைப்போல
வேலர்பாசாங்குகொண்டுவந்தார்
சாலமறிந்துயிந்த்ர ஜாலம்புரிந்திடும்வி
சாலம்பெரும்பண்டாரக் கோலங்கொண்டுதள்ளாடி வேல

முத்தித்தேகம்பழுத்துத்தண்டுகொண்டூன்றிப் பெரு
மூச்சுவிட்டிடவாய்மருண்டு விழுந்துகால்கள்
தெத்தித்தத்திமெள்ளக்கிடந்து நூறுவயது
சென்றகிழவன்போல்நடந்துபண்டாரம்போலே வேல

காதில்குண்டலங்களும்பூட்டி கிழிந்துமெத்தக்
கந்தலாமொருகாவிவேட்டி புனைந்துவேடர்
பேதைமயங்குமபுத்திகாட்டி குவலைமொழிப்
பேசிக்குறவர்களமுன்காசிப்பண்டாரம்போல வேல

கன்னத்தோடுகன்னங்களொட்டி பற்களெல்லாம்போய்க்
கடைவாய்வழியேஎச்சில்கொட்டி உன்னியுன்னியே
குன்னிருமற்பொருமல்மூட்டி சினேற்பங்கண்ட
கூனிக்கிழவன்போலக்காணக்குறவரிடம் வேல

காசிக்குவடக்கேநான்சென்றேன் ஆகையாலிந்த
காலின்மூளையற்றுவரணமேன் அப்போநீங்கள்
பேசிக்கொண்டிருந்ததுகண்டேன் என்றனைக்காத்து
பெருகும்புண்ணியஞ்செய்தால் முருகனுண்டென்று வேல

விருத்தம்.

கவடுருவாய்குமரகுருகிழவனைப்போல்
கம்பூன்றிப்பாசாங்குகாட்டிநின்று
நவமிகுந்தவேழ்விமலேகம்பினைமந்தர்
தன்கையில்விபூதிகொடுத்தாரப்போது
சிவசிவாவென்றணிந்துகொண்டுஐயாவெம்மைத்
தேடிவந்தகாரியமேதென்றாரங்கே
பவமகலக்கன்னியாகுமரிதீர்த்தமாடிப்
பலம்பெறவந்தோமெனவும் பகர்ந்திட்டாரே.

வ-ம் இந்தப்படிசுப்பிரமணியக்கடவுள் கிழவனைப்போல்வடிவங்கொண்டு கையில்தடியூன்றி குறவர்முன்புவந்து அவர்களுக்கு விபூதிகொடுக்க அவர் நெற்றியிலணிந்துகொண்டு சுவாமிநீரெத்துப்பெரியவராயிருக்கிறீரே எங்களைத்தேடிவந்தகாரணமென்ன பண்டாரக்கிழவன் நான்கன்னியாகுமரி தீர்த்தமாடிப் பலம்பெறலாமென்று வந்தேனென்றுசொன்னார் அதன்பின் கிழவர்கள் கேழ்க்கிறவிதமெப்படியென்றால்.

குறவர்சொல் வசனம்.

சரணம் சரணம் அகோவாரும் சுவாமி பெரியவரே நீரெந்தஸ்தலங்கள்போய்வந்தீர் அதையெங்களுக்கு தெரியச்சொல்லுமையாசுவாமிபெரியவரே.

கிழவன்சொல் விருத்தம்.

கண்டிகதிர்காமம் வடகாசியாரூர்
கதியருணைத்தலத்திருவேரகமுமற்ற
எண்டிசையிலுள்ள தலமெல்லாஞ்சுற்றி
இசைந்துவந்தோமிவடமதிலதிகசேவை
உண்டுகன்னியாகுமரித்தீர்த்தந்தோய்ந்தால்
உடற்றேறுங்கவிதிருந்து சென்றுகண்டு
கொண்டுவந்தால்நல்லதென்று மெள்ளவேகிக்
கொள்கையுடன்வந்தேனிதை குறித்திடீரே.

வ-ம். கேளுமம்மா குறவர்களே நாம்கண்டிகதிர்காமம்காசிமுதல் பலதலங்களுஞ் சுற்றிவந்தேன் இவ்விடம் கன்னியாகுமரி இருக்கிறதாய்ச்சொன்னார்கள் ஆகையால் இங்கே கன்னியாகுமரிக்குவந்தஇடத்தில் உங்களைக்கண்டேனப்பா குறவர்களே.

குறவர்கள் அண்ணமார்கள் சொல்விருத்தம்.

நாங்கள்செய்தபாக்கியந்தானோ நாதவேநாந்தனைநீர்
தோங்குபூம்புனத்திலெங்கள் குலதெய்வம்போலேவந்தீர்
பாங்குறுங்கரடிசிங்கம் பாதைமீதும்மையென்றுந்
தீங்குசெய்யாமலிங்கு சேர்ந்ததுதன்மைதானே.

வசனம்.

அகோவாருமையா சுவாமி நாங்கள் செய்தபாக்கியமோ எங்கள் வனத்திற்கு குலதெய்வம் போலேவந்தீர் ஆனால் இந்தவனத்தில் கரடிபுலிகளும்மை வழியில்பட்சிக்காமல் விட்டது மெத்த நன்மையாச்சுது உம்மைக்கண்டது நாங்கள்செய்த புண்ணிய வசனந்தானையா பெரியவரே.

குறவர்சொல் கண்ணிகள் இ-ம் ஆகிரி-அடதாளம்

பாவேபண்டாரசுவாமி ஆண்டவரேசந்யாசி மாரே
செய்ததவமுந்தானோவெங்கள் தெய்வம்போலும்வந்தி ரையா
வெகுதூரம்போயலைந்து வேர்த்திளைத்துவந்தி ரையா
ஜெகமீதிலும்மைப்போற் பரதேசியெங்குகாணே மையா
நாங்கள்செய்தபுண்ணியந்தானோ நாடியேவந்தீ ராண்டாரே

நீங்கில்லாதெங்களுக்காக்குந் தெய்வம்போலும்வந்தீ ரையா
கந்நியர்குமரிபாட்டாகாடுகாட்டலைகு வீரோ
உன்னையிரும்பும்போதுங்கள் உயிர்போவதாகுதே சுவாமி
தன்னந்தனியேவனத்தில் சார்ந்துவந்திரெங்க ளிடம்
சாவுகிறகாலமிங்கே தாங்லேப்போவ தையா
கானகத்தில்நாங்களும்மைக்காக்கவுந்திற மில்லையோ
தேவரீர்க்குறங்கபோதே செய்திடும்பாவங்கள் போச்சு
வேள்விமலைவேடர்நாங்கள் வேலவர்க்கடிமை யாகும்
தாழ்வில்லைபரிபாலனைக் குறசாதிநாங்களதி காரி
ஆண்டாரே நீரிங்கேவாருமஅடிமைநாங்கள்சொல்லக் கேளும்
தண்டாவிளக்கெரிந்தாப்போல் சொல்கிறோம்போற்றி கேளும்
வள்ளியம்மைறோர்தங்கையுண்டு குறவஞ்சிமனதன்பு முண்டு
மெள்ளமெள்ளவாருந்தினை விளைவிதனைப்பாரு மையா

வ-ம். ஆகோவாருமையா பண்டாரசுவாமி நீர் இப்போதுசாவுகிறகாலத்தில் கந்நியாகுமரிக்கு எங்கே அலையப்போகிறீர் வேண்டாம் எங்கள்தங்கைவள்ளிநாயகி தினைப்புனத்தைக்கொண்டிருக்கிறாள் அவளுக்குநீர் தெய்வம்போலக் கூடத்துணையாயிருந்தால் நீர்கேட்டதெல்லாந்தருவாள் இப்போது அங்கேபோவோம் தினைப்புனத்துக்குவாருஞ்சுவாமி.

பண்டாரக்கிழவன்சொல் விருத்தம்.

வள்ளியெனும்பெண்ணொருத்தி யங்கேயுண்டு
வளர்ந்ததினைப்புறமென்றீர் வனமுமுண்டோ
கள்ளமொழியோகமோ சொன்னீரந்தக்
கானகத்திற்றுவளத்தைக் காட்டியென்னை
மெள்ளமெள்ளநடத்தி விளையாட்டுக்காட்டில்
வேளையிலத்தச்சிமாட்டி முன்னேவிட்டு
தள்ளிவில்லென்றிகழாமற் காக்கச்சொன்னால்
தருமமுண்டுகுறவர்குலத் தலைவமாரே.

வசனம்.

ஓகோகுறவர்களேதலைவமாரே அங்கேவள்ளியென்றபெண்ணொருத்தியிருக்கிறாளோ தினைப்புனமும்வுண்டா நிஜமாயிருந்தால் அந்தவள்ளியிடத்தென்னைக் கூட்டிச்சென்றுவிட்டு நான் கேட்டதெல்லாந்தரும்படிசெய்தால் அவன்கூடநானுங் காவலிருப்பேன் வேடர்களே.

குறவர்கள் வசனம்.

அப்படியேநல்லபாக்கியம் வாருமையாகிழவனாரே.

அண்ணமார்வள்ளியம்மனுக்குச்சொல்விருத்தம்.

கூவுமயிலேவள்ளித்தாயே
கோகிலமேயோர்வசனங் கூறக்கேளாய்
ஆவேசம்போல்நடுநடுங்கியுடற்றள்ளாடி
யாண்டார்பண்டாரநம்மையடுத்துவந்தார்

பாவம்வரும்கிழவனைநிந்திப்பாதே
 பரண்மீதுவைத்தவர்தான் கேட்டதெல்லாம்
ஓவியமேதாழ்வராமற்கண்பார்த்திங்
 குதவுவையேஎங்கள்தங்கை வள்ளிமானே.

வ-ம். கேளுமம்மா எங்கள் தங்கையாகிய வள்ளித்தாயே நாங்க ளொருவாரமதைசொல்லுகிறோம் இச்சப்பெரியவர்மகாவுத்தமர் இவரைநீகூடப்பரண்மீதுகாவல்வைத்துக்கொள்ளுநு இவரைநிந்திக்காதே இவர்மெத்தத்தள்ளாதவர் செவ்வையாய்ப் பார்த்துக்கொள்ளுமம்மா தாயே.

வள்ளியம்மன்-வ-ம்.

அப்படியேநல்லபாக்கியம் எனதுஅண்ணமார்களே
 பொது-கண்ணிகள்-இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்

ஆண்டாரைப்பணிந்தடியாற்றிவைத்து
 காத்திடுநீயென்றார்
அறிவுடையநம்மைமந்தர்குறவர்களுந்
 திறமுடனேசென்றார்
தூண்டாமணிவிளக்கின்சுடரொளியாள்
 வள்ளியுஞ்சம்மதித்தாள் அங்கே
தொண்ணூறுவயதுசென்றகிழவன்முன்னே
 பரணைவிட்டுக்குதித்தாள்
ஒப்பாருமில்லையிந்த கிழவனுக்கேயென்
 றெதிர்ப்போய்க்கண்டாள் நல்ல
ஒருமைபுள்ளபெரியவரென் றுகந்துவள்ளி
 மனதிலன்புகொண்டாள்
தப்பாமற்றமையர்சொல்லைத் தள்ளாமல்
 புகழ்ந்துவள்ளிமின்னாள் ஆண்டார்
தன்னைவொருபரண்மீதி லுன்னியேறு
 மென்றுவள்ளிசொன்னாள்

வள்ளியம்மனுக்கும்-கிழவனுக்கும்-ஏசல்-கண்ணிகள்
இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்
வள்ளியம்மன்-சொல்லல்

பருத்துறத்துப்பழுத்த தொந்திப்பண்டாரப்
 பெரியகிழவனாரே
பலவீட்டிலன்னமொன்றாய்ப்பசியறிந்து தீரும்
 போசனஞ்செய்வீரே
விருத்தரேநீரிளைத்தீரே வெகுநேரம்
 பசிபொறுத்தீரையா
வெற்றிமலரடிபணிந்தேன் சற்றேபொறும்
 பசிதீர்ப்பேனமெய்யா

பண்டாரக்கிழவன்சொல்.

ஆட்சியுன்னழகானதோ ஆதிலட்சுமியே
  அமாரபதிபோவள்ளி
அன்னமேயென்வயிற்றுப்பசியுன்னைக்கெஞ்ச
  விட்டுத்தொந்தன்னிநியே
தாட்சியில்லைகுகனருளாற்றழைத்திருப்பாயாக
  பென்பசியைபத்திரப்பாய் இந்தத்
தருணமுள்ளவேளையிலேயருமையாமென்
  னுடல்தேற்றிக்காப்பாய்

வள்ளியம்மன்-சொல்.

நல்லன்தயாபண்டாரமேநானுமக்குப்
  பசிதீர்ப்பேனென்றேறன் தினை
நற்கதிர்கொய்தேமிதித்து அக்கரையாய்
  நான்தருவேனின்றே
வல்லிமுத்துபோற்கலந்தமணிபிடித்த
  தினைக்கதிரைக்கொய்வேன் காவின்
மடக்கிமிதித்தேபொதியைவாரிக்குத்தி
  உமிபோகச்செய்வேன்

பொது-மேற்படி-கண்ணிகள்.

தங்கவளைகுலுங்கமெள்ளத்தான்சிரித்து
  மாவிடித்தாள்வள்ளி இரு
கொங்கைகள்குலுங்கவிடைதுவளவோங்கி
  செந்தினைமாவுந்தெள்ளி
பொங்குரசனைத்தேனைவிட்டுபுனிதமுடன்
  பிசைந்துண்டைசெய்தாள்
பொசியுமையாவென்றுவள்ளிபசிபொருந்தும்
  கிழவனுக்கேகொடுத்தாள்

இதுவுமது-விருத்தம்.

தின்னுமிகுந்தேக்கிலேயுங்கொண்டுவந்து
  தினைமாவைவைத்துவள்ளிதேவிதானும்
உண்ணுமென்றுன்பண்டாரக்கிழவன்வாங்கி
  ஒருவுண்டைமாபுசித்தவுடனேயெந்தன்
கண்விழிகள்பிதுங்குவதுவாய்க்கசக்குதென்ன
  கபடமோவல்லதுவென் காலந்தானோ
தண்ணீர்கேட்குதுவயறகலக்குதென்றே
  தயங்கிவள்ளிமுன்னுவாறிமயங்கினாரே

இந்தப்பிரகாரம்வள்ளியம்மன்பரனைவிட்டுக்கீழிறங்கிபண்டாரத் தைக்கூப்பிட அவர்பசிக்குதென்ன நல்லதுபசியைத்தணிக்கிறேனென்று வள்ளியம்மன் தினைக்கதிர்கொய்து குற்றிமாவாக்கி தேன்விட்டார்

ப்பிசைந்து உருண்டைசெய்து தேக்கிலையில் வைத்துக்கொடுக்க பண்டாரஞ் சாப்பிட்டவுடன் தொண்டை நெருக்குது வாய்கசக்குது நன்று தியங்கி தியங்கி தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிற விதங்காண்க.

பண்டாரக்கிழவன் சொல்கண்ணிகள்-இ-ம் காம்போதி

அடதாளம்.

தண்ணீரில்லாமற்றவித்துப்பறக்குதென்னாவி உன்மேற்
சத்தியமாய்நாவைச் சுற்றிவறட்டுதே பாவி
உண்ணுவதண்டுவுழன்றுநெடுமூச்செறியுதே உடல்
ஒட்டிப்பல்லோடுபற்கிட்டியென்னாவிகுறையுதே
பித்துக்கொண்டாற்போற் கிறுகிறுத்துத்தலைசுற்றுதே பத்தி
பேதகமாய்ச்செவியடைத்துத்தொண்டைநீர்வற்றுதே
முத்துத்தண்ணீர்தாகமெத்தவெடிக்குதேபாதகி என்னை
மோசஞ்செய்யக்கூடிப் பேசினதோஷங்காதகி
மாப்பலகாரமென்றென்னத்தைதயோகொடுத்தாயே முழு
வஞ்சகஞ்செய்தெனை மிஞ்சிக்குடிகெடுத்தாயே
வேப்பிலைபோலக்கசக்குமோ தேன்றினைமாவும் வெறி
மீறுமோதொண்டைக்குள்காறிச்சுழலுமோநாவும்
ஆதிவிதித்தவமைப்புமிவ்வளவுதானோ ஓடி
அஞ்சியொளித்தாலுங் காலனசும்மாவிடுவானோ
ஜாதிஜனமென்றுவிவ்வேளை யென்னுயிரைப்பேணும் நானுந்
தன்னாலேகிடந்துசாகிறேனேஎந்தன்கன்மமே

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்.

தடுத்துரைசொல்லாதவர் குறவரோடுன்
தமையமாரெல்லாரு மெனைத்தான்கூட்டி
அடைக்கலமென்றுன்னிடத்தில்விட்டதற்கோர்
அவகேடாய்மாவெனவே நஞ்சைத்தந்தாய்
திடுக்கெனநான்சுபாவம்போல் வாங்கியுண்டேன்
செவியடைத்துக்கண்ணிருட்டி இருமல்விக்கல்
எடுக்குதடிபாவிதண்ணீரெனக்குத்தாராய்
இன்னமனமிரங்கிலையோ யென்செய்வேனே.

வ-ம். கேளாய் வள்ளிப்பெண்ணே உன்தமையன்மார் குறவர்களும்என்னக்கு இந்தவசனஞ்சொல்லி உன்னிடத்தில் விட்டது யோசித்தால்நீயும் அவர்களும் என்னமோ பேசிக்கொண்டு எனக்குத்தேன்தினைமாவென்று விஷத்ததைக்கொடுத்ததாய்க் காணுகின்றது அதைநான் மெய்யென்றுவாங்கி சாப்பிட்டதின்பிறகு செவியடைக்குது கண்ணிருட்டுகிறது இருமல்விக்கல் எடுக்கிறது ஆனதால் இப்போதாவது மனமிரங்கி தண்ணீரெனக்குத் தாராய்பெண்ணே வள்ளி

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

நன்மையேநாம்செய்தாலு நடனஞ்சேர்கலியுகத்தில்
துன்மைபோல்விளைந்ததென்றூர் திருவுளமிருக்குதையா
உன்விதியல்லவெந்த னூழ்வினைவிதிதான்நீரும்
என்முன்னேவந்தபோதே எனைச்சனிதுடர்ந்ததன்றே.

வ-ம். வாருமையா சுவாமி பெரியவரேயிந்தக் கலியுகத்தில் நான் நன்மைசெய்யத் துன்மையேவரும் உம்மைவெறுக்க வேண்டியதில்லை ஆனால்என்விதிவச மப்படிஎனனிடத்தில் நீர்வந்தபோதே என்னைச் சனிபிடித்ததுபோற் காண்கிறதையா பண்டாரமே.

வள்ளியம்மன்சொல் கண்ணிகள் இ-ம் புந்நாகவராளி
அடதாளம்.

முந்தோர்சொற்றவறுமற் காக்கவரற்கோகிழவனாரே நீரும்
முழுதும்பாவியென்றென்மேற் பழியைப்போடுகிறீராண்டாரே
காத்துபரணமீதமைக்க தூக்கிவிட்டபல்லபேர்ச்சோ சொம்புக்
காட்டுக்தேன்விட்டமாவைக்கசக்குதென்று சொல்லவுமாச்சோ
பிழைத்துபோகட்டென்று பேணிப்பார்த்ததும்பொய்யோ தேனி
பிசைந்தமாவைநஞ்சென்றே இசைந்துசொன்னீரிதுவுமெய்யோ
மழைத்தவளையைப்போல் வாயைப்பிளக்கிறீர்ஆண்டவரே சும்மா
வம்புக்கோதினைமாவை நம்பித்தந்தேன்கிழவனாரே
தருமபுண்ணியத்திற்குத் தண்ணீர்சுனைகாட்டுவேன்வாரும் இது
தப்பாதுவழுமலைக்கப்பாற்போகோம் வாரும்நீரும்
அருமையுடனேபின்னால் அவிழ்ந்துவாரும்கிழவனாரே உமக்
கன்புடனேதண்ணீர்களைக் காட்டுவேன்பெரியோரே.

வ-ம். அகோவாரும் பண்டாரக்கிழவனாரே இந்தக்காடு கடந்து போனால் மலையருகிலொருசுனை இருக்குது என் தருமத்திற் கதைகாட்கிறேன என்கூடவாரும் ஆண்டார்கிழவரே

பண்டாரஞ்சொல் வசனம்.

நல்லதுபேத்தி அப்படியேவருகிறேன் இந்தக்காட்டில் அநேகம் கரடி புலி சிங்கம் பலமிருகமிருக்குது அதுகளைக்கண்டாலெனக்குப் பயமாயிருக்கும் உனக்குப்பயந்தானே யிருக்கும் நாம்எப்படி போகிறதுபேத்தி.

வ-ம். ஆனால்கேளுமையா எங்கள்ஜாதி சகலமான மிருகங்களைப் பிடித்துசுட்டுதின்கிறது இந்தமிருகங்களைக்கண்டால் எனக்குபயமிருக்காது எனக்குஆனையை மாத்திரங்கண்டால் மெத்தபயமுண்டாம்ஆகிலும்இந்தக்காட்டில் ஆனையில்லை பயப்படாமல்வாரும் பெரியவரே.

பண்டாரக்கிழவன் வள்ளியம்மன கண்ணிகள்
இ-ம் புந்நாகவராளி அடதாளம்.
பண்டாரக் கிழவன் சொல்.

கர்மமோதண்ணீர்த்தாக மெத்தயெடுக்குதடிபேத்தி
காட்டைகடந்துசுனைகாட்டிதண்ணீர்தந்தால்நேத்தி

வள்ளியம்மன்-சொல்.

ஆகட்டும்பண்டாரகிழவரே என்பின்னேவாரும் அம்மா
அந்தமலைக்கப்பா லிருக்குதுசுனைபாரும்

பண்டாரக்கிழவன் சொல்

ஆனபடியால்வாறேன் அன்னமேவுன்புண்ணியந்தான் எந்தன்
ஆயாசந்தீரவேநீர்தந்தால் புசிப்பேன்நான்றான்

வள்ளியம்மன்-சொல்

எகிக்காடுஞ்சுனையெல்லாங் கடந்தோமினித்தேனும் இங்கே
இருக்குதையாசுனைபெருக்கத் தண்ணீருண்ணவாரும்

பண்டாரக்கிழவன் சொல்

இந்தச்சுனையிற்றண்ணீர்பாச்சி யிருக்குதுவேண்டாமே மெள்ள
இறங்கிக்குடிக்குஞ்சுனைஎனக்குக் காட்டினாலுண்ணலாமே

வள்ளியம்மன் சொல்

நிந்தனைசெய்துதண்ணீரைப் பழிப்பாரோ ஆண்டாரே
நிறுத்தியப்பால்நல்ல தண்ணீரிருக்குதுண்ணுவீரே.

பொது விருத்தம்

அப்பாற்போய்நல்லதண்ணீர்கண்டேயாண்டார்
அன்புடன்றண்ணீரை யள்ளியருந்தும்போது
எப்பிளப்புந்தணையடங்கி வெளியேமெள்ள
ஏறுதற்போதுடன் நடுக்கமெடுத்துத்தள்ளக்
குப்புறவேவிழுந்துகரை யதைவிட்டங்கு
கொண்டகசந்தனியழுதிங் கூகுவள்ளி
தப்பிஉயிர்போகுதடி யெனைஉன்கையால்த்
தழுவியெடுத்தேகரையிற் காரென்றாரே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் சுனையைக் காண்பிவைக்க ஆண்டார் கிழவர்தண்ணீர்குடித்து தாகந்தீர்ந்து வெளியேவருகிற சமயத்தில் கால்தள்ளாடி விழுவோரைப்போல் பாசாங்கெடுத்து தண்ணீயில் முழுகியெழும்பி குகுவென்று இதுதருணம் கையைக் கொடுத்துஎடுத்து விடுவாயென்று சொல்ல வள்ளியமமன் சொல்கிற விதங் காண்க.

வள்ளியம்மன்-பண்டாரஞ்சொல் விருத்தம்.

இதுநமக்குவாய்ச்சனியோ பாடுதானோ
இக்கிழவன்சுனைதனிலே விழுந்தானேயோ
மதமிகுந்தபண்டாரக கிழவனாரே
வாருமெந்தன்கைபிடித்து வகையாயிப்போ
பதியுடனுன்கைத்தொடுமுன் குளிர்ந்தேமெய்யிற்
பதட்டமெல்லாந்தீர்ந்ததென்றன் பாக்கியம்பெண்ணே
தகிப்பிந்துதண்ணீர்தந்தாயே யெந்தன்
தாகந்தீர்ந்ததுமோகந் தவிட்டாய்நீரே

வசனம்.

ஆ-ஆ நல்லகாரியம் நல்ல காரியம் இந்தக்கிழவனாலே நமக்குத்துன்பம் நேரிட்டது ஓகோமசம்பிடித்தவனே இப்படியுந் தண்ணியில் விழலாமா இந்தாரும் என்கையைப் பிடித்து கரை ஏறுங் காணும்பண்டாரம்) ஆ-ஆ பெண்ணே உன்கையைதொட்டு மேலேஏறிவந்த பிறகுஎன்சரீரங்குளிர்ந்து தாகமுந் தீர்ந்தது இப்போ உன்மேல்மோகங் கொண்டேன் என்மோகத்தை தீர்ப்பாய் பெண்ணே.

பண்டாரகிழவன் சொல் கண்ணிகள் இம்

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

தாகந்தணிந்தாயே புண்ணிய
தருமத்தின்சேத்தவடானியே
மோகந்தவிர்ப்பதற்கு ஒரு
மூலிகையுன்னிடத்தானுண்டு
என்னைக்கிழவனென்றே நிந்தனை
யெண்ணுமற்குடித்தழுவேநன்மை
சொன்னபடிகேட்ப்பேன் நீயுன்
சொல்வதற்கெல்லா முள்ளாயிருப்பேன்
களபங்கயினமெனக் குடங்
கையிலத்துத்தபூவமனம்
இளக்கிட்டவருவாய் எனக்
கின்பககலவிநலந்தருவாய்
விரகாக்கினிமீறி பெய்
மெலிவம்தல்லாங்கடைக்கண்பாராய்
சருகாயுலர்வேனே மூந்தத்
தந்தனைத்தேகட்டிச்சேரனே
மேலசிருபைசெப்வார் இந்த
மேதினியோரெல்லாம் போற்றிசெய்வார்
வாலைக்குமரிப்பெண்ணே குற
வள்ளியெனைவருத்தாதேகண்ணே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

இ-ம் புன்னாகவராளி-ஆதிதாளம்.

இன்றுயென்னபேச்சுரைத்தாய் குற
யேந்திழைவள்ளியென்றெணணுமல்
நின்றதுசாதனையோ என்ன
நீதிசொன்னுயடாபாதகனே
போகமெல்லாங்கெட்டுதே கெட்ட
புத்தியுனக்குப்பிடிபட்டுதே
நீதியில்லாதபடு பாவி
நில்லாதேநயிந்தவிடத்தைவிடு

நீண்டாதபாவியைப்போ நீயுஞ்
செய்ததவமெல்லாந்தீவினையோ
வேண்டாம்பற்கெபலஞ்சாதே நீயும்
வீண்செல்வப்பிள்ளைபோற்கெஞ்சாதே
நரைத்துபுலச்சைகெட்டு இன்று
நாளையிற்சாகிறநாளைவிட்டு
வெறுத்தமொழியேது சிவ
வேடமுனக்குப்பலியாது

வள்ளியம்மன்-சொல்-விருத்தம்.

பேசாதேநரைக்கிழவா எதிர்நில்லாதே
பிச்சைகொளும்பரமபரையாண்டிநீயல்ல
ஆசாரமேதுசிவவேடமேது
அறிவுகெட்டமூடனுக்கது தங்காது
ஏசாமலேசியும் பின்போவதில்லே
எத்தனையோசொன்னாலும் ரோஷமில்லை
கூசாயோவீண்கிழவா உனக்கேனிந்த
கொஞ்சபுத்தி நினைந்ததினாற்றூடாதென்ன

வ-ம். ஓ-ஓ பேசாதேகிழவா பிச்சைக்குவந்த ஆண்டிபெண்டுக் காசைபட்டது போல் இருக்கிறது நீர்பெரியவராயிருந்து சிவவேடம் பூண்டும் உனக்கு இதுதகாது நான்சொன்னபோதிலும் அறிவு ஆண் ...ல அறிவு கெட்டவனாயிருக்கிறாய் உன்னுயநினை விங்கேமுடி. ...வந்தவழியே நடவும் பண்டாரக்கிழவனாரே.

பொது-விருத்தம்.

மந்திரமாயுருமட்டி வேளன்மோக
வசையுரைத்துவள்ளியுஞ்சம்மதியாதாலே
எந்நவிதஞ்சொல்வோமென றெண்ணியெண்ணி
ஏமாந்தனக்கிசைந்ததுணை வனை
தந்திமுகக்கணபதிவந்திடத்தியானித்தார்
சண்முகன்கோபந்தவிர்க்கும்படியாய்மேரு
முந்திவந்ததெனகருநமாதெதிரேவந்து
மும்மதகுஞ்சரசொரூபமுழக்கினாரே

இதுவுமது-சந்தவிருத்தம்

சூதுநினைந்ததுபோலேயெழுந்ததிர் சோதனையின்படியே
சோபிதகொம்பிருபாலொளிர்ந்திடசூல்முகில்சென்றதுபோல்
மேதினிகொண்டியாசேடனடுங்கிட வீரமிகுந்திடவே
மீறியடர்த்துவுதாரநற்கெங்கர வீசுநெடும்பனைமேல்
மோதியெழுங்கிரிநீடுமாங்கள் சமூலமதிர்ந்திடவே
மோகமனங்கொள்கு காதிபணின்புறமோடிசெயுங்குறமான்
ஆதரவொன்றுமிலாதுபயந்தனை வாவெனவஞ்சொல்வே
ஆடுமுழக்கிமதகரமிஞ்சியயானையும்வந்ததுவே

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுக்குச்சுப்பிரமணியர் அனே கவிதஞ்சொல்லியும் கேளாமல்வள்ளியம்மன் கோபித்துப் புனத்திற்குப்போகிறசமையத்தில் சுப்பிரமணியர் இனியென்ன செய்வோமென றுதனக்குமூத்தோனாகிய கணபதியை நினைக்க அப்போ விநாயகர் ஆனையுருவங்கொண்டு வள்ளியம்மன் முன்வருகிற விதங்காண்க.

ஆனைவருகிற தரு இ-ம் சன்னியாசி ஆதிதாளம்.

கடகரிவந்ததுவே — மதம்பொழி
கடகரிவந்ததுவே

கடகரிவந்தது அடவிநெருங்கியே
வடிவினெடுங்கிரி முடியதிரும்படி
இருபுறமுங் கவியும் சிறந்திடுச்
சிறுசுளகின் செவியும் கிரியென்ப
பருக்குமினுஞ் சிரமும் துளையொடு
வரிபொருவுங் கரமும்

விரைசிலுறைந்திடும்-விரையில்மரஞ்செடி
முறிவுபடும்படி-அதிரநடந்தெதிர்
மலையின்விலங் கிடவே உயர்ந்திடுப்
மழையினமுழ்ந் திடவே வளந்தனில்
கலகமதும் விடவே வள்ளிநெ...
தலைநிநடுங் கிடவே

குலவுமதம்பெறுஜலதிநிதம்பொழி
திலகமலங்கிர்த முதலில்விளங்கிய

ஆனைவருந் ததியும் சிறந்துறு
மேன்மையுறுங் கதியும் தெரிந்திடும்
கானவரு புனமும் கலைமசை
மானுமுடும் பினமும்

வானவரும்பயமாயெதிரஞ்சுட
யானைபெருங்குறவோர்மகள்கெஞ்சிட

விருத்தம்.

மதியெறிந்தகடலென விரிட்டேசிறி
மாதமாரிபொழிந்தானைவரவேண்டு
பதரிவள்ளிநடுநடுங்கியறிவுகுன்றி
பஞ்சபூதமுங்கலங்கிபதைத்துவாடி
கதறியிருகாலொடுகால்பின்னிச்செய்ய
கண்களினீர்சொரிந்திட_வேலாயுதாவந்
துதவுமுமக்கபயமென்றேகிழவன்பின்சென்
றேடியோடிப்பயந்தே யொளிக்கின்றனே

வ-ம் இந்தப்பிரகாரம் விநாயகமூர்த்தி யானைரூபங்கொண்டுவருகிறதைப்பார்த்த வள்ளியம்மனானவள் நடுநடுங்கிப்பயந்து வேலாயுதக்கடவுளை நினைத்துவாடி பஞ்சபூதமுங்கலங்கி பண்டாரக்கிழவன் பின்னேஓடிவந்து சொல்லுகிறவிதமெப்படியென்றால்.

பண்டாரக்கிழவன் வள்ளியம்மனுக்குச்சொல்.

விருத்தம்.

தீட்டியவேல்விழிமானே குறவர்மாதே
செத்திடநீசுனையில்முன்னந் தள்ளிப்பின்னுங்
காட்டியென்னைக்கொடுப்பதற்கோ பிறகேவாராய்
கள்ளிகொடாதென்னைநீ கபடஞ்செய்தாய்
மீட்டினம்நான்செய்தேனோ கிழவனாரே
மேகம்போலானை மிரட்டுதையா
ஆட்டமிதுகொள்ளாதே போராடாதே
அடைக்கலங்காத்தென்றுயர மகற்றுவீரே

வ-ம் ஓ ஓ-குறப்பெண்ணே முன்னம் நீசுனையில்சாகும்படியாகச்செய்தாய் இப்போது காட்டிலிருக்கும்யானையைக் கூட்டிக்கொண்டு என்னை அதின்முன்காட்டிக்கொடுக்கவந்தாய்எனைத்தொடாதே என்கிட்டவும்வராதே நில்லாய் பெண்ணே வ-ம் ஆனால்பண்டாரசுவாமிகளே நான் உம்மிடத்தில் மீட்டிமை செய்ய வில்லை இப்போது கறுத்தமேகம்போல் ஒருயானை விறிட்டு என்னைக்கொல்ல வருகிறதுகைகால் நடுக்குது இவ்வேளை உம்மிடம் அடைக்கலமாய்வந்தேன் இப்போதென்னைக்காத்துஇரட்சிக்கவேண்டுமையாசுவாமி.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்

இ-ம்-கண்டா-துருவதாளம்

ஐயரேகிழவனாரே எனக்
கன்புள்ளபண்டாரசுவாமி
மெய்யெலாம்பதறுதேயானை என்னை
மிரட்டுதேநான்என்னசெய்வேன்
வீறிடுதேஎன்னசெய்வேன் ஆனை
விழுங்கவருதேஎன்னசெய்வேன்
ஆரிடத்திற்செல்வேனையா எனக்
காதரவுநீரேமெய்யா
வீசித்துதிக்கையால்வாரி ஆனை
விழுங்கவருதையாமீறி
பாசமுற்றிங்கென்னை நீரும் இங்கு
பார்த்தெனதுகவலைதீரும்
புணர்ந்திலென்னைக்காக்கொணாதோ நானும்
புலையுலைத்தீர்க்கொணாதோ
துணிந்துவந்துயானைக்கஞ்சி மெத்தத்

தஞ்சமென்றேனுமைக்கெஞ்சி
மதயானையைவிலக்குமையா உந்தன்
மைந்துனியாகிறேனையா
இகமாயென்னைக்காப்பீரானால் உமக்
கோர்த்தக்கொழுந்தியுமாவேன்
கடகமதவானையேக எந்தன்
கண்முன்னேதோற்றுமற்போக
உடனேநீ விடைச்செய்தால் உனக்
குகந்தபெண்டீராவேனையா

பண்டாரக்கிழவன்சொல்-மேற்கடி-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-துருவதாளம்

காரியங்கைக்கூடிமட்டும் பெண்ணே
கைவசமாகிறேனென்பாய்
வீரியமாய்நீர்த்தபின்பு நானு
மேவுவேனோபோபோவென்பாய்
ஆறுமுகவேலர்மீதில் பெண்ணே
ஆணையிட்டுத்தந்தாற்போதும்
கூறியெனக்குக்கைபோட்டுந் தந்தால்
கொண்டமனம்போலாகட்டும்

வள்ளியம்மன்சொல்-மேற்படி கண்ணிகள்.

சுப்ரமண்யர்பேரிலாணை உந்தன்
சொந்தப்பெண்டீரானேனுனே
தப்பாதுந்தன்கிருபைகாணும் ஆனை
தன்னையும்விலக்கவேணும்

பொது-விருத்தம்

திடத்துடன்கட்டியானைச் சிறவேபயந்துவள்ளி
அடைக்கலமெனறுண்டாரை யாவியந்தழுவிக்கட்டி
தடித்தெழுதமையமுந்தத் தளிர்க்கைபாலணைத்தபோதே
தொடுத்ததுமுடித்தோமென்னத் துள்ளினன்கிழவன்றுனே

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மனை யானை துரத்திக்கொண்டுவருக வள்ளியம்மன் பண்டாரக்கிழவனிடம்போ யடைக்கலமாகப்பண்டாரக்கிழவன்வேலர்மேற்சத்தியஞ்செய்யச்சொல்ல அதுபோல்வள்ளியம்மன்பெண்டீராகிறேனென்று சத்தியஞ்செய்து கட்டிக்கொள்ள நினைந்ததுமுடிந்ததென்று அப்பால் பண்டாரக்கிழவன் ஆனையைப் போகச் சொல்லுகிறவித மெப்படியெனறால்.

பண்டாரக்கிழவன்சொல் விருத்தம்.

இமையவரன்பாற்போற்று மிறைவனேனனச்செழுத்த
தன்மயனேசோதியேநீர் சார்ந்திடுந்திருவையாமேல்
கமலமின்வள்ளியெந்தன் கைவசமானாளிப்போ
சமயமிச்சமயங்கண்டுன் தலமதில்லேகுவீரே.

வ-ம். அகோவாரும் எனதுதமையனாகிய யானைமுகக் கடவுளே நானினைத்தபிரகாரம் இந்தவள்ளி என்கைவசமாகிவிட்டாள் ஆகையால்இப்போதுநீர்மது தலத்திற்குப்போய் விடும்தமையனே.

ஆனைசொல்-வசனம்.

ஓகோகேளாய்வேலா அப்படியேபோய் வருகிறேனப்பா.

பொது-விருத்தம்.

கிழவன்போல்வந்தவேலன் கிளருந்தனசொரூபங்காட்டி
நில்லெனத்துடர்ந்தேயின்று நினைந்ததுமுடிந்ததென்று
இளமையில்வள்ளிதன்னோ டிணங்கினானையன்கையால்
தழுவினார்மதன்போகந் தாங்கினாரோங்கினாரே

இதுவுமது விருத்தம்.

பால்மொழிமாதினைத் தழுவியணைந்துமப்போ
பகடிவிளையாடினன்றாய்ப் பழகிச்சேரும்
வேலனமருட்டிய வேடரெல்லாம்விட்டு
மெய்ச்சொரூபங்கொண்டு வடிவேலுந்தாங்கிக்
கோலமயிலும்பனிரெண்டாய்ந்த தோளுங்
குளிர்ந்தகண்களீராறு முகங்களாறுஞ்
சோலையிளங்கிள்ளைவள்ளி முன்னே தோன்ற
தொடுக்கின்றார்திருக்காட்சி கொடுக்கின்றாரே.

வ-ம் அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பண்டாரக்கிழவன் வள்ளியம்மனைக் கூடிப்புணர்ந்து தான்நினைந்தது முடிந்ததென்றுசந்தோஷமடைந்து இனிமேல் நம்மிடவரலாறு தெரியவேண்டுமென்று மயில்வாகனரூடராய் ஆறுமுகமும் பன்னிருகையோடு தன் சுயரூபத்தைக் காண்பித்து வள்ளியம்மனுக்குக் காட்சிகொடுக்கிற விதங்காண்க.

சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்குக்
காட்சி கொடுக்கும் தரு இ-ம் நாதநாமகிரியை
அடதாளம்.

காட்சிகொடுத்தார் சுப்பிரமணியர்
காட்சிகொடுத்தார்
காட்சிகொடுத்தாரே தாட்சிவராமலே
ராச்சியம்பணியுஞ் சாம்பராச்சி-வள்ளிமுன்னே
கோலமயிலும்-பனிரெண்டுதோளுங்
குலாவியசேவலும்-கொடிருங் கடம்பும்

வாலகுமாரம்-தாகவேலீலாவி
சாலகுருபரவேலா-தெரிசனை காட்சி
பூரணசெங்-கமலக் கருணாகர
பூர்த்தியுமர்திரு-நேத்ரவிசாலமும்
காரணமெய்க்-திருநீரணி-கோலமுங்
காட்டியேசதிர்பெறத் தீட்டியவேலவர் காட்சி
காட்டினிலேவரும்-வேடுவராய்ச்-சொற்
கபடம்பொருந்திய-மானிடரா-யுரு
வாட்டுங்கிழவ-வடிவினராய்க்குற
மாதேவுனைச்சேரும்-நாதனு-நாமெனக் காட்சி

வள்ளியம்மன்போற்றி விருத்தம்.

சரவணபவனேபோற்றிச் சடாக்ஷரமுதலேபோற்றி
சரதலசமலாபோற்றிக் கழுகுமாமலையேபோற்றி
அரகரமுருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
வரமுனிக்குருவேபோற்றி வரதனேபோற்றிபோற்றி

வ-ம். ஓம் அரகரமுருகா சரவணபவனே சடாக்ஷர சொரூபாக முகாசலா ஆறுமுகக்கடவுளே குறுமுனிக்கு குருவாய் விளங்காநின்ற வரதனே போற்றிபோற்றிசுவாமி.

இதுவுமது-துதிவிருத்தம்.

வேறுபேதகனைத்தேனுதாவுந்தன்
வித்தையறியாமலென் பெண்புத்தியாலே
கூறினதுந்தெரிந்து தெரியாதுமுன்செய்
குற்றமுநீர்பொறுத்தெனை யாட்கொள்வாயையா
ஆறுமுகனேகுகனே எனைத்தான்சேர்ந்த
அருமைமணவாளா வென்னையாமெய்யா
தேறுதலாயடியாளைக்காத்தே யுன்றன்
தெரிசனைதந்தருளு தவுந்தேவதேவ.

இதுவுமது விருத்தம்.

ஆவலுடனெந்தனைப்பெற் றெடுத்ததந்தை
அன்னையுமுனசெய்த பெறும்புண்ணியந்தானோ
காவலெனத்தினைக்காகக் வரும்போதேநான்
கண்டகுகனபலனோகவலை தீர்ந்தேன்
கூவுமயிலேறியதற் சொரூபங்கண்டேன்
கூடிவிளையாடியணைந்திடவும் பெற்றேன்
மேவியதீவினைதீர்ந்தே நினதுபாதம்
வேண்டினேனென்னையுமுழ தாண்டிடீரே.

வ-ம். சரணஞ் சரணமென்பிராணநாதரே நான்பெண் புத்தியால்தங்களைத்தெரியாமற் சொன்னகுற்றத்தை பொறுத்து பூரணக்கிருபைபுரிந்து என்னைதமது சொந்த மனைவியாக்கிக் கொண்டு அடியா

லைக்காக்கவேண்டும் சுவாமி ஆ-ஆ-என்னைப்பெற்றெடுத்த தந்தைதாய் செய்தபுண்ணியந்தானோ அல்லதுநான் இனைக்காக்க வரும்போதுகண்டசகுனப்பலன்தானோ தங்களை மயில்வாகனரூடராயுங்கண்டு கூடியணைந்திடவும் பாக்கியம் பெற்றேன் நான்செய்த வினையும்தீர்ந்தேன்உமதுபாதார விந்தத்தை நாடினேன் என்னைமுழுமையும்ஆட்கொள்ளுஞ்சுவாமி பிராணநாயகரே.

வள்ளியம்மன்சொல் கண்ணிகள் இம் புன்னாகவராளி

ஆதிதாளம்.

சோதியேசுடரொளியே ஆதிநாயகர் என்னைச்
சொந்தமென்று சேர்ந்தணையவந்தநாயகர்
கோதிலாதக்சேர்வைதந்து என்னையாண்டவா நான்செய்
குற்றமெல்லாம்பொறுத்தென் மேலன்புபூண்டவா
அன்றிலும்பேடும்போலென்னை யணைந்துமருவுவாய் உம்மை
அகன்றிடாதிருக்கநீர் கிருபைதருவாய்
மண்டலந்தன்னிலேநானு மறப்பதில்லையோ இனி
மறுந்தொருஜென்மமில்லாமல் வரமருள்வாயே.

சுப்பிரமணியர்சொல் கண்ணிகள் இம் புன்னாகவராளி

ஆதிதாளம்.

கோதிலாக்கங்கைக்கரையிற் கூடினோம்பெண்ணே நீ செய
குற்றமெல்லாம்பொறுத்தின்பந் தேடினோம்பெண்ணே
தீதில்லா மற்றோர்ஜெனனத்தீங்குவாராதே வள்ளித்
தேன்மொழியேயுந்தனிடச் சிந்தைமோசாதே.

சுப்பிரமணியர்சொல் விருத்தம்.

ஆதியிலேதிருமாலின் மகளாயுன்னை
    ஆரணங்குகமலமகட் பெற்றாள்நீயும்
மேதினியிற்சரவணப்பொய்கையிலேஎம்மை
    மேவுதர்க்குத்தவம்புரிந்தா யீதறிந்துமுன்னஞ்
சீதமடமானவயிற்றிற் பிறப்பாய்வேடா
    தெரிந்தெடுத்துவளர்த்திடுவார் சேர்வோமென்றேன்
ஓதியேசொற்படிபோலே வந்தோமிங்கே
    உகந்துமிருதனந்தழுவி யுகந்தோம்பெண்ணே.

வ-ம். அகோகேளாய்பெண்ணேவள்ளி ஆதியில் நீ திருமாலின் மகளால் மகாலட்சுமி பெற்றாள் நீ பருவமானதின்பிறகு சரவணப்பொய்கையில் என்னைப்புணரும்படி தவஞ்செய்தால் அப்போதுநாம் உன்னிடத்தில்வந்த இந்தஜெனனந்தி லுன்னைச்சேருகிறதில்லை நீ கானகத்தில்மான்வயிற்றிற் பிறந்து வேடர்களெடுத்து வளர்ப்பார்கள் அப்போதுன்னைச் சேருவோமென்றேன் அதுபோலவிந்தக் கங்கைக்கரையில் உன்னைச்சேர்ந்தோம் பெண்ணேவள்ளி(வள்ளியின்வசனம்) ஆனால் தங்களுடைய விபரமும் என்னுடைய விருத்தாந்தந்தெரிந்துக் கொண்டேன் மகாசந்தோஷமாச்சுதுதினைப்புனம் [illegible]

வோம்வாரும் சுவாமி (சுப்பிரமணியர்-வசனம்.) நல்லதப்படியே நீமுன்னேநட இதோபின்னால் வருகிறேன் பெண்ணே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் சுப்பிரமணியரும் வள்ளியம்மனும் கூடிப்புணர்ந்து பூர்விகத்தையும் சொல்லியபின் வள்ளியம்மன் சுவாமியைத்தினைப்புனம் அழைக்க சுவாமிமுன்னே போய்விடு நான் பின்னால்வருகிறேனென்றுசொல்ல அப்போதுவள்ளியம்மன் தினைப்புனம்வரும்போது அவ்விடம் பாங்கிமார் அம்மனைக்கேழ்க்கிற விதங்காண்க.

பாங்கிமார் வள்ளியம்மன்சொல் கண்ணிகள்

இ-ம் குறவஞ்சி ரூபகதாளம்.

பாங்கிமார்-சொல்.

முன்னமேபோனவளு மின்னேயென்னசெய்தாய் உந்தன்
முகம்வாடி இருப்பதென்ன முளைந்தசேதிசொல்வாய்

வள்ளியம்மன் சொல்.

கன்னல்மொழிப்பாங்கியரே கானகத்திற்சென்றேன் அங்கே
கானல்சலந்தேடிக்காணாய் விடாய்கொண்டேன்

பாங்கிமார் சொல்

இதுவரையிலெங்கேபோனாய்த் தெரியச்சொல்வாயம்மா போன
இடந்தனிலேநடந்தசேதி யியம்பிடுவாய்சும்மா

வள்ளியம்மன்-சொல்

கதிபெறுநன்னீர்ச்சுனையங்கிருக்கவுமேகண்டேன் நான்
களிந்திலேநீராடக் கானகத்திற்சென்றேன்

பாங்கிமார் சொல்

வஞ்சியேவனக்குயிலே வலியகுறமாதே இப்போ
மங்கைபனின்கணசிவந்த மாக்கமேதிப்போது

வள்ளியம்மன் சொல்

கொஞ்சுங்கிளிபாங்கியரோ கோதையரேகேளீர் காட்டில்
கொடுரமானவெயிலதிற் கண்சிவந்துதடிதோழீர்

பாங்கியர் சொல்

நங்கையரேவுன்றனத்தினக்குறிகளேது அதை
நன்றாகவெங்களுக்கு நவிலுவாயிப்போது

வள்ளியம்மன் சொல்

மங்கையரேமார்பிற்குறி வந்ததுந்தெரியாதோ இப்போ
வண்மையுடன்செடிமுள்பட்டால் வடிவுந்தோணுதே

பாங்கியர் சொல்

உயிர்க்குயிராய்நாமிருந்தே றொளிக்கின்றாயே இங்கு
உள்ளதுசொல்லென்றாலுன் முகஞ்சுளிக்கின்றாயே

வள்ளியம்மன்-சொல்.

இயற்கைபோ லிதுவுங்களுக்கார்சொன்னார்கள்மதியோ காட்டில்
ஏகினதில்நீங்கள்சொல்லவெனதலையின்விதியே.

பாங்கியர்சொல்-விருத்தம்.

மைமுகில்போலிருண்ட குழல் சரிந்தவாறும்
மணிவயிரமணிந்தவச்ரவளைக்கெல்லாங்
கைகழுவியிருப்பது போற் காணும்வாறும்
கந்தியேவுன்னிகழ்வெண்மைகாட்டும்வாறும்
செப்பசெழுங்கமல முகக்கொங்கையின்மேற்
செங்கைநகக்குறியழுந்தித் தெரிந்தவாறும்
பொய்யுரையாதெமக்கு முன்னநிஜமுந்தாகம்
புகலுவாய்பூவையரே பொருந்தத்தானே.

இதுவுமது-விருத்தம்.

காதளவுமாய்த்தமத்ததேறுங்கயற்கண்ணியுந்தன்
கள்ளமெல்லாம்
ஏதெனவுங்கேட்பதென்னதாய்மாமன்குலத்தெரியா
ரெடுங்குமுணவோ
பேதமையாற்செய்தசிறுபிள்ளைகுற்றம்பொறுக்காத
பிதாவுமுண்டோ
சோதனைநான்செய்யவில்லைநடந்தசேதியொளியாமற்
சொல்லுவாயே.

வ-ம். கேளாயம்மா வள்ளித்தாயே உன்னுடையகூந்தல்சரிந்தும் கைவளையல்நழுவியும் உன்னிகழ் வெண்மைநிறமாகியும் இரண்டுகொங்கையின்மேள் நகக்குறியும் இவ்விதமாயிருக்கிறபடியால் எங்களுக்கு ஒளியாமற் சொல்லுவாய் உன்னுடைய கள்ளமெல்லா மெங்களுக்குத் தெரியும் தாயாருடன் கூடப்பிறந்த மாமன் குலந்தெரியாதா அப்படி போலநீ செய்ததெங்களுக்குத் தெரியாதா பிள்ளைசெய்தகுற்றம் பிதா பொறுக்கவேண்டும் நடந்தசேதியைச்சொல்லுமம்மாதாயே.

வள்ளியம்மன்-விருத்தம்.

உயிர்க்குயிராய்நாமிருந்துமெனதுநெஞ்சம்
உள்ளதுதெரியாதோ உண்மையோத
சகிக்கிலையாயென்னை இனிப்பழித்தவார்த்தைத்
தான்கேட்கவிதிவசமோ சகியேபெண்ணே
பயில்குணமாய்ப்பேசாதே ருசுவாய்க்கண்டால்
பகர்வதன்றேவீண்பழியைபகரலாமோ
ஜெபிக்கஉன்னால்முடிந்திடுமோ போபோவென்ன
சேதியுமசொல்லியதேடியரே திறமாய்த்தானே.

வ-ம். கேளும்பாங்கிமார்களே நாமுயிர்க்குயிராயிருந்தும் என்மனமுங்களுக்குத் தெரியாதநிஜவார்த்தையைச்சொல்ல என்னைநீங்கள் நாவுக்கேத்தபடி சொல்லலாமா அதுமென் தலைவிதி வசந்தான் நீங்கள்

அப்படிக்குச் சொல்லவேண்டியதில்லை யாதொருகாரியமுங்கண்ணினுல்நுட்பமாய்ப்பார்த்தால் சொல்லுவதல்லாமல் பார்க்காமற் சொல்லக்கூடாது இதுகளையெல்லாமனதில் நினையாமல் சொல்லலாகுமோ பாங்கிமார்களே.

பொது-விருத்தம்.

நாணமின்றிவள்ளியும் பாங்கியர்கள்முன்னே
நானறியேனென்றுமென் நவிலும்போதே
வாலிபவேலவர்வேட ரூபங்கொண்டு
மாந்தளிரொன்றேநீவரும்வழியிலென்றன்
பாணமதுபட்டுருகி யொருமானுங்கள்
பக்கம்வந்ததடத்தையான் பார்த்தும்வந்தேன்
காணீரோமானழகீரெனத்தெளிந்த
கள்ளனெனத்தாதியருங்கருதினரே.

வ-ம். இந்தப்பிரகாரம் பாங்கிமாரிடத்தில்வள்ளியம்மன்தர்க்கஞ்செய்துக்கொண்டிருக்க அவ்விடத்தில் வேலாயுதக்கடவுள் ஒருவேடுவர்வேடமெடுத்துக் கையில்வில்லம்புகொண்டு புனத்தில்வந்து பாங்கியரிடம் எனதுமானொன்றடிபட்டுங்களிடம்வந்ததோவெனக்கேட்க அப்போது பாங்கிமார்கள் இவன்கள்ளனைப்போலிருக்கு தென்றெண்ணிக்கொள்ளும்போது வேடனுய்வந்தவேலர் சொல்லுகிற விதங்காண்க.

சுப்பிரமணியர்-வேடருக்கும்-பாங்கிமார்க்கு
சம்வர்தம்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-அடதாளம்.

வேடன்-சொல்லல்

கைக்கணையாலெய்த மானிங்கேதான்வரத்
கண்டதுண்டோகிள்ளைகாள் சும்மா
கள்ளத்தனமில்லாமலுள்ளதைச்சொல்லுங்கள்
கன்னியரேபிள்ளைகாள்

பாங்கியர்-சொல்.

திக்குத்தடுமாறியிங்கே யொருமானுந்
திகைத்துவந்ததென்றுயண்ணே இப்போ
தீனமாய்நீசெய்தமானிங்கேகாண்கிலோம்
திரும்பியேபோய்விடுமண்ணே

வேடன்-சொல்.

எக்கிளக்கிநடந்தோடியேவர்தமான்
இங்கேவிட்டெங்கேபோகும் சும்மா
இல்லையென்றுற்றடஞ்சொல்லாதேவீணே
இதுபொல்லாப்பாகும்

பாங்கியர்-சொல்லல்.

அக்கரையாய்சொன்னாய்முக்கியமாயெங்கள்
அண்டையிலேவர்துவேடா உன்சொல்
அடுக்காது இங்கேகொடுக்காதுவீண்சண்டை
அண்ணே நீகள்ளனேடா

வேடன்-சொல்.

எள்ளளவாகிலுமெண்ணிநீயாராமல்
என்னைக்கள்ளனென்றாய் நான்
எய்தமானிங்குவராமலெவ்விடம்போம்
இயம்பிடுவீர்நன்றாய்

பாங்கியர்-சொல்.

உள்ளங்கைக்குள்ளேநீ வைகுந்தக்காட்டுகிறாய்
உள்ளதுந்தக்காது வீணாய்
உக்கிக்கிரணம்பொட்டெகியுநீயிங்
குரைத்தமான்சிக்காது

வேடன்-சொல்.

ஆரணங்கேவந்தமானையொளித்தும்
அறிகிலோமென்றுரைத்தீர் இது
அநியாயமல்லவோஎன்மான்சிக்காதென்றீர்
அதைநீங்கள்விட்டிடுவீர்

பாங்கியர்-சொல்

காரணமாகவேநீயெய்தமானுக்குக்
கால்ரெண்டுகையுமுண்டோ இரு
காதும்பொன்னோலையுங்கோதுங்குழலும்
கழுத்திற்பணியுமுண்டோ

வேடன்-சொல்.

மங்கையரேசகியேயொருகாரியம்
வாக்கினிற்பேசநன்றே நீ
வழுத்தியசொற்படிஎந்தன்மானுக்கு
வகையுண்டுரைப்பேனின்றே

பாங்கியர்-சொல்லல்.

இங்கேயுரைத்திடுவோமென்றுசொன்ன
தெனக்குத்தெரியுமண்ணே இது
ஏர்க்காதுந்துனுக்கிடுக்கமும்வந்திடும்
இதுநீதியல்லவண்ணே

பாங்கியர்சொல்-விருத்தம்.

தனித்துரைக்கவேண்டுமென்று சொன்னீர்நதச்
சமாசாரம்யானறிவேன்சாற்றிக்கேளும்
இனித்தமொழிவள்ளியும்நீர் சுனைக்குப்போன
இடத்தினிலேசேர்ந்தணைந்ததென்னாசூதோ

மனத்திடமோமாயாமிதோ வுதவியான
　　மாதரில்லாமற்புணர்ந்தால் மருங்கோசொல்லாம்
உனக்கும்வள்ளி தனக்குமொருவகைவராமல்
　　உயிர்க்குயிராய்வாப்பதெவருரைத்திடாயே

வ-ம். ஓகோகேளுமையாவேடரே நீர்எங்களுக்குத்தனித்துசொல்வேனென்ற சமாச்சாரம் எங்களுக்குந் தெரியும் எங்கள் வள்ளியம்மனைநீர் சுனைக்குப் போனவிடத்தில் சேர்ந்தணைந்தீரே என்னசூதோஇது என்னமாயமோ நாங்களில்லாமல் நீர்புணர்ந்ததுமரியாதையோஉங்களிருவருக்கும் யாதோ இடரில்லாமல்காக்கப்பட்டவர் யாவர்சொல்லுமையாவேடரே.

பாங்கியர்சொல்-விருத்தம

மைக்குழல்சோர்ந்திருவிழியுஞ்சிவப்பச்செங்கை
　　வளைநெரியவிருவரொன்றாய்மருவும்போது
பக்கவலுவாயொருவரில்லாவிட்டால்
　　பலபேர்க்குந்தெரியயதிற்பகைவந்தெய்துஞ்
சிக்கெனவெம்மிடத்திலிதுசொல்லொணாதோ
　　தேவிவள்ளிக்கெங்கள்மனந்தெரிந்திடாதோ
அக்கரையோவெமக்கினியேன் வீண்பொல்லாப்பு
　　அனுபவிப்பீர்வருவதும்பட்டறிகுவீரே.

இதுவுமது-விருத்தம்

நடந்தகாரியங்கள்முன்னே நடநத்தைக்சொல்லிபென்ன
துடர்ந்தயானையைத்தன்குத்திச் சொல்லினாள்மறைப்போநாங்கள்
மடந்தையையவனத்திற்கூடி வந்துபோயிருப்பீரிந்த
இடந்தனில்நில்லும்யாங்களேகியேவாரோமையா

வ-ம. இன்னமும்கேளுமையாவேடரேஎங்கள்வள்ளித்தாயைநாமருவும்போது எங்ளனுமதியிருந்தால் உங்களிருவருக்குமேன்மையுண்டுஅவ்விதம் நடவாதகாரியத்துக்கு யாவருக்கும் பகையுண்டாம்இதுஎங்களுக்கு ஆகிறதென்னமுன் யானையைக்குத்தி யொருபெண்சொல்லினாள் மறைத்தாள் அப்படிப்போலே நீர்உம்முடைய எண்ணத்தையெங்களுக்குதெரிவித்தால் வரப்போக நாங்கள்நடந்தோமா ஆகிலுஞ்சந்தேகமில்லை நீரிவ்விடமிரும் யாங்கள்வள்ளியிடம்போய் மறுபடியும் வருகிறோமையா வேடரே.

பாங்கியர் சொல் விருத்தம்.

சாந்தகுணம்பணின்ற வள்ளித்தாயே
　　தகையொடுமாரே நகையிற்றனுவொன்றேந்தி
மாந்துளிரோன்றேந்தி பெருமானைத்தேடி
　　வந்துநின்றார்நீயறிந்தால் வழுந்துஞ்சும்மா
பாந்திநினறிங்கொளியபேதே சொல்வாய்த்தேனும்
　　பாலுமுடனுயிருமெனப் பழகிமுன்னஞ்

சேர்ந்திருந்துவேற்றுமையே செய்தாயுந்தன்
　　சேதியெல்லாந்தெரியுமினிச் செப்புந்தானே

வ-ம். அகோவாராய் வள்ளித்தாயே நையிலொருவிர்வும் அம்புமேந்தி ஒருமானைத்தேடி யொருவேடன் வந்துநிற்கின்றான் அவனை நீயறிந்தால் ஒளியாமல் எங்களிடத்தில் சொல்லு நாம் தேனும்பாலு மூடலுமுயிரும்போ லிருந்தோமே அப்படியிருக்க உன்சேதியெல்லாமெங்களுக்கு மறைத்துச்சொன்னையே உன்சேதியெல்லாம் எங்களுக்குத்தெரியும் இப்போதாவது நிச்சயவார்த்தையைச் சொல்லுமம்மாதாயே.

வள்ளியம்மன்சொல் கண்ணிகள்.

இ-ம் சங்கராபரணம்-ஆதிதாளம்.

விள்ளுகிறேனுள்ளசேதிசொல்லக்கேளாய் சகியே
　　மெத்தமெத்தவுண்டதைவிளம்பக்கேளாய்
கள்ளமெல்லாவுங்களிடமறைத்திடுவேனோ சகியே
　　கனவிலுமுங்களுக்குப் பொய்யுரைத்திடுவேனோ
விதிவசஞ்சூட்டிவைத்ததைக் கூறியாவதேன் கண்ணி
　　மீதிற்சிக்கிக்கொண்ட மீன்சிந்தைநோவதேன்
பதிவுடனேத்துவேடர்போ லிங்குவந்ததும என்முன்
　　பஞ்சையைப்போற்றஞ்சமெனவே கெஞ்சிநின்றதும்
வேங்கைமரமாய்ப்பரணி லோங்கிநின்றதும் சகியே
　　மெத்தவேழைகிழவனைப்போற் றூங்கிநின்றதும்
தாங்காத்தண்ணீர்தவிக்குதென் றேங்கிநின்றதும் பின்பு
　　தண்ணீர்ச்சுனைக்காட்டிடநானேங்கிசென்றதும்
ஆசையானப்பெண்ணேயென்று கைபிடித்ததும் சகியே
　　ஆனைவரவழைத்ததுமயான்றடிந்ததும்
ராஜியாகநின்றதின்பின் ஞானபோனதும் அங்கே
　　நாடுமெதன்போலுமென்னைக் கூடியானதும்
ஓவியமேய்ப்பால்வேலு மயிலுங்கண்டதும் எனக்
　　குகந்தும்வந்தும்வேலர் சொரூபங்கொண்டதும்
ஆவியொன்றுடலிரண்டு மாகினோமன்னே சகியே
　　அந்தவேரநிந்தவேட ர்மடிபெண்ணே

பாங்கியர்சொல் விருத்தம்.

　　அப்படியேநல்ல விசேஷந்தானீயும்
　　　ஆண்டகுலதெய்வமதை யணைத்துக்கொண்டால்
　　இப்படியென்னொருவார்த்தைச் சொல்லொணாதா
　　　எல்லோர்க்குநலந்தேடி யிசைந்தாயம்மா
　　செப்புமொருநிஜநிஜந்தானவரைநீயுஞ்
　　　சேர்ந்ததினுஞ்வெகுகோடி பலனைப்பெறுமேறும்

கொப்பெனவேயவரிடத் தினிற்போய்நாங்கள்
குணமுடனேசேர்வைசெய்து கூட்டிவாரோம்.

வ-ம் மகாசந்தோஷம் மகாசந்தோஷம் ஆனால் நமது குலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளை நீயணைந்துகொண்டது நல்லபாக்கியந்தான் ஆகிலுமெங்களுக்கு இப்படியென்றொருவார்த்தை சொல்லக்கூடாதே இப்போது நீ சொல்லிவந்ததெல்லாம் நிசந்தான் நாங்கள் அவரைஇவ்விடம் அழைத்துவருகிறோமம்மா வள்ளித்தாயே (வள்ளிவசனம்) நல்லதப்படியே அழைத்துவாருங்கள் தோழிமார்களே.

பாங்கியர்சொல் விருத்தம்.

அருமையுடனிங்குவந்த வேலக்குமாரர்
அந்தரங்கமாகவும் வந்திங்கேகூடி
மருவுமதற்கெத்தனை பாக்கியம்பெற்றோம்நீரும்
வரக்கருணையின்றுபெற்றோம் வருமையற்றோம்
கருணையுடன்வல்லியைநீர் கைவிடாமற்
கலங்கணைந்துசேர்த்துக்கொள்ளுங்கபடில்லாதிப்
பரண்மீதில்வந்திருந்து வள்ளிமீது
பட்சம்வைத்துமெங்களை யிரட்சிப்பீரே.

வ-ம். சரணஞ்சரணமையா கழுகாசல சுப்பிரமணியக்கடவுளை போற்றிபோற்றி எங்கள் வள்ளியம்மனைத் தாங்கள்சேரும்படியாய் எத்தனைபாக்கியம் பெற்றோம் இப்போது வள்ளியம்மனிருக்கும்பரண்மீதுதாங்கள்வந்து வள்ளிநாயகியுடன் கூடி விளையாடியிருந்து இரட்சித்துஎங்களையும் பாதுகாக்கவேண்டும் சுப்பிரமணியக்கடவுளே (சுப்பிரமணியர்வசனம்) அப்படியேபோவோம் வாரும்பாங்கிமார்களே.

பொதுகண்ணிகள்-இ-ம் சாரங்கம்-ரூபகதாளம்.

ஜாடையறிந்தேசகிமார்கள் தன்புனத்திற் போந்தார்
தருணமென்றேவள்ளியிடஞ்சுவாமியும்பின் சேர்ந்தார்
கூடிவிளையாடிமுத்தங்கொடுத்துவள்ளி மகிழ்ந்தாள்
குமரகுருபரன்கல்விகூர்ந்துசெய்ய வுந்தான்
சிமிள்முலையைநெருடிவள்ளித்திருமார்பிற் கூர்ந்து
சுந்தரவேளதிகநயந்தேடிவிளை யாடி
அமரர்பணிவேலர்வள்ளிக்காசைமெள்ளக் கொடுத்தார்
அன்புவைத்தேவள்ளியும்பின் னதிகமோகங் கொடுத்தாள்

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

அறிந்துமறியாதகுறை யதுசெய்யினுஞ்சுவாமி
அன்புவைத்தேஎன்னையணைந்து ஆதரிப்பீர்சுவாமி
மறந்தெனைவிட்டகலாமல் மறுமுகம்பாராமல்
வாஞ்சைவைத்தெந்தனையணைந்து மருவுமையாசுவாமீ.

சுப்பிரமணியர்சொல் கண்ணிகள்.

ஆமெனக்குமூத்தகுடியாளுண்டடி ∘ பெண்ணே
அவளினுநின்மேலதிக மாசைவைப்போம் கண்ணே
சிமையிலுள்ளச்சகலத்வசெந்து தனக்கே
தினந்தினமும்வரங்கொடுக்கச்செயல்தருவோ முனக்கே
வள்ளிகுறமாதேபட்சமரகதமே குயிலே
மனம்போலேயெனக்குவாய்த்தவஞ்சிமட மயிலே
எள்ளளவும்பிரிவதில்லை யென்மொழிதப் பாதே
இருவருந்தலங்கடோறு மிசைந்திருப்போ மாதே
கோதையடா குறவர்தினைக்கொய்ய வருவாரே
குலத்துடனேசேர்ந்துசிற்றூர்க் குடியிலிருப் பீரே
மாதரசேபோயினும்பின் வாஞ்சைமற வாதே
மனதிலென்னைநினைந்தவுடன் வருவேன்மலை யாதே

பொது கொச்சகக்கலிப்பா.

மானைப்பெருவும்விழி வள்ளியிடஞ்சேர்ந்துமுரு
கோனும்புரத்துக்குவட்டருகேசென்றபின்பு
ஏனம்புனங்காத்திருக்கும் வள்ளிதன்னிடத்தில்
கானக்குறவர் கதிர்கொய்யவந்தனரே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுக்குச்சிலபுத்திமதிகள்சொல்லி வேள்விமலைக் கருகாமைச் சுப்பிரமணியர்சென்றபின் இச்சோதினைப்புனத்தில் வள்ளியிடம் அண்ணமார்களுஞ் சிலகுறவர்களுந்தினை கொய்யவருகிறவிதமெப்படியென்றால்.

குறவர் வேடர் தினையறுக்கவருகிற கண்ணிகள்.

இ-ம் மோகனம் ரூபகதாளம்.

குறத்தின்குன்றவர்தினைப்புனத்தினில் கூடியேவிளை யாடியே
குடையும்பண்ணுங்கத்தியுங்கொண்டுசாடை சுற்றியே
உறத்தினைவள்ளிகேவர்த்திற்சேர்த்திங்குயர்ந்தம்பாரஞ் செய்யுங்கள்
உவந்தமேருவென்னவகதிர்க்குவிந்துவானி லுன்னவே
தாத்துக்குத்தக்கதிட்டமாய்க்கூடுஞ்செனமெலாம்வெகு சட்டமா
நான்சுமையெடுத்திட்டனர் வள்ளிமானையுமழைத் திட்டனர்

அண்ணமார்வசனம்.

அகோவாருமம்மா வள்ளிநாயகி நாம்பயிரிட்ட தினைக்கதிர்களை எல்லாங்கொய்து அவரவர்கள்சுமையைத் தலையிலெடுத்துக்கொண்டு சிற்றூருக்குப்போகிறபடியால் இனியிவ்விடம் இருக்கவேண்டியகாரியமில்லைகூடவேவாருமம்மா வள்ளிநாயகி.

வள்ளியம்மன்-வசனம்.

நல்லது அப்படியேவருகிறேன் நடவுங்கள் அண்ணமார்களே

வள்ளியம்மன்சொல்விருத்தம்.

அறிந்துவாபாங்கிகேளா யண்ணமார்க்கதிரும்கொய்து
பறிந்துடன்குவியூர்க்குப் பண்புானவாவென்றூரே
பொருந்தியேயென்னைச்சேர்ந்து புணர்ந்தநாயகனுன்வந்தால்
வருந்தியேசகியேதேடி வாடுவாரதற்கெனசெய்வேன்.

வ-ம். கேளுங்கள் எனதுபாங்கிமார்களே என் அண்ணமார்கள் வந்துதினைக்கதிரைக் கொய்துக்கொண்டுஎன்னையுஞ்சிற்றூருக்குக்கூப்பிடுகிறபடியால் என்னைச்சேர்ந்தயென்பிராணநாதர் என்னைத் தேடிக்காணுமல் வாடுவாரே அதற்குநான் என்னசெய்வேன் தோழிமார்களே.

வள்ளியம்மன் புலம்பற்கண்ணிகள்
இ-ம் நீலாம்புரி திரிபுடைதாளம்

அன்னமேபெண்பாங்கிமாரே — என்
அண்ணார்வந்தழைக்கின்றூரே
என்னசெய்வேன்தோழிமாரே — அண்ணர்
என்னையுமழைக்கின்றூரே
வேலவரையினிக்காண்பேனே — காணும்
விட்டுதனித்திருப்பேனே
வாலைபருவனைநானே — விட்டு
மனைக்கெப்படிநான்போவேனே
பெயடிறந்தவன்றிலானேன் — நல்லப்
பிள்ளைபிறந்தகளைபதானேன்
கூடிழந்தபட்சியானேன் — மரக்
கொம்பிழந்தகொடியதானேன்
பாரினைவந்துதேடுவாரே — வேலர்
பரதவிக்குவாடுவாரே
வெறுங்கினைப்புனக்கைப்பார்ப்பார் — இனி
மிஞ்சிப்போச்சுதென் றுள்ளம்வேர்ப்பார்
கண்டனுப்பிப்போவோமென்றூல் — அண்ணர்
கடிந்தகோபமாவரென்றூல்
விண்டுமனைக்கேகலாமோ — வடி
வேலர்மனமென்னலாமோ

வ-ம் அகோவாரும்பாங்கிமார்களே என்பிராணசிநேகிதராகிய வடிவேலரைக்கண்டு விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப் போகவேண்டுமானல் அண்ணர்களடிக்கடி கூப்பிடுகிறூர்கள் அவர்களுக்குத்தெரிந்தால் கடின்னவார்த்தை சொல்வார்கள் இதுக்கென்னசெய்யலாம்பாங்கிமார்களே (பாங்கி வசனம்) ஆனல் வாருமம்மா வள்ளித்தாயே சுப்பிரமணியக்கடவுள் ஒருவேளை இங்கேவந்து உன்னைக்காணுதிருந்தால்சிற்றூருக்குவருவார் வந்தால் உன்னையவரிடஞ் சேர்க்கிறோம் இப்போதுபோகலாம் வாருமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல் விருத்தம்

என்றுயரமாரிடத்திற் சொல்வேனையா
இன்னம்வடிவேலர்வர வில்லையேநான்
சென்றிடச்சிற்றூருக்குமேலகவில்லை
சீக்கிரமாயெனையண்ணரழைக்கிறார்கள்
நின்றுநின்றுபார்த்தாலும் வருவதில்லை
நிர்ணயமாய்த்தேடுவாரோ தெரியவில்லை
அன்றில்களேகிள்ளைகளோ மேவுவாரேநான்
அன்பர்வந்தாலவர்தனக்கி தருளுவீரே.

வ-ம். அகோவாருங்கள் மயில்கள்குயில்களே பட்சிகளே மிருகங்களே என்பிராணநாதரிங்கெனைத் தேடிவந்தால் உம்மைகாணமல் வள்ளிமயங்கித்தேடி ஊருக்குபோனள் நீர்வந்தால் சிற்றூருக்கிதுமார்க்கமாய் வரச்சொன்னளென்று சொல்லுங்கள் பட்சிசாதிகளே.

வள்ளியம்மன்சொல் கண்ணிகள்
இ-ம் சங்கராபரணம்-அடதாளம்.

கோகிலமேகிள்ளைகாள்	என்சுவாமி
குறித்தெனைத்தேடிவந்தால்	
வாகுடன்சிற்றூர்க்கு	நான்போகும்
வழிமார்க்கஞ்சொல்வீர்களே	
அம்மவரானந்தன்	புனந்தனில்
ஐயோகாணேனென்று	
தேடியேஇங்குவந்தால்	நான்போகிற
திசைகண்டுசொல்வீர்களே	
மாங்குயிலேகிளியே	என்னைச்சேர்ந்த
மன்னர்தேடிவந்தால்	
பாங்குடன்சிற்றூர்க்கு	நான்போகின்ற
பாதையைச்சொல்வீர்களே	
கும்பிட்டேன்மானினமே	சுவாமி
குகனிங்கேதேடிவந்தால்	
கும்பிட்டுசிற்றூர்க்கு	வரச்சொல்லிக்
கொண்டாளென்றேசொல்லுவீர்	
மாடப்புறுவன்னமே	என்னைச்சேர்ந்த
மன்னவர்தேடிவந்தால்	
நாடியேசிற்றூர்க்கு	நான்போகிற
நன்மார்க்கஞ்சொல்வீர்களே	
வில்லும்பசுங்கிள்ளைகாள்	என்சுவாமி
வேலர்தேடிவந்தால்	
நில்லாமல்சிற்றூர்க்கு	வரும்படி
நீங்களுஞ்சொல்வீர்கள்	
பாங்கியுடன்சேர்ந்து	சிற்றூருக்குள்ளே
பரதவித்தேகுமென்னைச்	

சேர்ந்தகாங்கேயன்வந்தால் என்சேதி
தெரியவுஞ்சொல்லீர்களே
அன்புள்ளவன்னங்களே என்சுவாமி
ஆண்டவர்தேடிவந்தால்
நம்பினேனுங்களை வழிமார்க்கம்
நன்றாய்ச்சொல்லீர்களே.

வள்ளியம்மன்சொல் கொச்சகம்.

கூவுமயிலினமேகுளிர்ந்தகருவண்டினமே
மேவியென்னைச்சேர்ந்தணைந்த வேலவனாரிங்குவந்தார்
ஆவிபதறுமலாதரவாய்ச்சேதிசொல்லி
மாவிசையசிற்றூர்க்கு வரச்சொல்லிசொல்லீரே.

இதுவுமது-கொச்சகம்.

அன்னமேகிள்ளைகளே அழகுசிறைவண்டினமே
பொன்னுலகின்வேலரிந்தப் புனந்தனிலேவந்தாக்கால்
கன்னிவள்ளியுஞ்சகியுங் கானகத்தைவிட்டேகி
செந்நெல்வளர்சிற்றூர்போய்ச் சேர்ந்தாளென்றுசொல்லீரே.

வ-ம் ஆ ஆ அன்னங்களே தாராக்களே மயில்களே குயில்களே மாடப்புறாக்களே வண்டுகளே மான்களே உங்களைநான் கும்பிடுகிறேன் என்னைச் சேர்ந்தணைந்த என்பிராணநாயகராகிய சுப்பிரமணியக்கடவுள்என்னைத்தேடிவந்தால் மிகவும்பரதவித்துவாடி பாங்கிமாரும்வள்ளியும் அண்ணமாருடன் சிற்றூருக்குப்போனார்களென்று இந்தவழியையுங்காண்பித்து நான்சொன்னதாய் என்பிராணநாயகருக்கு என்னைவேண்டி நீங்கள் சொல்லவேண்டும் பட்சிசாதிகளே.

பொது விருத்தம்.

வற்றாதவேழ்விமலைக்குடிசிற்றூர்க்கு
வள்ளியம்மன்வந்தபின்பு வளமையாகப்
பெற்றாளுநம்பியராஜேந்திரன்றானும்
பிரியமொருமகளையெடுத்தணைத்தேமுத்தம்
சற்றேதந்திடுந்தாயே எனவுங்கொஞ்சிச்
சார்ந்தகுலவேடரெல்லாந் தான்கொண்டாட
குற்றமில்லாமனைவியையும் விட்டகன்றிடாமற்
குளிர்ந்துமகிழ்ந்திருமெனவும்புகழ்ந்தாரன்றே

வ-ம் இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் பட்சிகளோடு சொல்லிக்கொண்டுவந்து தங்களிருப்பிடமாகிய சிற்றூருக்குவந்து சேர்ந்தபின் தாய்தகப்பனாகிய நம்பியமகாராஜனும் நங்கைமோகினியும் சிலவேடர்களுஞ் சந்தோஷமடைந்து வள்ளியம்மனையெடுத்து முத்தங்கொடுத்துப்புகழ்ந்தும் மனையிலிரும்மா வென்றுசொல்லவள்ளியம்மன்சொல்லுகிறவிதங்காண்க

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

மாதாவேயெனைவளர்த்ததாயேவுந்தன்
　　மகிமையினுற்றினைக்காத்துவந்ததாலே
பேதாதிபேதங்கள்வந்ததில்லைப்
　　பின்னையொருமயக்கமில்லைப்பிரளியில்லை
ஆதாரமாகவுந்தன்றனைக்காணுமல்
　　அங்கமதுமெலிந்ததல்லாலருளக்கேளு
கோதில்லாவுந்தனைநான்கண்டபோதே
　　குளிர்ந்ததெந்தனுடமனமுங்குளிர்ந்ததின்றே.

வ-ம். அகோவாருமம்மாதாயே நான் தினைப்புனங்காத்திருந்ததி ற்பேதங்களில்லை உன்னைக்காணுமலிருந்ததே எனதுதேகமெலிந்து மனம்வேருயிருந்து இப்போதுனனைககண்டபோதே என்சரீரமும்மன முங்குளிர்ந்ததம்மாதாயே (நங்கை-வசனம்) அப்படியே நல்லபாக்கியம் வேலவர்கிருபையால் விட்டிலிருமம்மாதாயே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் சிற்றூரில் வள்ளியம்மன்சேர்ந்துதாயாரிடமிருக்கும்போது தன்னைச்சேர்ந்தவேலவர்காணுமென்கிறதாய் அவர்மீது சோபங்கொண்டு பாங்கிமாரோடுபிரலாபிக்கிறவிதமெப்படியென்றால்.

வள்ளியம்மன்சொல்-தரு-இ-ம்-சுத்ததோடி-ரூபகதாளம்

பல்லவி.

　இன்னம்வரக்காணேனேசேடி　　　　என்பிராணநாதா
　இன்னம்வரக்காணேனேசேடி

அநுபல்லவி.

அன்னமுங்கசப்பாச்சே　　　ஆருடன்சொன்னாலுமேச்சே　　　இன்

சரணங்கள்.

　மறக்கமனம்வருவதில்லையே　　　　எந்தன்கண்ணில்
　உறக்கம்வருவ　　தில்லையே
இறக்கமில்லாததேனோ　என்மேல்விரோதந்தானோ　　　இன்
　காதமோதூரமுந்　　　　தானோ-என்னைத்தேடிக்
　கந்தன்வாராதது　　　　மேனோ
மாதேஎன்பாங்கிமாரே மன்னனிடஞ்சொல்வீரே　　　இன்
　மானேஎனைத்தினைப்புனந்　　　தேடி-வந்தவேலர்
　வாரா திருப்பதென்ன　　　　தேடி
ஏனோயெந்தன்மீதிற்கோபம்என்சொல்வேனவர்பிரதாபம்　　　இன்

விருத்தம்.

　புளகமுலையிரண்டுவிம்மிப்பசுமைபூப்ப
　　பூசுஞ்சவ்வாதுங்கதம்பப்பொடிவாசந்
　களபசுகந்தாதியெல்லாம்பொருந்தியும்வேர்வை
　　கரைந்தோடமன்மதன்வேள்சரங்கள்பாய

பளகுமடமாதன்ரயுமேசத்தென்றல்
பாய்ந்துபுலிபோற்சிறப்பகுந்ததோகை
இளமயில்போல்வள்ளியும்பஞ்சணையிற்சேர்ந்தே
ஏங்கினள்வுரகமுங்கொண்டேங்கினளே.

பொது-கண்ணிகள்-இ-ம்-மோகனம்-அட தாளம்.

வரச்சொல்லிச்சொல்வாள்இன்னமுமவர் வரவில்லையென்பாள்
உறக்கமும்வினையாள்தன்றுநெஞ்சம் உறுதிநொந்தலைவாள்
பூமலர்முடியாள் ஆவின்பாலைப் புகட்டியுங்குடியாள்
காய்மலர்கிரியாள் நின்காமக் காய்ச்சலின்குறியாள்
இரைநீர்சொரியாள் அணைக்கதையால் தனைவாரியிறைப்பாள்
சிந்தையில்கெதிப்பாள் அணிவிட்டுத் திலர்தமுமழிப்பாள்
அன்னமுமருந்தாள்கனிரசம் அமுர்தமும்பொருந்தாள்
செங்கையணிந்தாள்வலைகவளையும் போனதுமறந்தாள்
இதுவென்னகுதோவள்ளிக்குவந்த இடரும்நீங்காதோ
மதிமோசமென்றார்தாய்தந்தையிவ் வசைபார்ப்போமெனரூர்

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மை விரகவாதனையில் விழுந்திருக்கும் போது தாய்தந்தையர் இதுஎன்னமோகாளகத்தில்வந்தயிடரோ அல்லது மருளோவென்று பூசைகள்போட்டுப் பார்க்கிறவிதமெப்படியென்றால்.

விருத்தம்.

ஐயனார்தனக்குமன்னையுங்கன்னிமார்க்கும்அஷ்டதிசை துஷ்டதெய்வமதற்குத்தங்கள், மெய்யதியாய்விளங்குங்குலதெய்வம்வெற்றி வேலர்தெய்வந் தனக்குமெத்தவேண்டி, கைக்குளிரகாணிக்கைக்குறவர்கட்டிக்கருங்குழலாள்வள்ளிசிறுகங்கிமீதோர், வெய்யகறுப்பணுகாமல்புலியிடாமல் மெலியாமற்கிளியாட்டம் விரும்பினரே.

பொதுகண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கொண்டிப்பூசையிடத்தெம்பிட்டாரே கானக்
குறவரெல்லோருங்கூடிககும்பிட்டாரே
பண்டாரப்பொட்டிகைபிலெடுத்தாரே நல்ல
பண்டிப்பக்காவினில் வந்தடித்தாரே
சம்பாவரிசிகலமுப்பூனிதந்தார் லாடத்
தம்பிரானுக்குப்பொங்கல் தனைப்படைத்தார்
அம்பாரமேமேல்முக்கை பொரித்துவைத்தார் குடத்தில்
அள்ளியேதேன்பால்பழமும் உரித்துவைத்தார்
செங்கரும்புமிளநீரும்குவித்துவைத்தார் சாவல்
செங்கிடாயிருநாறுஞ்சமைத்துவைத்தார்
வஞ்சியும்வீச்சரிவாளுமொரு சமயமாய் சொர்ன
மணிகட்டிவல்லயங்கப்பறையோடே
களுக்குடமிருநாறுஞ்சத்தியாய்வைத்தே நல்ல
கடியுடன்சாராயக்குடத்திலவைத்தே

மங்கையர்குறவர்கூட்டிக்கூக்குரலிட்டே சுவாமி
விந்துதலைச்சுற்றியாடிக்குலைவையிட்டே
சங்கையுடன்பொங்கல்வைத்துத் தூண்டினரே சுற்றுந்
தம்பிரான்கள்பெயர்சொல்லி வேண்டினரே
வீரகாளிவனப்பேய்ச்சி செண்பகவல்லி இந்த
வேளைக்குவந்துதவும் பாதாளவல்லி
ஆரபாரக்கோட்டை மலைக்கறுப்புசாமி வெற்றி
ஐயன்மாடலாடயிருளப்பாசாமி
காவனத்திலட்டதிக்கிலுள்ள தெய்வமே என்று
கையெடுத்துவேடர்கள் போற்றிசெய்துமே
சென்னிவணங்கிக்கும்பிட்டுக் கையெடுத்தார் வேடர்
செழிப்பாகபூசைபோட்டுத் தீபங்கொடுத்தார்
சன்னதக்கொண்டெல்லோருங் குதித்தாட வள்ளித்
தானுமசைத்தருட்கொண்டுமதிந்தாட
நன்மைசெய்யுங்கழுகுமலைக் கந்தவேளை உன்னை
நாடிநோக்கிக்கும்பிடுவா ளந்தவேளை

விருத்தம்.

குன்றவர்குறவரெல்லாங் கும்பிட்டன்புடனேபோற்றி
நின்றுடன்விபூதிவாங்கி நிச்சயங்காப்பாயென்று
கன்றியேமெலிந்துவள்ளி கன்னிகைதனக்குப்பூசி
வென்றியாய்மனேசேர்ந்துள்ள மெலிந்திடாதிருந்திட்டாரே.

இதுவுமது.

இருப்பள்வள்ளியெழுந்திருப்பாள் மங்கொள்ளாமை
ஏக்கமொடுகுசனைமனதெண்ணியெண்ணி
மருக்குழலில்முடித்தரியாள் வுடலைப்பாராள்
மனக்கவலைதீர்ந்தறியாள் வகையாய்நெஞ்சம்
உறுக்குமொருகையைக் கனனத்தில்வைத்தே
உடல்மெலிந்தேயிரவெல்லாம் மருவிப்போகம்
பெருக்கிடவேகனவுகண்டு முழித்துவாடி
பித்தரைப்போலாசைகொண்டு பிதற்றுவாளே.

இதுவுமது.

இப்படியும் வள்ளிபுலம்பித் துயில்கொள்ளாமல் இரவெல்லாம் வருந்தி மதிமயங்கிக்குன்றி, எப்படிநான்சகிப்பேனென் மனதென்றெணணிஏக்கமுடன் வள்ளியம்மனிருக்கும்போது, அப்புறத்திற்சென றவடிவேலர்தானும் அவசரமாய்த் தினைப்புனத்தருகேவந்து, செப்பமுடன்வள்ளியுஞ் செந்தினையுங்காணாற்றியங்குவார் தமது மதிமயங்குவாரே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளிசிற்றூரில் விரகவேதனைப்பட்டிருக்கும்போது அங்கேதினைப்புனத்தில் வந்துபார்த்து வள்ளியைகாணமல்சுப்பிரமணியர் சொல்லுகிறவித மெபபடியென்றால்.

சுப்பிரமணியர்சொல் கட்டளைக்கலிப்பா.

தாதுமாதாளைப்பூர்த்ததுமிகதிடம் தானும்யானுமேகூடினதிக்கிடம்கோதுங்கொண்டை கலந்ததுமிந்திடம், கொம்பினுனைப்பாய்ந்ததுமிந்திடம், மாதுமஞ்சள்துவண்டதுமிந்திடம்மங்கைநானு மருவினதிக்கிடம்காதிமேனுலைசுழன்றமிந்திடம் காமராசன் பிரிந்ததுமிந்திடம்.

வ-ம். ஆ-ஆ இதுதானே தினைப்புனம்இங்கேதான்வள்ளியும்நானும்திரக்கூடிவிளையாடினோம் இந்திடத்தில்இருப்பளென்றுவந்தேன் இப்போதுகாணோமே இதற்கு நானென்னசெய்வேன்.

சுப்பிரமணியர்சொல் விருத்தம்.

மனதில்நினைந்தாசைகொண்டு வந்தேனிங்குவள்ளியுந்தான் பரணமீதிற்காணாதென்ன, தினைபுனத்திற்கதிர்களையுங்கொய்துக் கொண்டுதேன்மொழியைக் கூட்டியவர் சென்றாரோதான், மனத்தகவணோசையுங்கேளாமலூமைக்கண்டகனைப் போலிருக்குதேதானையோ தனித்தவள்ளிபாங்கிய றென்னைவிட்டு தான்சென்றார்போலிருக்குந் தன்மையாச்சே.

வ-ம். ஆ-ஆ இதுஎன்னமாயம் நான்நினைந்து வந்தவள்ளிநாயகியுந்தினைக்கதிரையுங்காணோமே அல்லது அவளுடையஅண்ணமார்கள் தினையறுத்துக்கொண்டு அவளையுங் கூட்டிக்கொண்டுபோனதுபோற் காண்கிறது இதென்ன ஊமைகண்டகனவைப்போலபாங்கியுடன்வள்ளிதம்மைவிட்டுப்போனாளிதற்கென்னசெய்கிறது.

சுப்பிரமணியர்சொல் தரு இ-ம் கேதாரகௌளம் ஆதிதாளம்.

எங்குபோனாளோ-வள்ளியைக்காணோம் எங்குபோனாளோ
கொங்கார்தினைப்புனத்தில் சிங்காரமாயெனது
பாங்காயிருந்தவள்ளித் தங்காமலென்னைவிட்டு (எங்கு)
மதிமுகவசீகரத்தாள் வள்ளியைத்தாங்கும்
வளர்பரண்மேவுங்கம்புகாள்
சதியோசம்மதியோ நான்செய்குறை
தானோஎன்விதியோ
பொதுவாயிருந்துநிச மதுவேசொல்லுங்களிந்தச்
சதிகாரிபோனவழிஎதுவோதெரிந்ததில்லை (எங்கு)
வாசநற்பெண்ணானை வள்ளியெனுநன்
வனத்தினைபுனத்தாளை
பாசமிருகங்காள் பாதகிபோன
பாதையைச்சொல்லீரே
ஆசைகொண்டவுனக்குரோஷமில்லையென்று
மோசஞ்செய்தென்னையிவ்வேஷஞ்செய்தபாதகி (எங்கு)
நீதான்சொல்வழியே தினைக்கதிரை
நித்தங்கொய்யுங்கிளியே
ஆகாரநியன்னமே இன்னுமென்று
அறிகிலீரோமுன்னமே

ஏதோவென்மையவிராதோவல்லாதென்ன
சூதோஎன்சத்தங்கேளாதே கூப்பிட்டது

திராதமோகம் தந்தேனைக்கூடிச்
சேர்ந்தாள்சம்போகம்

வாதேனென்றுதரத்தே போலவுடனே
ஆருதநிலயவைத்து நீறுநீறுக்கியென்னைப்

பாராமலோர்வசனங் கூறுமற்றனிவிட்டு எங்கு

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்.

அடக்கமுடன் வேலியிட்டுப்பயிரைநட்டால் அழிப்பதுதான்யெங்குமுண்டோவதுபோல் முத்து,வடக்கந்தமாலைவள்ளிபோறேமென்றோர்வார்த்தையுஞ்சொல்லாமலிந்தவனத்தில்விட்டு, நடக்கமனம்பொருந்தினளோ தனியேஐயோநட்டாறுதனஞ்சமெனவுநட்டாள்நானிவ், விடத்திலின்றேயினம்பிரிந்தமான் போலானேன் என்செய்வேனினி மேலுமென்செய்வேனே.

வ-ம் ஆ ஆஉலகத்தில்வேலிவைத்தல்லவோபயிரிடவேண்டும்அதுபோலிந்தவள்ளிக்கு நாதெனு வேலியிருக்க என்னைநட்டாற்றில்விட்டதுபோலச் செய்துவிட்டுப் போகமனம் வந்ததல்லவா.

சுப்பிரமணியர்சொல் தரு இ ம் புந்நாகவராளி ஆதிதாளம்.

சொருகுகொண்டையழகி என்மன தருகுதருகுதிளங்
அறுகுமாமலர்மேயினைந்துசுகந்தந்து

ஆரபாரத்துடன்வாரிமுடித்தமலர்ச் சொருகு
சரிகைச்சேலையுடையும் மயிலின் சாயன்னநடையும்
உருவினரம்பைத்துடையும் கையால்ஒருபிடிக்குள்ளிடையும்
மருவிமருவியென்னை மயக்கிக்கல்விசெய்து
வஞ்சிநீபோனதென்ன வஞ்சமோசொல்லடி சொரு
நேற்றியானபெண்ணே நீஒரு வார்த்தைசொல்லாயோகண்ணே
பார்த்துநீரயவுபண்ணே அந்தப் பரமனறிபகண்ணே
பூர்த்தமாமலர்மேற்சேர்த்துக் கையாவணைத்துப்
பார்த்துபார்த்துநிசங் கோர்த்துமுடித்தமலர்ச் சொரு
வஞ்சியானபாவி மனம் வைத்தேனேமெத்தமேவி
கொஞ்சிசொஞ்சிக்கூவிமோகங் கொடுத்தமனதீவி
நெஞ்சில்விரததாபம் பஞ்சின்றிபோற்பிடிக்கு
தேன்செய்குவேண்டி பஞ்சமாடாதகி சொரு

சுப்பிரமணியர்சொல் விருத்தம்.

ஏசிளதும்பாராமற்கெஞ்சினேனே எத்தனையோவவல்மனதத்திருத்தினேனே, ராசிசெய்வவளுடனே இணங்கினேனேநான் பிரியேனென்றுவெகுஞாயஞ் சொன்னேன் கரசலையாயிருந்தவஞ்போற் பிரிய

தேகள்ளிக்கபடநாடகமாகக்கடத்தியென்னை, மோசமது செய்தாளே
புல்வாயேமானேமுன்னடந்த ஞாயமிதை மொழிகுவீரே.

இதுவுமது சந்த விருத்தம்.

பொருபுலியமதயானைகளே சிறுபுல்வாய்ச்சூகரமே
வருமரையேகலைமானினமே தருமலையாமேதிகளே
குருவின்மேகவுதாரிகளே மயில்கோகிலமேகிளியே
ஒருகுறமாமயில்வரும்வழி யறிகிலேனுரைசெயுமென்திடமே.

வ-ம் ஆ ஆ வள்ளிநீஎன்னைப்பேசினதும் பாராமல்உன்னைக்கெஞ்சியுன் மனோராஜிசெய்து உன்னைமருவினேனே நல்லது ஓகோபார்த்தீர்களா கரடிபுலிசிங்கங்களே மான்மரைமேதிகளே நான்அவளுக்கு மனதிற் சந்தேகமில்லாமல் ஒருநாளும் பிரியேனென்று சொன்னேன் அப்படியிருக்கஎன்னைக் கபடமார்க்கமாய் மோசஞ்செய்தாளே அவளெந்தவழிபோனாள் சொல்லுங்கள்பட்சிகளே.

பொது-விருத்தம்.

இப்படிவேலவர்வனத்தில்மயங்கிவாடி, ஏனமுதல்மிருகமும்பட்சிகளையேகேட்டுச், செப்பமுடன்சிற்றூரில்வழியைநோக்கித், தீவிரமாயவ்வூரின்வந்துமேநிற், தப்புரத்திலெவர்களுமேயறிந்திடாமற், கந்தனும்வந்தம்மன்மனைகதித்தொளிக்க, மைப்படியுங்கண்டன் மகன்வந்தாரென் ற' வண்மையுடனே பாங்கிமார்வந்தாரே.

வ-ம் அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்சுப்பிரமணியக்கடவுள் தினைப்புனத்தில்வந்து வள்ளியம்மனைக் காணுமல் மதிமயங்கி வாடிசிற்றூரைச்சேர்ந்து நம்பியராசன்வீட்டில் ஆருமறியாமல் ஒளித்திருக்க அப்போது வள்ளியம்மனுடைய பாங்கிமார்கள்கண்டுசுப்பிரமணியரைத்துதித்துக் கேட்கிறவிதமெப்படியென்றால்.

பாங்கியர்சொல்-விருத்தம்.

தங்கையருளியகுமாரகந்தவேளே, கலந்தவர்தான் விலகியெங்களகங்கிவள்ளி, மங்கையைவிட்டிருக்க மனம்வந்ததோநீர், வந்ததுவுநன்றுச்சுவாமி போற்றி, சங்கையுடனெங்கள்வள்ளியுமைக்காணமற் சாதமுண்ணவில்லைசந்தனங்கள்வாசம், அங்கமதிற் பூசியறியாளேஐயா அவள்தன்னையிப்போதே அழைத்துவாரோம்.

வ-ம் சரணஞ்சரணமையா சேவலங்கொடியோனே தாங்களெங்கள்வள்ளியைவிட்டு இத்தனைநாழிகையெங்கிருந்தீர்கள் வள்ளியம்மனிடஅண்ணமார்கள் தினையறுத்துயெங்களை கூட்டிவந்தபிறகு உம்மைக்காணமல் வள்ளியம்மன் ஊண்உறக்கமும் பரிமளவாடை இதுகளெல்லாமில்லாமல் வாடியிருக்கின்றாளே தாங்கள்விட்டுப் பிரியமனமெப்படிவந்ததுசுவாமி(சுப்பிரமணியர் வ-ம்)நல்லதுஅப்படியா ஆனல்சீக்கிரமாய் அவளைஅழைத்துவாருங்கள் பாங்கிமார்களே(பாங்கியர் வசனம்)சரணஞ்சரணம்மகாபாக்கியம் இதோ அழைத்துக்கொண்டுவருகிறோம் சுவாமி.

வள்ளியம்மனும்-பாங்கியும்வருகிற-கண்ணிகள்.

அன்னியுமறிந்து அண்ணமார்நித்திரை
சன்னியாய்த்தாதியுங் கூட்டிதானிருவரும்
பாதசரங்குலுங்கினாற் பதறிமுழிப்ப ரென்று
தாதியும்வள்ளியுமெள்ளத்தனியேநடந்து
நம்பும்வடிவேலர் தன்னைநாடிவந்து கண்டு
கும்பிட்டாசைதீரக்குணமுடன் வள்ளி

வள்ளியம்மன்சொல்-வஞ்சிவிருத்தம்.

மன்னரேசரணமகிபரேசரணம் பின்னியவடிவேல்வேந்தரேசரணம்
தன்னிகரில்லாதனியரேசரணம், என்னையேயாளுமிறைவனேசரணம்.

வ-ம் சரணஞ்சரணம் என்தாசைக்கிசைந்த மன்னவரேசரணஞ் சரணஞ்சுவாமி.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

ஆசைதந்தநாயகனே அரனாருள் மகனே
வாசனைக்கடம்பாவெந்தன் மையல்தீர்த்தவா
பாசம்வைத்தவெந்தனைநீர் மோசமுஞ் செய்யவே
பாங்குடனினைத்ததுண்டோ காங்கேயாநாதா

வ-ம் கேளுமென்பிராணநாதா என்னைத்தனியேவிட்டிருக்க எப்படிமனம்வந்து இப்படிநான்மெய்வருத்தவும் பார்க்கலாமா சுவாமி(சுப்பிரமணியர் வ ம்)அகோவாரும் பெண்ணேவள்ளி அப்படிவுன்னை மோசஞ்செய்வேனோ நல்லது இப்போதுநாம் இங்கேயிருக்கக்கூடாது நாம்நமதுமலைக்குப்போவோம் வாரும்பெண்ணே (வள்ளி வ-ம்) அப்படியேநல்லபாக்கியம் நடக்கலாம்சுவாமி (சுப்பிரமணியர்-வ-ம்) ஆனால் வாரும்பெண்ணே.

சுப்பிரமணியர்-வள்ளியம்மன்-வ-ம்.

அகோவாருங்களடிபாங்கிமார்களே இப்போதுநாங்கள் எங்கள் மலைக்குபோகின்றோம் நீங்கள்சந்தோஷமாய் இவ்விடத்திலிருங்கள் பாங்கிமார்களே (பாங்கிமார்வசனம்) ஆனாலப்படியே நல்லபாக்கியம் போய்வாருங்கள்சுவாமி அம்மாவள்ளித்தாயே யெங்கள்மேற்கிருபையிருக்கட்டும்.

சுப்பிரமணியர் வள்ளியம்மன் மலைக்குப்போகிறபோது
மேற்படி கண்ணிகள்

என்றுபாங்கிமார்கள்சொல்ல எழிலுடன் வேலர்
மன்றல்வள்ளிக்கைப் பிடித்துமலையைநாடியே
மெய்க்குந்திருவஞ்சி நாட்டைவிட்டுமே கந்தர்
மைக்குழல்வள்ளியும் வேழ்விமலையுங்கடந்தார்
பாக்கியம்போலவந்த குறப்பைந்தொடிக்கை விடாமற்
சிலாக்கியம்பொருந்துஞ் சோலைத்தாவளஞ்சேர்ந்தார்

விருத்தம்.

இவ்வகைவள்ளியுங்குகனுஞ் சேர்ந்தோர்பக்கம், இருந்திடவே சிற்றூரினங்கைமாது. ஒவ்வியபள்ளியினிற்றுயிலும்போது, ஒருபசுவைக்கள்ளனுங்கொண்டோடிப்போனான், அவ்விரவுகனவுகண்டு விழித்தாள் கோவென், றலறிநாட்டன்னுடலோடணைத்துங்கட்டி, செவ்வையாய்த்துயின்றவள்ளியெங்கேயென்று, தேடினாள் சிந்தைநொந்து வாடினாளே.

வ-ம் இந்தப்பிரகாரம்வள்ளியம்மனுஞ்சுப்பிரமணிக்கடவுளும்சிற்றூரைவிட்டுவழிநடந்து ஒருசோலையிலிரங்கியிருக்க அவ்விடம்சிற்றூரில் நங்கைமோகினி நித்திரையிலு ஒருபசுவைக்கள்ளன் கொண்டுபோனபாவனையாய்க் கனவுகண்டெழுந்துப் பார்க்கும்போதுதனதருகேநித்திரைசெய்த வள்ளியம்மனைக்காணோமென்றுகூக்குரலிட்டலறிபரதவித்துத் தேடுகிறவிதமெப்படியென்றால்.

நங்கைமோகினிப்புலம்பல் கண்ணிகள்

இ-ம் தண்டா ஆதிதாளம்.

ஐயையோஎன்மகளைக்காணோமே — என்ன
அநியாயமென்மகளைக்காணோமே — இப்போ
மாபமோவிதுவென்னவஞ்சகமோ — இந்த
மாதுவள்ளியைக்காணாதென்னமோ — ஐயோ
எங்கெங்கேபார்த்துத் தேடுவேனோ — வள்ளி
எங்கேபோனாளென்றேகுவேனோ — எந்தன்
கன்னிவள்ளியிங்கேதான் துயின்றாளே — என்னைக்
கைவிட்டெவ்விடமோசென்றாளே — சிற்றூர்
மன்னன்நம்பிராஜேந்திரனவருவாரே — இங்கே
மகளேமகளென்றோடித்திரிவாரே — இங்கே
கூடியபாங்கிதானுமிசென்றாளோ — எவனைக்
கூட்டிப்போயெவ்விடத்தில்நின்றாளோ — நம்ம
வேடச்செனஞ்சிரிக்கவறியாதோ — என்னை
மீறிவள்ளிபோனதுந்தெரியாதோ — நமக்குப்
பெண்ணொன்றிருக்குதென்றுநினைத்தேனே — மகளே
பேசாமற்போகவிட்டுத்தனித்தேனே — அன்னம்
உண்ணாமற்பூரித்துநானிருந்தேனே — பேசாது
ஊமைகண்டகனாப்போலிருந்தேனே — இந்தப்
பாவிகள்வள்ளியின்பின்போனானோ — எந்தப்
பாதகன்கைவசத்திலானானோ — வள்ளிப்
பூவையின்பாங்கியர்நீரறிந்ததுண்டோ — சும்மாப்
பொய்பாமைச்சொல் பேசாதிருப்பதுண்டோ — இது

பொது-மேற்படி கண்ணிகள்.

ஒன்றுமானறியேனென்றோதினாளே — அப்போ
உத்தமாதுமங்கைமுட்டிமோதினாளே — மகளை

சென்றுதனியேபோனதெவ்வாறு அதைச்
சீக்கிரம்பார்ப்போமிப்போதனைவரும் என்று
நங்கைசொல்லவேநம்பிராஜனும் மக்கள்
நலமுடன்சொல்லவேதம்பிராசனும் அப்போ

விருத்தம்.

சாதியில்லாதவழக்குஞ் சொல்லும், சம்பவித்ததெனவேடர்சகல பேரும் மோதியபல்நெறநெறெனக்கடித்தமீசை முறுக்கிபிடையிறுக் கியேவண்டிருக்கிக்கொண்டு தீரமவிற்கணைகள் சமுகாடுதொட்டுச், சிறி வள்ளிதனை திருடுந்திருட்டுக்கள்ளப், பாதகனைப்பிடித்தொருமித்தடிப் போமென்று, பார்த்திட்டார் பதைத்துடலும்வேர்த்திட்டாரே.

இதுவுமது.

அடார்ந்தநம்பிராசன் சேனைகளோடேகி, அம்பேத்திவநங்கடந் து அடுத்தார்கூட, மடந்தையைக்கொண்டோடினவனிருப்பான்சுற்றி, வளையடாநம்மைப்போலோர்மநிதன்றானே, கடந்திடவும்விடுவோமோ மென்றெல்லோரும், கனவேனூட்டம்பார்த்தரவங்காதிம்கேட்டும். து டர்ந்துகள்ளவேலனைகண்டம்புமாறித், தொடுத்திட்டார்வள்ளிகண்டி டுக்கிட்டாளே.

வ-ம் இந்தப்பிரகாரம் நங்கைமோகினிந்துயில்நீங்கி வள்ளியம்ம னைக்காணமல் நம்பிராசனுக்குச்சொல்ல அப்போதுராஜனும் குறவர் களும்புத்திரர்களுஞ் சேனைசூழ்ந்த வள்ளியைக்கொண்டுசென்றகள்ள னைபிடிக்கவேண்டுமென்று காலடியைபிடித்துவந்து சோலையில்சுப்பி ரமணியரும் வள்ளியம்மனும் இருக்கிறதைக்கண்டு மெத்தஆரபாரத் துடன் கணைகள்தொடுக்க அப்போது வள்ளியம்மன்கண்டு சுப்பிரம ணியரிடஞ்சொல்லுகிறவிதங்காண்க.

வள்ளியம்மன் சுப்பிரமணியர்சொல்விருத்தம்.

எதிரேறிப்படைபெருக்கி யண்ணமார்கள், என்தகப்பன்அனை வோருமிங்கேவந்து, மதமீறிககணைதொடுத்துப்பொருதுவாரே, வல் லகுலதெய்வமென்று மதித்திட்டாரே, விதியொன்றும்வாராதுபுலம் பவேண்டா, மெல்லியேஎன்கையில் வேலிருக்க, பதறாதேநீயுமிப் போபெண்ணேவள்ளிப், பார்க்கிறேனெமலோகஞ் சேர்க்கிறேனே.

வள்ளியம்மன்-வசனம்.

சரணஞ்சரணம் என்பிராணநாதா இதோபார்த்தீரா என்தகப் பனும்என்னண்ணமார்களுஞ் சேனையுடன்வந்துஅம்புதொடுக்கின்று ர்கள்தாங்கள்குலதெய்வமென்று மனதில்நினைக்கமாட்டார்களே இதற் குநாம்என்னசெய்வோம் சுவாமி(சுப்பிரமணியர்-வ ம்) ஆனால்வாரும் பெண்ணேவள்ளி அப்படியாதொன்றும் வாராது நீபுலம்பவேண்டிய தில்லைஎன்கையில் சத்திவடிவேலிருக்குதல்லவோ அவர்களென்மேல் நெருங்கிவந்தால் அவர்களைஎனதுவேலாலெமலோகஞ் சேர்க்கிறேன் பாரும்பெண்ணே(வள்ளி வ ம்) ஆ-ஆ சுவாமி அப்படிச்செய்யலாமா

எனதுதகப்பனையும் அண்ணமார்களையும் கொல்லாமல் விடவேண்டும்பிராணநாதா(சுப்பிரமணியர் வ-ம்) ஆனால்கேளும்பெண்ணே படுகளத்திலொப்பாரியுண்டோ ஆகிலும்பார்ப்போம் பேசமலிரும் பெண்ணே.

பொது-வஞ்சி விருத்தம்.

இப்படிவேலர்செப்பியபோது
அப்புறம்வேடர் கொப்பெனச்சூழ்ந்தார்.

வ-ம் இந்தப்பிரகாரம் வேலாயுதக்கடவுள்வள்ளியம்மனுக்குமனத்திடஞ்சொல்லிக் கொண்டிருக்கும்போது அந்தசமயத்தில் வேடர்கள்வந்து சூழ்ந்தவிதமெப்படியென்றால்.

பொது-தாழிசை-விருத்தம்.

கைக்குளேவசந்திர்ப்பட்டானிங்கேகள்ளன்கானிவனென்னவே
கானகக்குன்றவிர்நம்பிராசனும வானைத்தாலியமீனைப்போல்
எக்கியேநடைமீறியேவந்து விற்கணைகளையேவியே
இவனைக்கொல்லவொருவன்யோது மேகமாய்ப்படைவேண்டுமோ
சிக்கிக்கொண்டபின்விடுவோமோ வென்றீரமாகியசண்டைகள்
செய்யவேகந்தசாமிசீறிந்திரிக்கைவேல்கொண்டெறிந்திடத்
தர்க்கம்பண்ணியவேடர்களும்நம்பிராஜனும்பட்டுருவியே
சாய்ந்துமாய்ந்துயிரோய்ந்து கானிற்றனித்தனியிறந்தார்களே.

விருத்தம்.

இகல்புரிந்தவேடரெல்லாஞ் சத்திவேலுக், கிறையாகப்போனதின்பின்னெதிரேநின்று, திகிரிதனைத்துளைக்கதிலோர் குகையுண்டாக்கிச்' செல்விவள்ளித்தன்னையதிச்சேர்க்கக்கண்டு' அசுமதனிற்றீராத்துடரையெண்ணி, அண்ணமார்தகப்பனைநினைத்தழுதுவாடி, மிகவருந்தியேங்கி மனந்தேம்பிவிம்பி, விழிகள்புனற்சொரியநொந்து விள்ளுவாளே.

வ-ம் இந்தப்பிரகாரம் சுப்பிரமணியரும் நம்பிராஜனும் அண்ணமார்களும் குறவர்களுஞ் சமர்செய்ய அந்தவேளையில் சுப்பிரமணியர்வேலாயுதங்கொண்டு யாவரையுஞ்சங்கரித்தவுடன் தாங்களிருந்தசோலைக்கெதிரில் நின்றமலையைத்துளைத்துக்குகையுண்டாக்கிவள்ளியம்மனை அதில்வைத்தபின் வள்ளியம்மன் தகப்பன் அண்ணமார் இறந்துபோனதைக்கண்டு பிரலாப்பிக்கிற விதமெப்படியென்றால்.

வள்ளியம்மன் புலம்பல் கண்ணிகள் இ-ம்சங்காபரணம் ஆதிதாளம்

என்னசெய்வேனெந்தனண்ணமாரே நீங்கள்
எந்தனுலேவுயிர்சிந்தினீரே
தன்னவரேஎந்தன்தகப்பனாரே நீரும்
சாந்தொட்டீரோ உயிரிழந்திட்டீரே
மடிந்தசேதிபெற்றவனைக்கேட்டால் வீணாய்

மாளுவாளேபதறிவிழுவாளே
உடன்பிறந்துஞ்சத்துருவாயிருந்தேன் நீங்கள்
ஒழிந்திட்டீரோவுயிராளழிந்திட்டீரோ
உங்கள்வலுவெல்லாமெங்கேபோச்சோ உடல்
ஓடியலாச்சோவிணையமடியலாச்சோ
தங்கையென்றசொல்லைமறந்திட்டீரோ இங்கே
தளர்ந்திட்டீரோவுயி ரிழந்திட்டீரோ.

நாரதர்வருகிறபோது விருத்தம்.

கற்பனைகாரணமுடிந்தக்கதைதனையெல்லாங் காணவந்தநாரதனு ங்கந்தவேளை, அற்புதமாய்க்கண்டுநமஸ் காரஞ்செய்தான் அன்னைவ ள்ளித்துயரமெல்லாமறிந்தானேதோ, உற்றவர்காள்வந்ததும் வேடர்க ளும்வந்துமற்பொருதிமாண்டதும் வகையாய்க்கூற, மகிழ்ந்திட்டான் குகனைமெள்ளப் புகழ்ந்திட்டானே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் புலம்பிக்கொண்டிருக்கும் போதுநாரதமுனிவர் சுப்பிரமணியரிடத்தில் வந்துகண்டு இங்கே நட ந்தகாரியங்களைக்கேட்டுச் சந்தோஷமடைந்து சொல்லுகிறவித மெப் படியென்றால்.

நாரதர்சொல்-விருத்தம்.

கைவடிவேல்நீலமயில் கந்தநாதா கானகத்தில்வள்ளிதனைக் கண் டாலங்கு, தெய்விதமாய்க்கலியாணஞ் செய்யாமன்னீர் திருவிளையாட் டுக்கோசிந்தைகூர்ந்து, மெய்வடிவம்பொய்வடிவாய்க் காட்டிவிணை ய்வேடருயிர்வேலினுக்கே யூட்டிச்சும்மா, மைவிழிமானையுங் குகையி லடைத்தீரிப்போ மாண்டவரையெழுப்பிவள்ளி மணஞ்செய்வீரே.

வ-ம். சரணஞ்சரணமையா கழுகாசலக்கந்தரே கானவரிடத்திற் போய் வள்ளியைமணஞ்செய்யாமல் செய்யுறுமாறிப்போய் வேடம்பூ ண்டுவேடர்களுயிரை விணைப்போகச் செய்பலாம், ஆனால்உம்முடை யதிருவிளையாடலை யாரறியப்போகிறார் இப்போது வேடர்களை யெழு ப்பிவள்ளிநாயகியை மணஞ்செய்துக்கொள்ளுங் கழுகாசலக்கடவுளே.

பொது-கண்ணிகள் இ-ம் சங்கராபரணம் அடதாளம்.

நாரதன்விண்ணப்பஞ்செய்திடுஞ் சேதிதெரிந்திட்டார் வள்ளி
நாயகியால்வேடுவர்க்குக்கருணைபுரிந்திட்டார்
வீரப்ரதாபசம்மாரகுமாரன் திரும்பினார் குற
வேடச்சிக்காய்ந்தவேடர்க்குதவவிரும்பினார்
மானேகுறமயிலேகிட்டநீ யிங்குவாவெனறார் உயிர்
மாயும்பிதாவண்ணன்மாரையெழுப்பிப் போமென்றார்
தேனேகுறவர்க்குயிர்கொடுத்தோ மின்னமித்தியம் இவர்
தேகமெல்லாம்வச்சிரதேகமடி யிதுசத்தியம்
துள்ளியவேடரெழுந்திருப்பாரடிபெண்மேனே எந்தன்

சொல்வழியாச்சென்றெழுப்பிடுவாயடிகண்ணே
வள்ளியுநான்செய்தபாக்கியந்தானென்று கும்பிட்டாள் விடை
வாங்கியேதந்தையண்ணரை யெழுப்பத்தெம்பிட்டாள்
ஊட்டிவளர்த்தஉயிர்த்துணையோ ரெழுந்திருங்கள் எனக்
குற்றதகப்பன்பின்சுற்றமெல்லா மெழுந்திருங்கள்
நாட்டிகமாகியவீரர்களேயென்று புகழ்ந்தாள் அந்த
க்ஷணத்தில்வேடரெல்லா மெழுந்தேதுள்ளிமகிழ்ந்தார்
தோத்திரம்வள்ளிதன்னைப்புகழ்ந்தெங்கள்தாயே பெருக்
துன்பந்தவிர்த்துயர்வு தந்தகுலதெய்வநீயே
நேத்ரமேஎன்னவேடனதை குட்டிப்பேசென்றான் சற்று
நிர்த்தனவேலர்முன்பாகவிட்டே யங்குநின்றாள்
அப்போதுசண்முகன் கெச்சையும்வாசையுஞ்சூட்டினான் சேவ
லாடமயிலாடதற் சொரூபங்காட்டினான்
ஒப்பியவேடுவரானந்தக்கூத்தாடிப்பணிந்தார் எங்கள்
உற்றகுலதெய்வசாமியென்றே சொல்லத்துணிந்தார்

நம்பிராஜனும் புத்திரர்சொல் விருத்தம்.

இப்படிவேடங்கொண்டு இவ்விடந்தன்னில்வள்ளி
ஒப்பினர்கூட்டிவந்த தொருவர்க்குந்தெரியாதையா
அப்பனேயுனதுசித்த மாரறிவார்கள்ஞானச்
சுப்ரமண்யரேயெங்கள் சொற்பிழைபொறுத்திடீரே.

இதுவுமது-விருத்தம்.

தனித்துவள்ளிதனைகூட்டிசுவாமியெங்கள் ஜாதிஜெனமறியாமற் றானேசென்றால், இனத்திலிகல் சொல்லுவதுஞ்சரிபோவையா இப்போதேசிற்றூருக்கெம்மைவேண்டி, மனத்தயவாய் வாதுகுலதேவரே நீர்வள்ளிதனைப்புவியறியமாலைசூட்ட, தொனித்திடவுங்கைபிடித்துக் கொடுப்போம்நாங்கள் சொற்படியேவாருமையா சுவாமிநீரே.

வ-ம் சரணஞ்சரணமையா சுவாமி சுப்பிரமணியக்கடவுளே நீர் உம்முடைய சுயரூபத்தைவிட்டு வேற்றுருவங்கொண்டுவள்ளியம்மனை ஒப்பும்படிசெய்துஇந்தக்கானகத்திற்கூட்டிவந்தீர் உம்முடையசித்தம் எங்கள்பாக்கியம் ஆனால்எங்கள் வள்ளியம்மனைத்தனித்து எங்கள்ஜாதிகளையறியாமல் கூட்டிவந்ததுசரியோ அதுசரியல்ல இப்போதுதாங்கள்சிற்றூருக்கு எங்கள்கூடவந்து யாவருமறியும்படியாக வள்ளியம்மனைமணஞ்செய்துக்கொண்டு போகலாம் சுவாமி.

சுப்பிரமணியர்சொல் கொச்சகம்

வாருமென்றுசொன்னநம்பி மாமனேகேளுமிப்போ
காரியந்தான்நன்றாச்சு கடுகெனவேபோவோம்நாம்
நாரதனேநீர்கூட நன்மைபெறுஞ்சிற்றூர்க்கு
ஏர்பெறவேவந்தால்நா னிசைந்துமணஞ்செய்வேனே.

வ-ம். கேளுமையா எனதுசொந்தமாமனுராகிய நம்பிமகாராஜனே ஆனால் உங்கள்மனதுபோல வள்ளிநாயகியை மணஞ்செய்யவருகிறேன் போவோம் வாருங்களையா ஆகோவாரும்நாரதனே நீரும் எனதுகூடவந்திருந்துவள்ளியைமணஞ்செய்துவைத்துப்போகலாம்வாரும் நாரதனே. (நாரதர் வசனம்) மகாசந்தோஷம் அப்படியே தங்கள் உத்தாரப்படி நடக்கவென்று காத்துக்கொண்டிருக்கிறேன் நல்லது போவோம் வாருஞ்சுப்பிரமணியக்கடவுளே.

சுப்பிரமணியர் சிற்றூர்போய்த் திருப்பரங்குன்றஞ்சேர்தல்

கண்ணிகள் இ-ம் ஆனந்தபைரவி ஆதிதாளம்.

வெள்ளியங்கிரியேநம்பியனேக்கு வடி
வேலர்வந்தனுகூலமாயிருந்தார்

வள்ளிமணாளன்வந்தான் வடிவேலன்வந்தான் என்று
மகிழ்ந்துவேடுவரெல்லாம் புகழ்ந்துநின்றார்

மாதுநங்கைமோகினிமகளுக்கேற்றிடுந் நல்ல
மாப்பிள்ளையென்றுதலை சாய்ப்புடன்நின்றாள்

ஜாதிஜனமறியசகலபூமியறிய கந்த
சாமிக்குவள்ளிதன்னை மேமகஞ்செய்ய

பெலமில்லையிவருக்கே பெண்கொடுக்கிறோம் என்று
பெருகிவேடர்புகழ்ந்தங் கருகில்வந்தார்

நீதமுடனேநம்பிராசனுந்துணைவரும் நல்ல
நேசமாகவேலரோடு பேசியிருந்தார்

நன்றாயிருப்பிலெந்த நாளுந்தழைப்பீர் என்று
நாதன்வேடர்க்கு வரம்போதங்கொடுத்தார்

குன்றுமல்வாழ்ந்திருங்கள் குறைவில்லையென்று சொல்லிக்
கோதைவள்ளியைமணம் பேசிமகிழ்ந்தார்

ஆறுதலந்தனிலே திருப்பரங்குன்றம் உண்டு
அன்பாயதிலேமணஞ் செய்யவுநன்று

கூறுகின்றோமென்று வடிவேலர்புகழ்ந்தார் அங்கே
குறைவரவேடர்களா மென்றுமகிழ்ந்தார்

செவ்வேள்நம்பிராசனுந் தீரமுறுங்குறவர் அப்போ
திருப்பரங்குன்றம்வந்து சேர்ந்துமகிழ்ந்தார்

ஒவ்வுமுகூர்த்தமும்பார்த் துயர்லக்னம்பார்த்து அங்கே
ஒருதிருமனையையுஞ் சிங்காரமுஞ்செய்தார்

வாழைக்கரும்புகண்ணாடி வர்ன்னப்படங்கள்சேர்தது மா
மதிபிரகாசமின்னக் காவணஞ்செய்தார்

சுப்பிரமணியர் திருமணத்திற்கு பரமசிவன்தேவர்கள்

வருகிற விருத்தம்.

சுகந்தபரிமளபனிறைந்துரத்னச் சொர்ணமயமான மணவறைசோடித்து, உகந்தபச்சைத்தோரணம் வீதியினிற்கட்டி உயர்திட்டிவான

வர்தேவேந்திரனுமற்ற, நாகுர்தனுநான் முகனுமுனிவர்களுஞ் சூழ்ந் தாராருகனுக்கு மணஞ்சூட்டமுகூர்த்தங்கண்டு, மகிழ்ந்துசிவன்பார்வ திசமேதராக் மான்மழுவுமேந்தியங்கு வருகின்றாரே.

வ-ம். அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் திருப்பரங்கிரி யில்சொர்னமயமான கலியாணமண்டபஞ்சோடித்து சுகந்தபரிமளவா டைகள்சாத்தி சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்கும் நல்லமுகூர்த்தம் வைத்திருக்க அதைஅறிந்து மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரகிம்புருட கெ ருடகாந்திருவர்முதலாய் சூழும்படியாய்ப் பார்வதிசமேதராக ஈஸ்வர ர்வருகிறவிதங்காண்க.

பரமசிவன் பார்வதி தேவர்கள்வருகிற தரு

இ-ம் மோகனம் ஆதிதாளம் பல்லவி.

சம்புசதாசிவன்வந்தார் வெள்விடையேறி
சம்புசதாசிவன்வந்தார்.

அநுபல்லவி.

அம்புமான்மழுவேந்தி அம்பிகையுடன்சேர்ந்து
சூரனவேள்கலியாணநாளென்
கடிமேன்மைவிசேடமாகிய (சம்)

சரணங்கள்.

தேவேந்திரன்முநிவோர் அரிநாரணன்
தேவியிந்திராணியனைவோர் புடைசூழ
சைவமாதர்கள்வாழ்த்த சரஸ்வதிபிரம்மதேவன்
தந்திமாமுகனுங்கணநாதரும்
வந்திதுவணங்கியசந்த்ரசடாதர (சம்)

தும்புருநாரதரும் சந்திரசூரியரும்
சுக்கிரபகவானும் தவஞ்செய்வோம்
கிம்புருடாதிபருங்கின்னரரனைவரும்
கீர்த்தியாகியகோசிகனும் வெகு
நேர்த்தியாகியகாசிபனும்வர (சம்)

முப்பத்துமுக்கோடி தேவர்களும்
முனிவர்களுங்கூடி ஒன்றாய்வந்து
சுப்பிரமணியர்வள்ளி தோகையிருவருக்குட்
சுந்தரமாகிய பந்தலிலேமண
முந்திகழச்செய வந்திருப்பரங்கிரி(சம்)

தெய்வானைக்கு விநாயகர் மணஞ்செய்திகூறல் விருத்தம்.

பரமனும்பார்வதியும் விண்ணோர்பதியுமாதும்
பங்கயனுஞ்சரஸ்வதியும்மாலுமாதும்
சரவணவேள்கந்தனுக்குக் குறப்பெண்வள்ளி
தன்னைமணஞ்சூட்ட விதூரமயமென்று

திருசிவனுங்கெஜமுகனையழைத்துநீபோய்த்
தெய்வானைதனைக்கூட்டி வாருமென்ன
விரவுடனேபோயவனு மணமுகூர்த்த
விதமெல்லாங்குஞ்சரிக்கு விளம்புவானே.

வ-ம் இந்தப்பிரகாரம் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாம்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் மும்மூர்த்திகளும் பரமசிவன்இவர்கள் திருப்பரங்குன்றம் வந்துசேர்ந்து சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்கு மணமுகூர்த்தவேளையென்று தெய்வயானையைக் கூட்டிவரும்படி விநாயகமூர்த்திக்குப் பரமசிவன் பார்வதிசொல்ல விநாயகமூர்த்தி தெய்வயானைக்குப்போய்சொல்லுகிற விதமெப்படியென்றால்.

விநாயகர் தெய்வானைக்குச்சொல் தரு இ-ம் தோடி அடதாளம்.

நன்மைநான் சொல்லக்கேளாய் தெய்வயானை
நன்மைநான்சொல்லக்கேளாய்
துன்மையில்லாமற்கந்தந் திருக்கலியாணஞ்செய்ய
உன்மனநோகாமலுகந்தழைத்திடவந்தேன் நன்

திரமாய்ப்பெண்ணென்றிருக்கத்திரும்பக்கலியாணஞ்செய்தால்
இரண்டுகொழுந்திவந்தா லெனக்குச்சந்தோஷம்பெண்ணே நன்

தேடிக்குறத்தியைக்கொண் டாடித்தம்பிமணஞ்செய்ய
வேடிக்கைசொல்லவென்றே நாடிச்சுறுக்கில்வந்தேன் நன்

மண்டலந்தனிலுயர் வகுத்தபிரமனுக்கும்
பண்டுவிதித்தவிதி ரெணடேகமனதாச்சே நன்

உன்னைப்பிரியேனென்று உரைத்திடுந்தம்பியின்று
பின்னொருத்தியைக்கொண்டால் பேசியிங்காவதென்ன. நன்

தெய்வானை கணபதிக்குச்சொல் விருத்தம்.

நாரதனால்முடிந்ததெனக்கணேசன்சொல்ல
நாயகிதெய்வானை மெத்தநாணிப்பேசும்
தாரமிதோநீரறியாப் பருவமுண்டோ
தருவனத்திற்குறத்திமயல்தாங்காதோடி
வீரமெல்லாமிழந்தவள்கா லடிமேல்வீழ்ந்த
விதந்தெரிந்துநாரதன் விளம்பலாமோ
காரமெல்லாமினியுரைத்தாற் சரியோவாரான்
கந்தர்மணங்காணவென்றே கழறினாளே.

தெய்வானைமனமிரங்கித் திருப்பரங்குன்றம்வருதல் விருத்தம்.

புத்தியென்றகணபதியே தெண்டமையா
போற்றிமனந்தேற்றிமெத்தப் புகழ்ந்தேனென்று
சத்திவடிவேல்வாங்கி மயின்மீதேறுஞ்
சாமிமனதிசைந்தபடி நடப்பேன்தங்கை
சித்ரவல்லிதன்னைமணஞ் செய்தெந்நாளுஞ்
சேர்ந்தொருவர்போலிருந்து வாழ்வேனையா

எத்திசையும்புகழ்ந் திருப்பரங்குன்றத்தில்
யெழுந்தருள்வோமிட்சணத்திலியல்பாய்த்தானே.

வ-ம் சரணஞ்சரணமைய்யா எனது அத்தானே இனியெத்தனை விதம்நினைந்தாலும் ஆவதெனனமுடியுங் காரியமுடிந்தேதீரும்என்பிராணநாயகர் மனதிற்நினைந்தபடி நங்கைவள்ளியை மணஞ்செய்து நாங்களிருவருமொருமனதாயிருக்கின்றோம் ஆகையால் திருப்பரங்குன்றம்போகலாம் வாரும்அத்தானே(கணபதிசொல் வ-ம்) நல்லது அப்படியேபோகலாம்வாராய் தெய்வானை.

(பொது-வ-ம்)இந்தப்பிரகாரம் தெய்வயானை அம்மனும் விநாயகமூர்த்தியும் கழுகுமலையிலிருந்துதிருப்பரங்குன்றத்தின்சபையில்வந்துசேர்ந்து பரமசிவன்பார்வதியை வந்தனஞ்செய்து யாவர்களு மனதுகந்துசுப்பிரமணியருக்கும் வள்ளியம்மனுக்கும் திருககலியாணசாதனம் நடக்கிறவிதம் எப்படியென்றால.

சுப்பிரமணியர் வள்ளியம்மனைத்திருக்கலியாணஞ்செய்யும்
தரு ௫-ம் கேதாரகௌளவம் ஆதிதாளம் பல்லவி.

திருக்கலியாணமுடித்தார்   கந்தர்வள்ளிக்கும்
திருக்கலியாணமுடித்தார்.

அநுபல்லவி.

மருக்கமழ்மலர்கொய்து   பெருக்கவிதானஞ்செய்து
மணவிபரத்தோடு   முறைமைநடத்தியே-திரு

சரணங்கள்.

சந்தனமரக்கால்நாட்டி   முன்னேயர
சாணிமணவரையிற்பூட்டி   மிகுப்ரகாச
அந்தபடிமுத்துப்பந்தல்   விதம்வகுத்து
ஆதனப்பீடமும்பொருந்தல்
இந்திரன்விண்ணோர்வேடம்   பந்துஜனங்கொண்டாட
இங்கிதமங்கையர்   மங்களமும்பாட-திரு
சந்தனத்தாற்றரைமெழுகிக்   கோலமிட்டுச்
சதிராய்முக்கோணமழகன்   ஒளிபொருந்த
வந்தனையாய்க்கணபதியை   நினைத்துவைத்து
வளரும்பரிதியைக்   கும்பநிறுத்திப்
பந்தனமாகவேதேங்   காயுடைத்துவாழைப்
பழமுந்தெட்சணைவைத்துபணிந்து   வேடர்சூழத்-திரு
சிந்தைமகிழ்ந்திடவும்வேடர்   செய்சாத்திரத்
திரமுடன்கொண்டாடக்   களிகூர்ந்து
செந்திருச்சேர்ந்திடும்வள்ளியும்   கந்தசாமியுஞ்
சேர்ந்துச்சுவணையிலும்   ஸ்தானம்பண்ணி
வர்துசபதநால்   முறையனுஷ்டானஞ்செய்து
மணவரைமீதில்வாக்   குணத்தேவர்மலர்பெய்து-திரு
வேதப்பிரமனும்வந்து   முறைப்படி
வேள்விவளர்த்தவுகந்து   சண்முகநூர்த்தமுஞ்

சாதகப்படியேயறிந்து சுபதினத்தில்
சாந்தியுஞ்செய்யத்துணிந்து அப்போதுயர்ந்த
கோதிலாப்பணியணிக் கோனெனும்வேலருக்கும்
குலவிடவேயணிந்து குமரன்வள்ளியருக்கும்-திரு

மிருதங்கமேளம் துத்தாரிக்கொம்பு
முழக்கிடவேகைத்தாளம் வாதயந்தொனியுந்
ஜெகமெங்குமிறைந்திடவே பேரிகைபூரிச்
சேரவுமுழங்கிடவே அந்தவேளையில்
அகமதுமகிழ்ச்சியா யனைவருங்கொண்டாடி
அரம்பையூர்வசிமாதர் அன்பாய்மங்களம்பாடி-திரு

ஈஸ்வரிருஞ்சிந்தைகூற ஈஸ்வரிமகிழ்ந்
தியாவருங்களிகூற முனிவர்தேவர்
ஆசீர்வாதங்கள்செய்ய அட்சதைதூவி
அருந்தவர்மனமுய்ய பொங்கமுடனே
தரசர்க்குதவுங்கந்தர் தாலியைக்கையெடுத்து
தார்பூண்டமங்கைவள்ளி தனகழுத்திற்றரித்து-திரு

அன்னநடையின்மேன்மை திலோர்த்தமை
ஆலாத்தியேர்திடவு மாலயன்வாழ்ந்த
வன்னவேடுவர்மகிழ இருபுறமும்
வாணரிருந்துபுகழ் அப்போதந்தக்
கன்னிவள்ளியைக்கந்தன் கைபிடித்தேயந்தக்
கல்யாணமண்டபங் களிப்புடன்சுற்றிசேர்ந்து-திரு

சுப்பிரமணியர்-மணக்கோலங்கொள்ளல்-விருத்தம்

கைபிடித்து மணமகிழ்ந்துவெகு சிங்காரக் கலியாணக்கோலமெ ல்லாங்கருணையோடு, செப்பியமாவலிமைபெருங்கந்தவேளுந் திரும்பி வந்துமொய்முறைச்சீர்செய்தபின்புமெய்ப்பொருசம்பூரணனைக்கண்டு கொண்டு விமலனும்பார்வதியும் விண்ணோர் திரளுஞ்சூழசுப்பிரமணியர்ம யிலேறிப்பவனிவந்தார் தோகையர்கள் சோபனம் சொல்லுவாரே.

வ-ம். அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் சுப்பிரமணியருக் கும் வள்ளியம்மனுக்குந் திருக்கலியாணமுடிந்தபின்வாகனரூடராய் மணக்கோலங் கொண்டு பவனிவரும்போது சுற்றிலுநெருங்கிய மங்க லப்பெண்கள் சோபனம்பாடுகிறவிதம் எப்படியென்றால்.

சோபனம்பாடுகிற-தரு-இ-ம்-ஆரபி-ரூபகதாளம்.

சோபனம்ஜெய சோபனம்ஜெய சோபனம்ஜெய சோபனம்.
பூபதிவேல யுதர்மணம்பொருந்தவெமிகச்சோபன சோப
ள்ளிதெய்வானையுடன்வாழ்வுபெறச்சோபனமே சோப
ளிமயிலவேலர்வள்ளிப்பொருந்தமிகச்சோபனமே சோப
னைதெய்வானைவள்ளி அனைந்திருக்கச்சோபனமே சோப
முடன்முருகனும்வள்ளி சேர்ந்திருக்கச்சோபனமே சோப

தேவர்கள் விருந்தருந்துதல்-விருத்தம்.

கந்தரும்வள்ளியும் புகழ்ந்துபவனிவந்து கருணைவாரிதிபொழிந்துகனம்பெற்றோங்க, இந்திரன்மாலயன் முனிவோர்சகலபேரும் இனிமையுடன்திருவுளப்ரகாசமனனம், பந்திவைத்துபடைத்துரசவர்ககங்கூட்டிப்பசிதீர்ந்து களிகூர்து பன்னீரத்தர், சந்தனஞ்சவ்வாதுதாம்பூலங்கொண்டு சாற்றினர் மிகத்தொழுது போற்றினரே.

தங்கள் தவஞ்சேர்தல்-விருத்தம்.

திருக்கழுகாசலங்கரந்தன்னிலேகந்தன தெய்வானைவள்ளியுடன்சேர்ந்தந்நாளில், உருக்கமுடன்தேவர்கள்யாவர்களுஞ்சேர்ந்துஉடனேதாலரவாதனபதியிற்சேரப், பெருக்கியமாணிடரிந்தச் சரிதைபாடப்பெருமையுடன் மங்களசோபனம் பெற்றோங்கதை, திருககலியாணச் சிறப்பைக்கேட்டபோர்க்கென்றுஞ் சித்திதந்துசெல்வமிகச்சேருந்தானே.

(பொதுவசனம்) அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்திருப்பரங்குன்றத்தில் மும்மூர்த்திகள்முதல் முப்பத்துமுக்கோடிதேவர்களும் கம்பி ரசனமுதலான பெயர்களும் குடியிருந்து சுப்பிரமணியக்கடவுளுக்குத் திருமணக்கோலஞ்செய்து அவரவர்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தபின் சுப்பிரமணியரும் வள்ளிதெய்வானை இவர்கள்தங்கள்கழுகாசலம்போய்ச்சேர்ந்து மங்களகரமாயிருக்கின்றார்கள்.

மங்களம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

மங்களமங்களமே ஜெயசுப மங்கள மங்கள மங்களமே

மங்களமைங்கரன்வல்லமைநாயகிக்கும்
துங்கவள்ளிதெய்வானை சுப்பிரமணியருக்கும் — மங்களம்
வாம்பாகசிவகாமிசோமசுந்தரர்க்கும்
பூமிதேவிமணவாளன் விண்டுவினுக்கும் — மங்களம்
முப்பத்துமுக்கோடி முனிவர்தேவர்புகழ்
தப்பிலாதுகலைவாணியெனுந்தாய்க்கும் — மங்களம்
இந்நாடகந்தனை இன்பமாய்க்கேட்போர்க்கும்
வண்மையாயனுதினம்வாசிப்பவர்க்கும் — மங்களம்
வள்ளியம்மைநாடகத்தை வாசித்திடுவோர்க்கு
புள்ளிமயிலோன்கிருபைப் பொருந்திவாழ்வார்தினம் — மங்களம்

வாழி விருத்தம்.

சத்திவடிவேல்வாழிச்சேவல்வாழி தாய்வள்ளிச்சரிதைதனைச்சதிராய்க்கூறும், முத்துவீரப்பகவிராசன் வாழிமுந்நூலுண்டாக்குவித்த முதலோர்வாழி, துதியமாய்ப்பூவுலகஞ் செழிக்கவாழி, தோகைவள்ளிதெய்வானைச்சுகமேவாழி, வந்துவாழ்தெனகழுகாசலமும் வாழிமயில்வாழிகுமரனிதம்வாழிதானே.

வள்ளியம்மைநாடகம்.

முற்றிற்று.